
கோகுலம்

GOKULAM

அக்டோபர் '88 ரூ. 3/-




nutrine
Assorted Cream
Chocolate Cream
Pineapple Cream
Elaichi Cream
Custard Cream
Orange Cream



கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

1988 அக்டோபர் மாத இதழ்
மலர் : 6 இதழ் : 9
தனிப்பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா



புகைப்படம்: எம். நடராஜன்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

'திருக்குறள்' ஒப்பற்ற நூல்; மிக உயர்ந்த நூல் என்று உலகமே போற்றுகிறது.

குறட்பாக்களைப் பேருந்துகளில் எழுதி வைத்திருக்கிறார்கள். பள்ளிச் சுவர்களில் தீட்டி வைத்திருக்கிறார்கள். சொற்பொழிவு செய்பவர்களெல்லாரும் திருக்குறளை மேற் கோள் காட்டிப் பேசுகிறார்கள். குறள் மாநாடு நடத்துகிறார்கள். குறளை வைத்துப் பட்டி மன்றங்களும், வழக்காடு மன்றங்களும் நடத்துகிறார்கள்.

திருக்குறளுக்கு ஏற்கெனவே பல உரைகள் இருந்தாலும், தற்கால அறிஞர்களும் விரிவுரை, விளக்கவுரை, தெளிவுரை, எனப் பல புத்தகங்களை எழுதித் தந்திருக்கிறார்கள். திருக்குறள் புத்தகமும் இலட்சக்கணக்கில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. இவை யாவும் மகிழ்ச்சி தரக்கூடியவை தான்.


ஆயினும், குறள் கூறும் நல்வழிகளை ஓரளவாவது பின்பற்றி நடப்பவர்கள் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருகிறதே! பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட ஒழுக்கம் கெட்டு, கொலை, கொள்ளை, லஞ்சம் போன்றவை நாளுக்கு நாள் அதிகமாகி நாடு மிகவும் மோசமாகி வருவது குறித்து நல்லவர்கள் பெரிதும் கவலைப் படுகிறார்கள்.

மாணவர்களாவது திருக்குறளைப் படித்து, கூடியவரை அதில் கூறப் பட்டுள்ள உயர்ந்த நெறிகளைக் கடைப்பிடித்தால் வருங்கால சமுதாயம் மேன்மை அடையுமென்ற நம்பிக்கை உள்ளது. இதற்காக ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு திட்டம் வகுக்கலாம்.

ஒவ்வோராண்டும் பள்ளியில் குறள் வழி நடக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டலாம். பரிசும் பாராட்டும் பெறுகின்ற மாணவர்களைப் பார்த்தாவது, 'நாமும் அவர்களைப் போல் நடக்க வேண்டும்; நம் நாட்டுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்' என்ற எண்ணம் தோன்றுமல்லவா?

அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்



ஜானகி மணாளன்



பி. வி. கிரி

பிருந்தாவனக் கவிஞர்கள்



மா. குமார்



பா. கணேசன்




இ. வெங்கடேசன்



மு. மணிவண்ணன்


பிருந்தாவனக் கதாசிரியர்கள்



டி. இரமேஷ்




இரா. சுமதி



எஸ். ராம்ஜி

வண்ண அட்டைப்படம்: கே. வி. ஆனந்த்



சத்தியம் பேசுதல் இவர் கொள்கை;
தருமம் காத்தல் இவர் கொள்கை;

இத்தலைமுறைகள் யாவர்க்கும்
இன்ப சுதந்திரம் இவர் கொள்கை.

மின்மினிக் கதைகள்



காசிக்கு எப்போது பயணம்!

மாமியாருக்கும் மருமகளுக்கும் தினமும் சண்டைதான்!

மருமகள் சொல்வது மாமியாருக்குப் பிடிக்காது. மாமியார் சொல்வது மருமகளுக்குப் பொறுக்காது. பிறகு, இருவரும் சமாதானம் ஆகிவிடுவார்கள். மறுபடியும் சண்டை தொடரும்.

மாமியார் சீரும் சிறப்புமாக வாழ்ந்தவள். தன்னுடைய ஒரே மகனுக்குத் திருமணமும் செய்து வைத்து விட்டாள். இனிமேல் வாழ வேண்டுமென்ற ஆசையும் இல்லை.

ஆனால், ஒரே ஒரு ஆசை! ஒரு பேரன் பிறக்க வேண்டும். அதையும் பார்த்து விட்டால், நிம்மதியாகச் செத்துப் போய்விடலாம் என்ற நினைப்பு அவளுக்கு.

ஒருநாள், மருமகளுடன் ஏற்பட்ட சண்டையில், ''பேரன் பிறக்கட்டும் என்று இருக்கிறேன். அவனைப் பார்த்து விட்டால், காசிக்குப் போய், அங்கேயே நிம்மதியாய்க் கண்ணை மூடிவிடுவேன்'' என்றாள் மாமியார்.

அவள் ஆசைப்படி, ஒரு பேரன் பிறந்தான். அவளுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அவனைத் தூக்கி வைத்துக் கொள்வது, மடியில் போட்டுக் குளிப்பாட்டுவது, உடை அணிவது, பொட்டு வைப்பது, கொஞ்சி மகிழ்வது—இப்படியாகப் பொழுது போவதே தெரியாமல், நாட்கள் போய்க் கொண்டிருந்தன மாமியாருக்கு.

ஒருநாள், மாமியார் பேரனுடன் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது, ''அத்தை! காசிக்குப் போவதாகச்சொன்னீர்களே?'' என்று சிரித்த படி கேட்டாள் மருமகள்.

''நான் சொன்னது உண்மைதான். இந்தப் பயல் ஓடி ஆடி விளையாடுவதை நான் கண்ணாரக் கண்டு களிக்க வேண்டாமா?'' என்றாள் மாமியார்.

பயலும் ஓடி ஆடி விளையாடினான் அவனுடைய விளையாட்டும் மழலை மொழிகளும் அவளைப் பூரிக்கச் செய்தன.

''அத்தை! எப்பொழுதுகாசிக்குப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள் மருமகள்.

''அருமைப் பேரனைப் பள்ளியில் சேர்த்து எப்படிப் படிக்கின்றான் என்று பார்க்க வேண்டாமா? அதற்குப் பிறகுதான்.'' என்றாள் மாமியார்.

நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் போனதே தெரிய வில்லை.

பேரன் படித்துப் பட்டதாரி ஆகிவிட்டான்!!

இப்பொழுது மருமகள் கேட்காமலேயே, ''பேரனுக்கு நல்ல வேலை கிடைக்கும். அதன் பிறகு....'' என்று தானாகவே சொன்னாள் மாமியார்.

பேரனுக்கு நல்ல வேலையும் கிடைத்து விட்டது.


''அத்தை!'' என்று ஆரம்பித்தாள் மருமகள்.

''அவனுக்குக் கலியாணம் நடைபெறட்டும். அதையும் பார்த்து விட்டு நான் புறப்படுகிறேன்'' என்றாள் மாமியார்.

அழகான புது மருமகள் வீட்டுக்கு வந்தாள்.

''என்ன அத்தை! எப்போது காசிக்குப் பயணம்?'' என்று கேட்டாள் சற்றுக் கடுமையாக.

''அடியே! இப்பொழுது நீயும் மாமியாராகி விட்டாய். இன்னும் சில நாட்களில், உன் மருமகளும் இந்தக் கேள்வியைத்தான் உன்னிடம் கேட்கப் போகிறாள். அதனால், நாம் இரண்டு பேருமே சேர்ந்து இப்பொழுதே காசிக்குப் போய்விடலாம், வா'' என்றாள் மாமியார்.



எங்கே போக முடியும்?

ஓர் அரசன், தன் குடிமக்களுக்கு வரிக்கு மேல் வரியாகப் போட்டு விட்டான்.

அதைத் தாங்க மாட்டாமல் ஏழை விவசாயி ஒருவன் அரசனிடம் வந்து முறையிட்டான்.

அரசன் சிறிதும் இரக்கம் இல்லாமல், வரிகளையெல்லாம் செலுத்

டியே தீரவேண்டும்'' என்று கண்டிப்பாகச் சொன்னான்.

''என்னிடம் எதுவுமே இல்லையே'' என்றான் விவசாயி.

''அப்படியானால், நீ என் நாட்டில் இருக்க வேண்டாம்.''

''பிறகு, நான் எங்கே போவது?''

''உனக்கு விருப்பமான இடத்துக்குப் போகலாம்.''

''நீங்களே சொல்லுங்கள். எனக்குச் சம்மதமானால் போகிறேன்.''

''சீரங்கப் பட்டணத்துக்குப் போ.''

''அங்கே போக மாட்டேன். அங்கே உங்கள் அண்ணன் ஆட்சி செய்கிறார்.''

''தஞ்சாவூருக்குப் போ.''


''அங்கேயும் போக மாட்டேன். அங்கே, உங்களுடைய சிற்றப்பா ஆளுகிறார்.''

''மைசூருக்குப் போ.''

''அங்கே உங்களுடைய மாமா இருக்கிறார்.''

அரசனுக்குக் கோபம் அதிகமாகி விட்டது. ''அப்படியானால் நரகத்துக்குப் போ, பிசாசே!'' என்றான் உரத்த குரலில்.

அதற்கு விவசாயி, ''அரசர் பெருமானே! அங்கேயும் நான் போவதற்கு இல்லை. ஏனென்றால், இறந்து போன உங்களுடைய தந்தை நிலையாக அங்கே இருக்கிறாரே!'' என்றான்.



கொழுக்கட்டையால் வந்த தொல்லை!

ஓர் ஊரில் ஒரு கணவனும் மனைவியும் இருந்தனர். அவர்கள் வயலில் கூலி வேலை பார்த்துப் பிழைப்பவர்கள்.

ஒரு நாள், இருவரும் வேலைக்குப் போகவில்லை. கொழுக்கட்டை செய்து சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.

அரிசியும் தேங்காயும் கணவன் வாங்கி வந்தான். மனைவி கொழுக்கட்டை தயாரித்தாள். ஆனால், சரியாக ஐந்து கொழுக்கட்டையே தேறியது.

''எனக்கு மூன்று, உனக்கு இரண்டு'' என்றான் கணவன்.

''இல்லை, உனக்கு இரண்டு, எனக்கு மூன்று'' என்றாள் மனைவி.

அதனால் இருவருக்கும் சச்சரவு உண்டாயிற்று. கடைசியில் இருவரும் ஒரு தீர்மானத்திற்கு வந்தனர்.

இருவரில் யார் அதிக நேரம் தூங்குகிறார்களோ, அவர்களுக்கு மூன்று கொழுக்கட்டை என்று முடிவு கட்டினர்.

இருவரும் தூங்க ஆரம்பித்தனர். பகலில் படுத்தவர்கள் மறுநாள்

காலையிலும் எழுந்திருக்கவில்லை.

அடுத்த வீட்டுக்காரர்கள், எதிர் வீட்டுக்காரர்கள் எல்லோரும் வந்து பார்த்தனர். கணவனும் மனைவியும் படுத்தபடியே கிடந்தனர். எழுப்பிப் பார்த்தார்கள். எழுந்திருக்கவே இல்லை. அதனால், அவர்கள் இருவரும் இறந்து விட்டதாகக் கருதினார்கள்.

அக்கம் பக்கத்தார் எல்லோரும் கூடி, பாடை கட்டி இருவரையும் மயானத் துக்குத் தூக்கிச் சென்றார்கள். சுடுகாட்டில் கொள்ளி வைக்கும் போது, "ஐயோ, சுடுதே!" என்று கத்திக் கொண்டு எழுந்தான் கணவன். அங்கே இருந்தவர்கள் பிணம் பேசுவதைப் பார்த்து, அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள்.

கணவனோ எழுந்து கொழுக்கட்டையைத் தின்பதற்காக ஓடினான்.

"எனக்கு மூன்று" என்று கூறிக் கொண்டே, மனைவி அவனைத் தொடர்ந்து ஓடினாள்.

அடுப்பின் மீது இருந்த கொழுக்கட்டைகளை அங்கே பூனை தின்று கொண்டிருந்தது.

— முல்லை பி. எல். முத்தையா தொகுத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் வெளியிட்டுள்ள 'தமிழகக் கிராமியக் கதைகள்' என்ற புத்தகத்திலிருந்து.

பசுவே, பசுவே, வா

பசுவே, பசுவே, வா வா வா.
பண்புப் பால் தர வா வா வா.

வெள்ளைப் பசுவே, வா வா வா.
வெற்றிப் பால் தர வா வா வா.

செவலைப் பசுவே, வா வா வா.
தித்திக்கும் பால் தர வா வா வா.

மயிலைப் பசுவே, வா வா வா.
மகிழ்ச்சிப் பால் தர வா வா வா.


காராம் பசுவே வா வா வா.
கருணைப் பால் தர வா வா வா.

— எம். வி. பாரதி, மொரப்பூர்.





சர்தார் வல்லபாய் பட்டேல்
தோற்றம் : 31-10-1875 மறைவு :15-12-1950



ஆர்.கே.சண்முகம் செட்டியார்

தோற்றம் : 17-10-1892 மறைவு : 5-5-1953



சர்தார் வல்லபாய் பட்டேல்

நம் தேச விடுதலைக்குப் பாடுபட்ட முக்கிய தலைவர்களில் வல்லபாய் பட்டேலும் ஒருவர். காந்தியடிகளின் வலக்கரமாக இருந்து பல இயக்கங்களை நடத்தியவர். ஆங்கில அரசாங்கத்தை அஞ்சாமல் எதிர்த்து நின்று 'சர்தார்' (தளபதி) என்று காந்திஜியால் பாராட்டப் பெற்றவர்.

இவருடைய தந்தை ஜாவேரிபாய் பட்டேல் ஓர் உழவர். அவரும் ஆங்கில அரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தவரே. இவரது மூத்த சகோதரர் வித்தல் பாய் பட்டேலும் விடுதலைப் போரில் பங்கு கொண்டு பல துன்பங்களை அனுபவித்தவர்.

பாரிஸ்டர் பட்டம் பெற்று, நிறையப் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்த இவர், மகாத்மா காந்தியின் கொள்கைகளால் கவரப்பட்டு, வக்கீல் தொழிலை விட்டுத் தேசத் தொண்டில் தீவிரமாக ஈடுபட்டார்.

நாடு விடுதலை பெற்றதும் நேருஜி பிரதமராகவும் வல்லபாய் பட்டேல் துணைப் பிரதமராகவும் பொறுப்பை ஏற்றனர். அப்போது நம் நாட்டில் 565 சுதேச சமஸ்தானங்கள் இருந்தன. அவை அனைத்தையும் இந்திய யூனியனுடன் சேர்த்த பெருமை இவருக்கு உண்டு.

ஆர். கே. சண்முகம் செட்டியார்




நம் நாடு விடுதலை பெற்றதும், இந்தியாவின் முதல் நிதி அமைச்சராக இருந்தவர் ஆர். கே. சண்முகம் செட்டியார்.

கோவையில் பிறந்த இவர், உலகம் அறிந்த பொருளாதார நிபுணராக விளங்கினார்.


இவர் பெரும் பெரும் பதவிகளை வகித்துள்ளார். மத்திய சட்டசபைத் தலைவராகவும், கொச்சி சமஸ்தானத் திவானாகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும், தமிழிசைச் சங்கத் தலைவராகவும் இருந்து, சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் பேசுவதிலும், எழுதுவதிலும் வல்லவர். சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்திற்கு இவர் எழுதியுள்ள உரை பல தமிழறிஞர்களாலும் பாராட்டப் பெற்றது.

பிரிட்டிஷ் அரசாங்கம் இவரது சேவையைப் பாராட்டி 'சர்' பட்டம் வழங்கியது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கியது. கோவையில் இவர் தம் தாயார் ஸ்ரீரங்கம்மாள் பெயரால் ஓர் உயர்நிலைப் பள்ளியை நிறுவினார்.



Malubi
Chocolate Crunch
பள்ளிக்கு செல்லும்
பேரனுக்கு மலூபி
வீட்டிலிருக்கும்
தாத்தாவுக்கும் மலூபி
ரூ 1
பேக்கிலும்
கிடைக்கும்
அனைத்து வயதினரும் விரும்புவது
மலூபி க்ரீம் வே:பர்ஸ்
CREAM WAFERS
MANUFACTURED BY
MALUBI FOOD PRODUCTS
JEEDI METLA, HYDERABAD-500 855.
MARKETED BY
marketokrats
A unit of vairam group
71, PILLAIYAR KOIL STREET,
MADRAS-600 005. Ph: 846064

காட்டிலே


அம்மாடியோவ்! எப்படியோ நீச்சல்போட்டியில் வெல்டு சாம்பியன் பட்டத்தை வாங்கிட்டேன்
நீச்சல் போட்டி
ஆண்டி என்னுடைய கைப்பிரம்பு எங்கே?
உங்கள் பேரன் ஹாக்கி விளையாடக் கொண்டு போயிருப்பான்
ஹாக்கி
அம்மா, விளையாடும்போது துரோபால் கழுத்திலே மாட்டிக்கொண்டது. எடுக்கமுடியவில்லை!
துரோ பால்
பெட் மெண்டனில் டைகர் ஜீங்க! உங்களுக்கே தோல்வியா? கொடுமை! கொடுமை!!
பேட் மெண்டன்

ஒலிம்பிக்

தஞ்சை மாலா—


நீ கேட்ட 'வாலிபால்' எல்லாக் கடைகளிலும் பார்த்தேன் ஒரு கடையில் கூட பாலுக்கு வாலே இல்லை! நான்...; நான் வாங்காமல் வந்துட்டேன்!
வாலிபால்
உன் மகன் ஒரேடியா தாண்டிக் குதிக்கிறானே!
அவன் பெரிய ஹை ஜம்ப் பிளேயராச்சே!
ஹை ஜம்ப்
போல் வால்ட்
இதனை யாவருக்கும் அறிவிப்பது யாதெனில் யானையார் அடித்த கிரிக்கெட் பந்து விண்வெளி வரை போய் பூமியைச் சுற்றிக் கொண்டு இருப்பதினால் பந்து பூமிக்குத் திரும்பி வரும் வரை கிரிக்கெட் மேச் ஒத்திவைக்கப் பட்டுள்ளது!
கிரிக்கெட்



ஆடு கத்தியது!

குழந்தைக் கவிஞர்

பள்ளிக் கூட நண்பன் ஒருவன்
பலத்தில் மிக்கவன்,
பக்குவமாய் காந்தி யிடத்தே
கூற லாயினன்:
"வெள்ளைக் காரன் நம்மை அடக்கி
ஆண்டு வருவதும்,
வீர மாகக் காரி யங்கள்
செய்து வருவதும்,

ஆட்டுக் கறியும், மாட்டுக் கறியும்
தின்ப தாலேதான்.
ஐய மில்லை. இதனை நீயும்
அறிந்து கொள்ளுவாய்.
நாட்டை விட்டே அவர்கள் தம்மை
ஓட்ட விரும்பினால்,
நாமும் நன்கு மாமி சத்தைத்
தின்ன வேண்டுமே.

ஒட்டி உலர்ந்த உனது தேகம்
உறுதி பெற்றிட
உண்ண வேண்டும் மாமி சத்தைத்
தினமும் நீயுமே.
தட்டிச் சொல்ல நினைக்கி றாயோ?
தயக்கம் ஏனடா?
தயவு செய்தே எனது சொல்லைக்
கேளடா" என்றான்.

"எங்கள் வீட்டில் எவரும் இறைச்சி
தின்ப தில்லையே.
இதற்கு நானும் இணங்கி னாலும்
என்ன பயனடா?
எங்கு வைத்து மாமி சத்தைத்
தின்று தீர்ப்பதோ?"
என்று காந்தி அவனைப் பார்த்துக்
கேட்க லாயினர்





"ஆற்றங் கரையை நோக்கி நாமும்
செல்ல லாமடா
அங்கு மறைவில் வைத்து நன்கு
தின்ன லாமடா.
நேர்த்தி யான பண்டம் ஆட்டு
இறைச்சி தானடா.
நிச்ச யம்நீ தின்ன வேண்டும்.
முடிவு கட்டடா."

திரும்பத் திரும்ப இதனை நண்பன்
கூறி வந்ததால்
திடம் இழந்து காந்தி முடிவில்
இணங்கி விட்டனர்.
மறுநாள் அந்த நண்பன் ஒற்றைக்
காகி தத்திலே
மறைத்து வைத்து மாமி சத்தை
எடுத்து வந்தனன்.

ஆற்றங் கரையை அடைந்து அவர்கள்
மறைவில் அமர்ந்தனர்.
ஆட்டுக் கறியின் துண்டம் ஒன்றை
நண்பன் கொடுத்தனன்.
நாற்றம் பிடித்த ஆட்டுக் கறியைக்
கண்ணை மூடியே,
'லபக்'கென் றுடனே வாயில் போட்டு
விழுங்கி விட்டனர்!

நண்பன் இதனைக் கண்டு மிகவும்
மகிழ்ச்சி கொண்டனன்;
நமது முயற்சி வென்ற தென்று
துள்ளிக் குதித்தனன்.
கண்ணை மூடி காந்தி இரவில்
தூங்கும் வேளையில்,
கனவு கண்டு மிகவும் நெஞ்சு
கலங்க லாயினர்.



வயிற்றுக் குள்ளே ஆடு வந்து
நிற்க லானது;
வாயை விட்டு 'மேமே' என்று
கதற லானது.
உயிரைக் கொன்றே ஊனைத் தின்னல்
தப்புத் தப்பென
உணர்ந்தார்; அதனை எண்ணி எண்ணி
உருக லாயினர்.

அடுத்த இதழில்...

என் குழந்தைப் பருவம்



குலபதி
டாக்டர் பாலகிருஷ்ண ஜோஷி

கோடை விடுமுறைப் போட்டி முடிவுகள்

ஆதிசங்கரரின் வாழ்க்கை வரலாறு

முதற்பரிசு: ஆர். வித்யா,
19, ராமன் தெரு,
சிட்லப்பாக்கம், சென்னை — 64.

2 — ஆம் பரிசு: ஏ. குமரிராஜன்,
25, ஹரித்திரா நதி, தென்கரை,
மன்னார்குடி — 614 012.

3 — ஆம் பரிசு: ப. கணேஷ்,
சங்கர் மேல்நிலைப் பள்ளி,
சங்ககிரி — மேற்கு.

ஆழ்வார் - நாயன்மார் வரலாறு — கவிதைகள்

முதற் பரிசு: க. அழகுதாசன்,
C — 19, பிரும்மபுத்திரா சாலை,
வட்டம் — 3, நெய்வேலி — 607 801.

2 — ஆம் பரிசு: இரா. வானவன்,
5/304, நாடார் தெரு,
பாளையம்பட்டி — 626 112.

3 — ஆம் பரிசு: இரா. வையகன்,
21, புருசோத்தமன் தெரு,
நந்தவனம் காம்பவுண்டு,
முத்துராணி, காரைக்குடி — 623 001.

ஓவியப் போட்டி

முதற் பரிசு: பி. விசாலாட்சி,
8 — வது வகுப்பு,
ஆனந்தராம், மெட்ரிகுலேஷன் பள்ளி,
ஆண்டையார் நகர், சென்னை — 24.

2 — ஆம் பரிசு: ஜி. எஸ். லலிதா,
16, C — 1, குவார்ட்டர்ஸ், சாகுபுரம்,
ஆறுமுகநேரி, — 628 202.

3 — ஆம் பரிசு: இரா. நாகசுப்பிரமணியம் (மணி),
எட்டாம் வகுப்பு,
E — 110, கெமிகல்ஸ் காலனி,
மேட்டூர் அணை — 2.

நடுவர்கள்: திருமதி கே. ஜெயலக்ஷ்மி, திரு. இரா. சுராஜ், ஓவியர் வர்ணம். வெற்றி பெற்றவர்கள், நடுவர்கள் புகைப்படங்களை அடுத்த இதழில் காணலாம்.

வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்

— பூதலூர் முத்து —

②

அரவிந்தன் பள்ளியின் நுழைவாயிலைக் கடந்து உள்ளே நுழைந்தான்.

போலீஸ்காரர்கள் இருவர் பள்ளி மைதானத்தில் நடமாடிக் கொண்டிருந்தார்கள். அதைக்கண்டு அவனுடைய இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது.

போலீஸ்காரர்கள் வருகிற அளவுக்குப் பள்ளியில் என்ன நடந்தது?

அவர்களைப் போன்றவர்கள் தம் பிள்ளைகளை அந்தப் பள்ளியில் சேர்க்க எத்தனையோ முறை வந்திருப்பது அவனுக்குத் தெரியும். ஆனால், அன்று அவர்கள் வந்திருப்பதன் காரணம்? தலைமை ஆசிரியரைப் பார்ப்பதற்குள் அவனுடைய உள்ளம் பரபரப்புக்கு உள்ளாகியது.

'அந்தப் போலீஸ்காரர்களைப் பார்த்துவிவரம்கேட்கலாமா?' என்று துடித்த அவனை 'வேண்டாம்' என்று அவனுடைய உள்ளமே எச்சரிக்கை செய்தது.

ஆனால், ஒரு போலீஸ்காரர், "தம்பி, இங்கே வா. இந்தப் பள்ளியில் படிக்கிறாயா? இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை விடுமுறை தானே? இங்கு என்ன வேலை உனக்கு?" என்று கேள்விச்சரம் தொடுத்தார்.

அரவிந்தன் அயர்ந்து விடவில்லை. "நான் இந்தப் பள்ளியின் அறிவியல் கழகத் தலைவன். தலைமை ஆசிரியர் என்னை அவசரமாக வரச்சொல்லி ஆள் அனுப்பியிருந்தார். அதனால் வந்தேன்" என்றான்.

போலீஸ்காரர் அமைதியாகி விட்டார். அவன் தலைமை ஆசிரியர் அறையை நோக்கிச் சென்றான்.

அந்த அறையில் முழு அமைதி நிலவியது. வாயிலில் போய் நின்றான். நிமிர்ந்து பார்த்த தமிழன்பன் "அரவிந்தனா.. உள்ளே வா" என்று அழைத்தார்.

எப்போதும் புன்னகை தவழும் அவருடைய முகத்தில் அப்போது கவலைக் கோடுகள் படர்ந்திருந்தன; இருக்கையில் மிடுக்காகக் காட்சியளிக்கும் அவர் அன்று சோர்ந்து போய் அமர்ந்திருந்தார்.

அவருடைய புன்னகையைப் பறித்துக் கொண்ட அந்த நிகழ்ச்சி



என்ன? அவருடைய உள்ளத்தில் சோர்வை உண்டாக்கிய அந்த விபரீதம் எது?

அரவிந்தன் ஊமையாக நின்று கொண்டிருந்தான். வேதனை அவனை வாட்டியது. உள்ளம் இனம் புரியாத குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது. என்னவென்று விவரம் தெரிந்திருந்தால் துணைக்கு நண்பர்களையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கலாம் என்று நினைத்தான் அவன். 'தலைமை ஆசிரியர் எண்ணம் என்னவென்று தெரியாமல் நாமாக அவர்களை அழைத்து வருவது கூடாது'' என்று தானே பதிலும் சொல்லிக் கொண்டான்.

தமிழன்பன் கண்ணாடியைக் கழற்றிக்கையில்வைத்துக்கொண்டு முகத்தைத் துடைத்தவாறு, "அரவிந்தன்! நம் பள்ளிக்குப் பெருமை தேடுகின்ற மாணவர்களுள் நீயும் ஒருவன். ஆசிரியர்களும் மாணவர்களும் கட்டிக்காத்த பெருமை இன்று சோதனைக்குள்ளாகியிருக்கிறது'' என்றார்.

''சார், என்ன நடந்தது? சொல்லுங்கள்'' அரவிந்தன் குரல் கம்மியிருந்தது.

அவர் பதிலேதும் சொல்லாமல் அவனை அழைத்துக் கொண்டு இயல்பியல் ஆய்வுக் கூடத்துக்கு நடந்தார்.


"அரவிந்தன், நீயே அந்தக் கொடுமையைப் பார்'' சுட்டிக்காட்டிய அவருடைய கண்கள் கலங்கி விட்டன.

அவன் அந்தக் காட்சியைக் கண்டான். அவனுடைய இதயம் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாயிற்று.

ஆய்வுக் கூடத்தின் பூட்டு உடைக்கப்பட்டுக் கதவு திறந்து கிடந்தது. பொருட்கள் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்தன.

'என்னென்ன பொருட்கள் களவு போய்விட்டனவோ தெரியவில்லையே' என்று குழம்பிய அரவிந்தன் பார்வையை அங்குமிங்கும் செலுத்தினான்.

தமிழன்பன் வேதனையோடு சொன்னார்: ''அரவிந்தன்! விலை உயர்ந்த காமிரா, பைனாகுலர், டெலஸ்கோப் எல்லாம் போய் விட்டன. வேறு சில சிறு பொருட்களும் போயிருக்கக் கூடும். நன்றாகப் பார்க்கவேண்டும். நம்பள்ளி வரலாற்றில் இந்த நிகழ்ச்சி ஒரு கறையை



ஏற்படுத்தி விட்டது.''

அரவிந்தனால் அதை நன்கு உணர முடிந்தது. காவலுக்கும் கட்டுப் பாட்டுக்கும் பெயர்போன அந்தப் பள்ளியில் இப்படி ஒரு திருட்டு நடந் திருக்கிறது என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்.

இது கற்பனையாக இருந்துவிடக் கூடாதா என்று அவன் நினைத்தான். நல்ல ஒரு காவல்காரர் இருந்தும்மா இந்த நிலை?

''காவல்காரர் மாணிக்கம் அப் போது பள்ளியில் இருந்தாரா சார்?''

''இருந்திருக்கிறார். சற்றுத் தூரத்தில் இருக்கிற புதிய கட்டடங் களையும், கட்டட வேலைக்குரிய பொருட்களையும் பார்த்துவர ஓர் அரை மணிநேரம் அங்கு போயிருக் கிறார். அப்போதுதான் இது நடந் திருக்க வேண்டும் என்று சொல்கி றார்.''

'அரைமணி நேரத்தில் இது நடந் திருக்கிறது என்றால் முன்கூட்டியே தகுந்த திட்டத்தை யாரோ தீட்டியிருக் கிறார்கள். எச்சரிக்கையோடு அதைச் செயல்படுத்தியிருக்கிறார்கள்.

பள்ளி மாணவர்களுக்கும் ஊர் மக்களுக்கும் பயன்படும் வகையில் அந்த ஆண்டு அறிவியல் கண்காட்சி ஒன்று நடத்த வேண்டும் என்று தமிழன்பனிடம் ஆர்வத்தோடு அவன் கூறியிருந்தான். அவரும் அதற்குச் சம்மதித்திருந்தார். அதற்கான திட்டம் ஒன்று தீட்டப்பெற்று அவரிடம் அளிக் கப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் இந்தத் திருட்டு நடந்து விட்டதே!

திருட்டுக்குக் காரணமானவர் களைக் கண்டு பிடிக்க வேண்டும்; பொருட்களை மீட்டுக் கொண்டுவர வேண்டும். இந்தச் செயல்களில் தனக்கும்தன் நண்பர்களுக்கும்மிகுந்த பொறுப்பு இருப்பதை அரவிந்தன் உணர்ந்தான்.

என்னென்ன பொருட்கள் போய் விட்டனவோ தெரியவில்லையே. விடுமுறை நாளாகையால் இயல்பியல் ஆசிரியர் தம் சொந்த ஊரான திருக் கோவிலூருக்குப் போயிருக்கிறாராம். தலைமை ஆசிரியர் அவருக்கும் செய்தி அனுப்பியிருக்கிறார். அவர் வந்த பின்னர்தான் முழுவிவரமும் தெரியும்.



வாயிலில் நின்றபடியே ஆய்வுக் கூடத்தை எட்டிப் பார்த்துக் கொண் டிருந்தான் அரவிந்தன்.

''அரவிந்தன், உள்ளே போய் விடாதே. கைரேகை நிபுணர்களுக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறோம். அவர்கள் வந்து ரேகைப் பதிவுகளை எடுத்துக்கொண்ட பின்னர்தான் நாம் உள்ளே செல்ல முடியும்.'' என்றார் தமிழன்பன்.

டெலஸ்கோப், பைனாகுலர், காமிரா போனது எப்படித் தெரிந்தது?

அவையெல்லாம் ஆய்வுக்கூடத்தின் முன்பகுதியில் ஒரு கண்ணடி அலமா ரியில் வைக்கப்பட்டிருந்தன. அந்த அலமாரி திறந்து போய் வெறுமை யாய்க் கிடந்ததைக் கண்டு விஷயத் தைப் புரிந்து கொண்டான் அரவிந்தன்.

தமிழன்பன் காவல்காரரை அழைத்தார். ''மாணிக்கம்! உனக்குப் பணி உயர்வு வரும் நேரத்தில் இந்த நிகழ்ச்சி நடந்துள்ளது. இனி நீ மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்'' என்று எச்சரித்தார்.

''மிகவும் கவனமாக இருக்கிறேன் சார்'' என்று பணிவோடு தெரிவித் தார் அவர்.

அரவிந்தனை அழைத்துக்கொண்டு தம்முடைய அறையை நோக்கி நடந்தார் தமிழன்பன்.

தம் இருக்கையில் அமர்ந்து ஏதோ



ஒரு குறிப்பை எழுதினார். நிமிர்ந்து அரவிந்தனைப் பார்த்தார். அவன் அமைதியாக நின்று கொண்டிருந்தான். அவருடைய வேதனையைக் குறைக்க ஏதாவது வழி கிடைக்காதா என்று சிந்தித்துக் கொண்டிருந்தான்.

பணிவாக அதே நேரத்தில் உறுதியாக அவரிடம் கூறினான்: ''சார்! நான், ராமு, பீட்டர், முகம்மது அலி எல்லாரும் முயன்று இந்தத் திருட்டுக்குக் காரணமானவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்கிறோம், சார்.''

அதைக் கேட்ட அவருடைய முகத்தில் ஓரளவு மலர்ச்சி தெரிந்தது.

''அரவிந்தன்! உன்னுடைய ஆர்வத்தைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். உன் நண்பர்களுடன் சேர்ந்து நீ செய்யும் முயற்சிகள் வெற்றியளிக்கட்டும்'' என்றவர் சற்றுநேரம் மௌனமாக இருந்தார்.

அவர் ஏன் மௌனமாக இருக்கிறார்? வேறு ஏதாவது சொல்ல நினைக்கிறாரா? சொன்னால் ரகசியத்தைக் காப்பாற்ற மாட்டான் என்று சந்தேகப்படுகிறாரா?

அவனுடைய சிந்தனைகள் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தன.

அவருடைய மௌனம் விடை பெற்றுக் கொண்டது.

''அரவிந்தன்! இந்தக் கடிதத்தைப் படித்துப்பார்!'' நயக்கத்தோடு அவனிடம் அதை நீட்டினார்.

அதை வாங்கும்போது அவனுடைய நெஞ்சம் பரபரப்படைந்தது; இமைகள் படபடத்தன. அவனுடைய நிலையை உணர்ந்து கொண்ட அவர், ''அந்தப் பலகையில் உட்கார்ந்து நிதானமாகப்படி'' என்றார்.

பலகையில் உட்கார்ந்து கொண்டான். பரபரப்பை அடக்கிக்கொண்டு படிக்கத் தொடங்கினான்.

''தலைமை ஆசிரியர் அவர்களுக்கு, சோதனைக் கூடத்தில் நடந்திருக்கிற இந்தத் திருட்டில் அறிவியல் கழகத் தலைவன் அரவிந்தனுக்கும் அவனுடைய கூட்டாளிகளுக்கும் முக்கியமான பங்கு உண்டு. அவன் பணக்கார வீட்டுப் பிள்ளை — திருடமாட்டான் என்று நினைக்காதீர்கள்; நம்பாதீர்கள். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறது என்று யார் கண்டார்கள்? போகப் போக உங்களுக்கு உண்மை தெரியும். அப்போது ஆச்சரி

யமும் ஏமாற்றமும் அடைவீர்கள்.

இப்படிக்கு,

உண்மை விளம்பி''

'உண்மை விளம்பி' எழுதியிருந்த சற்றும் உண்மையில்லாத அந்தக் கடிதத்தைப் படித்தபின் இதயதுடிப்பு வழக்கமான நிலைக்கு வந்தது. இப்படிப் பழி சுமத்துபவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க அறிவு துடித்தது.

''சார்! இன்று அஞ்சலகம் இல்லை. இந்தக்கடிதம் எப்படி வந்தது?'' என்று கேட்டான் அவன்.

''அரவிந்தன்! உன் சிந்திக்கும் திறனைப் பாராட்டுகிறேன். இந்தக் கடிதம் நம் பள்ளியின் வராந்தாவில் சுவரில் பதித்திருக்கிறோமே புகார்ப் பெட்டி, அதில் போடப் பட்டிருந்தது''

''இதைப் படித்தபின் என்ன செய்தீர்கள்?'' ''ஒரு வேளை வெளியார் இந்தக் கடிதத்தை எழுதியிருந்தால் கையெழுத்தை நாம் கண்டு பிடிக்க முடியாதல்லவா? அதனால் இந்தக் கடிதத்தின் நகலை காவல் நிலையத்தில் கொடுத்திருக்கிறேன், காவலர் உன்னை விசாரிக்க வந்தால் கவலை கொள்ள வேண்டாம். நீ கவனமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இதைத் தெரிவித்தேன். நாம் எல்லாரும் சேர்ந்து உண்மை எது என்று கண்டுபிடிப்போம்'' என்றார் தமிழன்பன்.

அந்தக் கடிதத்தைக் கண்ட பின்னாலும் சற்றும் நிலை குலையாமல் தன்மீது அழுத்தமான நம்பிக்கை வைத்திருக்கும் தலைமை ஆசிரியர் மீது அவனுக்கு இன்னும் மிகுதியான மதிப்பு ஏற்பட்டது.

'அந்த நம்பிக்கையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே!'' பெருமூச்சு ஒன்று அவனிடமிருந்து வெளிப்பட்டது.

அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட அவன் நேராக ராமுவின் வீட்டிற்குச் சென்றான்.

அங்கு பீட்டரும், முகமது அலியும், பகத்தும் இருந்தனர்.

தலைமை ஆசிரியர் அரவிந்தனை ஏன் கூப்பிட்டு அனுப்பினார் என்று அறிந்து கொள்ள எல்லாரும் ஆவலாக இருந்தனர் அவன் சொன்ன செய்தியைக் கேட்டு அவர்கள் மிகுந்த அதிர்ச்சியடைந்தார்கள்.

அலிக்கு ஆவேசமாக இருந்தது.

''ஒரே கல்லில் இரண்டு மாங்காயை அடித்திருக்கிறார்கள். திருடியது மட்டுமில்லாமல் நம் மீது வீணான பழியையும் சுமத்தியிருக்கிறார்கள்'' என்றான்.

''நாம் யாருக்கும் கெடுதல் செய்யவில்லையே, நம்மை ஏன் குறிப்பிட்டிருக்கிறார்கள்?'' என்றான் பீட்டர்.

''நாம் யாருக்கும் கெடுதல் செய்யவில்லை என்பது உண்மைதான். நம் மீது பொறாமை கொண்டவர்கள் அதன் விளைவாக இப்படி எழுதியிருக்கலாம் அல்லவா?'' என்றான் ராமு.

அரவிந்தன் கேட்டான்: ''அவர்கள் பொறாமை கொள்ளும்படி அப்படி நாம் என்ன செய்தோம்?''

முகமது அலி விளக்கம் கொடுத்தான்: ''தொடர்ந்து நாம் நன்றாகப் படித்து வருகிறோம். இலக்கியம், கலை, அறிவியல் போட்டிகளில் பரிசுகள் பெறுகிறோம். தோட்டம் போடுகிறோம், கண்காட்சிகள் நடத்துகிறோம். தலைமை ஆசிரியரிடமும் ஆசிரியர்களிடமும் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறோம். இதைக்கண்டு எரிச்சல் அடைந்த யாரோ இப்படிச் செய்திருக்கிறார்கள்.''

''அவர்கள் யார் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது'' என்றான் ராமு.

''எப்படிக் கண்டுபிடிப்பது? சிரமமாக இருக்குமே!'' என்றான் பகத்.

''நாம் பள்ளியிலும் வெளியிடங்களிலும் விழிப்பாக இருப்போம். அவர்கள் யார் என்பதைக் கண்டு பிடிப்போம். இனி ஒவ்வொரு நாளும் நமக்குக் கடுமையான வேலைகள் இருக்கும்; அயர்ந்துவிடக்கூடாது''

அரவிந்தனின் சொற்களில் ஒரு வேகம் இருந்தது.

(தொடரும்)



டாக்டர் பக்கம்

உங்கள் உணவு முறைகள் எப்படி இருக்க வேண்டும்?

டாக்டர் கு. கணேசன்—

ரமேஷும் சுரேஷும் சகோதரர்கள். ரமேஷ் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறான். சுரேஷ் ஏழாம் வகுப்பில் படிக்கிறான்.

இருவரில் ரமேஷ் நல்ல பையன். படிக்க வேண்டிய நேரத்தில் படிப்பான்; விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடுவான்; சாப்பிட வேண்டிய நேரத்தில் சாப்பிடுவான்; ஓய்வு எடுக்க வேண்டிய நேரத்தில் நன்கு ஓய்வு எடுத்துக் கொள்வான். ரமேஷுக்கு, தன் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் அதிக அக்கறை உண்டு. அதனால் சத்துள்ள உணவுகளை உட்கொண்டு, அளவான உடற்பயிற்சிகளை மேற்கொண்டு உடம்பை ஆரோக்கியமாக வைத்திருந்தான்.

ஆனால், சுரேஷ் அப்படியில்லை. அவன் ஒரு விளையாட்டுப் பிள்ளை. படிக்க வேண்டிய நேரத்தில் விளையாடிக் கொண்டிருப்பான்; சாப்பிட வேண்டிய நேரத்தில் உறங்கிக் கொண்டிருப்பான்; அப்படியே அவன் சாப்பிட்டாலும் பால், பழம், முட்டை போன்ற சத்துள்ள உணவுகளை ஒதுக்கி விட்டு, சாக்லேட், மிட்டாய், குச்சி ஐஸ் போன்ற சத்து இல்லாத தின்பண்டங்களையே அதிகமாக விரும்பி உண்பான். அதனால், அவன் உடல் நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே வந்தது. அதைப் பற்றி சுரேஷ் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், அவன் பெற்றோர்கள் பெரிதும் கவலைப்பட்டார்கள்.

ஒரு முறை நான் அவர்கள் வீட்டிற்கு விருந்துண்ணச் சென்ற போது சுரேஷைப் பற்றி வருத்தப்பட்டுச் சொன்னார்கள், அவன் பெற்றோர்கள். அப்போது எங்களுக்குள் நடந்த உரையாடலை இங்கே தரட்டுமா?

சுரேஷின் அம்மா: டாக்டர், எங்களுக்கு சுரேஷைப் பற்றித்தான் ரொம்ப கவலையாக இருக்கிறது....அவன் சரியாகவே சாப்பிட மாட்டேன் என்கிறான். கேட்டால் பசியில்லை என்கிறான். பெரும்பாலும் நொறுக்குத் தீனிகளையே விரும்பிச் சாப்பிடுகிறான். சத்துள்ள உணவுகளை அறவே ஒதுக்கி விடுகிறான். நாங்களும் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டோம். அவன் கேட்பதாயில்லை. நீங்களாவது அவனுக்கு எடுத்துச் சொல்லுங்கள், டாக்டர்!

நான்: என்ன சுரேஷ், அம்மா சொல்வதெல்லாம் உண்மையா? நீ சரியாகச் சாப்பிடுவதில்லையா?

சுரேஷ்: இல்லை டாக்டர். நான் நன்றாகத்தான் சாப்பிடுகிறேன். அம்மா சும்மா சொல்கிறாள்.

ரமேஷ்: (குறுக்கிட்டு) சுரேஷ் பொய் சொல்கிறான், டாக்டர். அவன் நன்றாகச் சாப்பிட்டு நான் பார்த்ததேயில்லை. அப்படியே சாப்பிட்டாலும் பால், முட்டை, காய்கறிகளைத் தொடவே மாட்டான். வெறும் சாதத்தோடு முடித்துக் கொள்வான்.

நான்: அடடே... அது முற்றிலும் தவறான பழக்கமாயிற்றே! (சுரேஷ் பக்கம் திரும்பி) என்ன சுரேஷ், வழக்கமாக, காலையில் நீ என்ன டிபன் சாப்பிடுவாய்?

சுரேஷ்: காலையில் எழுந்ததும் காப்பி சாப்பிடுவேன். பிறகு ரசம்

சாதம் சாப்பிடுவேன்.

நான்: மதியம்?

சுரேஷ்: மோர்ச் சாதம்.

நான்: இரவில்?

சுரேஷ்: இட்லி அல்லது தோசை.

நான்: பள்ளியில் இடைவேளை நேரங்களில் ஏதாவது சாப்பிடுவாயா?

சுரேஷ்: ஆமாம் டாக்டர்! வீதியில் விற்கும் மிட்டாய், சாக்லேட், ஜவ்வு மிட்டாய், குச்சி ஐஸ் போன்றவற்றைச் சாப்பிடுவேன்.

நான்: சரி, ரமேஷ்! நீ வழக்கமாகச் சாப்பிடும் உணவுகளைச் சொல், பார்ப்போம்.


ரமேஷ்: காலையில் எழுந்ததும் பால் சாப்பிடுவேன், பள்ளிக்குப் புறப்படும் போது இட்லி, சட்னி, சாம்பார் சாப்பிட்டுவிட்டு மீண்டும் ஒரு முறை பால் சாப்பிடுவேன். மதியம் பருப்புச் சாதமும் தயிர்ச் சாதமும் சாப்பிடுவேன். மதியச் சாப்பாட்டில் தினமும் ஒரு காய்கறி நிச்சயம் இருக்கும். இரவில் தோசை, சப்பாத்தி அல்லது பூரி சாப்பிடுவேன். பள்ளி இடைவேளை நேரங்களில் கடலை மிட்டாய், திராட்சை, ஆரஞ்ச், மாம்பழம் போன்றவற்றில் ஏதாவது ஒன்றைக் கடையில் வாங்கிச் சாப்பிடுவேன். இரவில் படுக்கப் போகும்போது ஒரு தம்ளர் பாலும் ஒரு வாழைப்பழமும் கண்டிப்பாகச் சாப்பிடுவேன்.

நான்: வெரிகுட் ரமேஷ்! சுரேஷ், பார்த்தாயா...? உனக்கும் உன் அண்ணனுக்கும் உள்ள வித்தியாசத்தை! ரமேஷ் சத்துள்ள உணவுகளையே உண்பதால், அவன் உடல் ஆரோக்கியமாக இருக்கிறது. ஆனால், நீயோ சத்து இல்லாத சக்கை உணவுகளையே உண்பதால் உன் உடல் மெலிந்திருக்கிறது...

சுரேஷின் அப்பா: சொல்லுங்கள் டாக்டர்... நன்றாகச் சொல்லுங்கள். அப்போதாவது அவனுக்குப் புத்தி வரட்டும்.

சுரேஷ்: சத்துள்ள உணவு என்றால் என்ன, டாக்டர்?

நான்: அப்படிக் கேள், சொல்கிறேன். நம் உடம்பின் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் சில சத்துக்கள் தேவைப்படுகின்றன. புரோட்டீன், கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின்கள், தாதுப் பொருட்



கள் என்பவையே அந்தச் சத்துப் பொருட்கள். நாம் அன்றாடம் சாப்பிடும் உணவில் இந்தச் சத்துக்கள் அவசியம் இருக்க வேண்டும். அவ்வாறு இச்சத்துக்கள் எல்லாமே நிறைந்த உணவைத்தான் 'சத்துள்ள உணவு' என்கிறோம்.

சுரேஷ்: இந்தச் சத்துக்கள் எல்லாம் எந்தெந்த உணவில் உள்ளன, டாக்டர்? அதையும் எனக்குச் சொல்லுங்களேன்.


நான்: அவசியம் சொல்கிறேன், கேள்: அரிசி, கோதுமை, கேழ்வரகு, கம்பு, சோளம் போன்ற தானிய வகைகளில் கார்போஹைட்ரேட் சத்து அதிகமாக உள்ளது. உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, சீனிக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளிலும் கார்போஹைட்ரேட் சத்து நிறைய உள்ளது.

ரமேஷ்: புரோட்டீன் சத்து எதில் உள்ளது டாக்டர்?

நான்: துவரை, உளுந்து, நிலக்கடலை, பட்டாணி போன்ற பருப்பு வகைகளிலும், பால், முட்டை, மீன், இறைச்சி போன்றவற்றிலும் புரோட்டீன் சத்து அதிகமாக உள்ளது.

சுரேஷ்: கொழுப்புச் சத்து?

நான்: எண்ணெய், வெண்ணெய், நெய், முட்டையின் மஞ்சள் கரு ஆகியவற்றில் கொழுப்புச் சத்து நிறைய உள்ளது.



"நான் சொன்ன ஜோக் உனக்கு ரொம்பப் பிடிச்சிருக்குன்னு நினைக்கறேன். அதான் அப்படி விழுந்து, விழுந்து சிரிக்கறே...."

"அதில்லை. நீ எனக்கு அப்பப்ப சாக்லேட் வாங்கிக் கொடுக்கறியே, நான் சிரிக்காமேயிருந்தா நல்லாயிருக்குமா?"

— குமார்.

சுரேஷின் அம்மா: கீரைகளில் வைட்டமின் சத்து அதிகமாக உள்ளது, இல்லையா, டாக்டர்?

நான்: ஆமாம். எல்லா வகையான கீரை வகைகளிலும் காரட், பீட்ரூட், வெண்டைக்காய், முருங்கைக்காய், எலுமிச்சை, நெல்லிக்காய் போன்ற காய்கறிகளிலும், ஆரஞ்ச், ஆப்பிள், திராட்சை, பேரீச்சை, தக்காளி, போன்ற பழ வகைகளிலும் வைட்டமின் சத்துக்களும் தாதுப் பொருட்களும் அடங்கியுள்ளன.

ரமேஷ்: அப்படியென்றால் இந்தச் சத்து நிறைந்த உணவுகளை எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாமா, டாக்டர்?

நான்: இல்லை, ரமேஷ்! எதற்கும் ஒரு அளவுகோல் உண்டு.


நாம் தினமும் சாப்பிடும் உணவில் ஏற்கெனவே சொன்ன எல்லாச் சத்துக்களும் அடங்கியிருப்பது அவசியம். அதற்குத் தினமும் நம் உணவில் ஒரு தானிய வகை, ஒரு பருப்பு வகை, ஒரு காய்கறி, ஒரு கீரை வகை, பால், ஒரு பழம்... இப்படிச் சேர்த்துக் கொண்டால், நமக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் நிறைந்த ஒரு 'சரிவிகித உணவு' கிடைத்துவிடும். சத்து நிறைய இருக்கிறது என்பதற்காக, பழங்களை மட்டுமே அதிகமாகவோ, காய்கறிகளை மட்டுமே அதிகமாகவோ சாப்பிட்டால் அஜீரணக் கோளாறு வந்துவிடும்!

சுரேஷ்: சரி டாக்டர்... ஒரு நாளைக்கு எத்தனை முறை சாப்பிடலாம்? என் அண்ணன் அடிக்கடி சாப்பிடுகிறானே, அப்படிச் சாப்பிடலாமா?

நான்: பொதுவாக ஒரு நாளைக்கு காலை, மதியம், இரவு என மூன்று வேளை சாப்பிடுவதே மரபு. ஆனால், உங்களைப் போன்ற வளரும் சிறுவர்கள் ஒரு நாளைக்கு நான்கு முறை சாப்பிடலாம்.

ரமேஷ்: என்ன டாக்டர், சாப்பிடுவதற்கும் ஒரு நேரம் காலம் உண்டல்லவா? தம்பி சுரேஷ் இஷ்டப்பட்ட நேரத்தில் உணவு கேட்பான், அது தவறுதானே?

நான்: நிச்சயமாக அது தவறுதான். ஒவ்வொருவரும் தினமும்



குறிப்பிட்ட நேரத்தில் சாப்பிடும் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நம் உடலில் உள்ள ஜீரண உறுப்புகள் உண்ணும் உணவை ஜீரணிக்கத் தயாராக இருக்கும். இஷ்டப்பட்ட நேரத்தில் சாப்பிட ஆரம்பித்தால், பசியும் இருக்காது; ஜீரணமும் சரியாக நடக்காது. பொதுவாகவே, வயிறு பசித்த பின் உணவு உண்பதுதான் நல்லது.

சுரேஷின் அம்மா: சாப்பிடும் போது நிதானமாகச் சாப்பிடுவது தானே நல்லது, டாக்டர்? எங்கள் சுரேஷ் எப்போதும் அவசர அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டு ஓடிவிடுவான், டாக்டர். அதுவும் தவறுதானே?

நான்: ஆமாம், எப்போது எதைச் சாப்பிட்டாலும் நிறுத்தி நிதானமாகச் சாப்பிடுவதுதான் நல்லது. ஏனென்றால், நம் உணவு ஜீரணமாகும் இடங்கள் நான்கு. வாய், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் ஆகியவையே அந்த இடங்கள். வாயில் ஊறும் உமிழ் நீரில் நம் உணவை ஜீரணிக்கக்கூடிய ஜீரண நீர்கள் உள்ளன. உணவை நன்கு மென்று, சுவைத்து, நிதானமாகச் சாப்பிட்டால்தான் உமிழ் நீரில் உள்ள ஜீரண நீர்கள் உணவில் கலந்து ஜீரணம் செவ்வனே நடைபெற உதவியாக இருக்கும். சில சமயம் உணவு சூடாக இருந்தாலோ, அல்லது காரம் அதிகமாக இருந்தாலோ உணவைச் சாப்பிடச் சரியாக மெல்லாமல் அவசர அவசரமாக விழுங்கி விடுவீர்கள், இல்லையா? அம்மாதிரி உணவுக்கள் அஜீரணத்திற்கு அடிகோலும். அதுமட்டுமில்லாமல், அவ்வுணவில் உள்ள சத்துக்கள் நம் உடம்பில் சேர்வதற்கும் வாய்ப்பில்லை. ஆக, நமக்கு இரட்டிப்பு நஷ்டம்!

ரமேஷ்: டாக்டர்! இன்னொரு சந்தேகம். எங்கள் அப்பா புத்தகத்தைப் படித்துக் கொண்டே சாப்பிடுவார். அம்மாவோ டி. வி. யைப் பார்த்துக் கொண்டே சாப்பிடுவார். இதெல்லாம் தவறான பழக்கங்கள் என்பதை எங்கோ படித்திருக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

நான்: நாம் உண்ணும் போது நம் கவனம் முழுவதும் உணவில்தான் இருக்க வேண்டும். புத்தகத்தைப் படித்துக் கொண்டோ, வானொலியைக் கேட்டுக் கொண்டோ, டீ. வி. யைப் பார்த்துக் கொண்டோ அல்லது விவாதம் செய்து கொண்டோ உணவு உண்ணக் கூடாது. நம் கவனம் மற்றவற்றில் இருக்கும் போது, ஜீரண உறுப்புக்கள் சரிவர வேலை செய்வதில்லை. அதனால் பாதி சாப்பிடும் போதே வயிறு நிரம்பி விட்டது போல் பொய்த் தோற்றம் தெரியும். நாமும் உண்பதை நிறுத்தி விடுவோம். இதனால், உண்மையிலேயே உடலுக்குத் தேவையான சத்துணவு கிடைக்காமல் போய்விடும். இன்னும் சொல்லப் போனால் கோபம், வருத்தம், பயம் போன்ற உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டிருக்கும்போதும், அதிக களைப்புடன் வந்திருக்கும் போதும், பள்ளியிலிருந்து திரும்பிய வேகத்திலும் சாப்பிடக் கூடாது. சுமார் பத்து நிமிடங்கள் நம் களைப்புத் தீர ஓய்வெடுத்த பின்பு, மன நிலை முழுவதும் உணவில் லயிக்கும் பட்சத்தில் உணவு உண்ண ஆரம்பிக்கலாம். சந்தோஷத்துடன் சாப்பிடுவது எப்போதும் நல்லது.

சுரேஷின் அப்பா: ஆமாம் டாக்டர், சுரேஷ் ரொம்பவும் இனிப்புப் பண்டங்களையே விரும்பிச் சாப்பிடுகிறானே, அது உடம்புக்குக் கெடுதல் இல்லையா?

நான்: அளவோடு இனிப்பு சாப்பிட்டால் தவறில்லை. அதற்காக இனிப்புப் பண்டங்கள்தான் உணவு என்று வைத்துக்கொள்ளக்கூடாது. காரணம் என்னவென்றால், இனிப்புப் பண்டங்களைச் சிறிது சாப்பிட்டு விட்டாலும் பசி மறைந்து போகும். இதனால், அடுத்துச் சாப்பிட வேண்டிய சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிட இயலாது. அது நமக்கு நஷ்டம்தானே?

ரமேஷ்: இனிப்பு அதிகமாகச் சாப்பிட்டால் சர்க்கரை வியாதி வரும் என்று சொல்கிறார்களே டாக்டர்? அது உண்மையா?

நான்: உண்மையில்லை. இனிப்பு அதிகமாகச் சாப்பிட்டால் சர்க்கரை வியாதி வரும் என்று கூறுவதில் உண்மையில்லை. ஆனால், ஏற்கெனவே சர்க்கரை வியாதி உள்ளவர்கள் இனிப்பு சாப்பிடக் கூடாது என்று கூறுவதுதான் சரி.

சுரேஷ்: பொதுவாக எங்கள் வீட்டில் காரமும் புளிப்பும் சாப்பாட்டில் அதிகமாக இருக்கும். அது நல்லதா, கெடுதலா டாக்டர்?

நான்: உணவில் காரம் அதிகமாக இருந்தாலும், புளிப்பு அதிகமாக இருந்தாலும் 'வயிற்றுப் புண்' (Peptic Ulcer) வர வாய்ப்புண்டு. எனவே, காரத்தையும் புளிப்பையும் ஓர் அளவோடு வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

ரமேஷ்: அதே மாதிரி காப்பி சாப்பிடுவது நல்லதா? பால் சாப்பிடுவது நல்லதா, டாக்டர்?

நான்: இதிலென்ன சந்தேகம். பால் சாப்பிடுவதுதான் உடம்புக்கு நல்லது. காப்பியில் உள்ள 'கஃபீன்' என்ற நஞ்சு நம் உடல் நரம்புகளைத் தளர்ச்சியடையச் செய்யும். எனவே, காப்பிக்குப் பதிலாகப் பால் சாப்பிடுவதே முறை.

சுரேஷின் அம்மா: சாப்பிடும் போது தண்ணீர் எவ்வளவு அவசியம் என்பதைச் சொல்லவில்லையே, டாக்டர்?

நான்: சரி, அதைப்பற்றியும் சொல்கிறேன். நம் உடம்புக்குச் சத்துள்ள உணவு எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்குத் தண்ணீரும் அவசியம். ஒவ்வொரு முறை சாப்பிட்டு முடிந்ததும், மூன்று அல்லது நான்கு தம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். தினமும் சுமார் 1½ லிட்டர் தண்ணீர் நம் உடம்புக்குள் செல்ல வேண்டும். அதற்காகச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது தண்ணீர் சாப்பிடக் கூடாது (உணவு விக்கிக் கொண்டால் தண்ணீர் சாப்பிடலாம்) மற்றபடி சாப்பாட்டின் இடையிடையே தண்ணீர் சாப்பிட்டால் தண்ணீர் வயிற்றை நிரப்பிக் கொள்ளும். பின்பு உணவை முழுமையாக உண்ண இயலாது. தினமும் இரவில் படுக்கச் செல்லும் போது இரண்டு தம்ளர் தண்ணீரும் ஒரு வாழைப்பழமும் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் வராது.

ரமேஷ்: டாக்டர், கடைசியாக ஒரு சந்தேகம். மாமிசத்தில் அதிகமாகச் சத்து இருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால், மாமிச உணவு மிகவும் அவசியமானதா?

நான்: மாமிசத்தில் சத்து உள்ளது என்பது உண்மை. ஆனால், மாமிசம் கண்டிப்பாகச் சாப்பிட வேண்டும் என்பது அவசியமில்லை. மாமிசத்தில் உள்ள புரோட்டீன் சத்தையும், கொழுப்புச் சத்தையும் காய்கறி, பழங்கள், பால் ஆகியவற்றை அதிகமாகச் சேர்த்துக் கொள்வதன் மூலம் நாம் ஈடுகட்டி விடலாம்.

சுரேஷ்: அடேயப்பா...! சாப்பிடும் சாப்பாட்டில் இத்தனை விஷயங்கள் இருக்கிறதா...? இத்தனை நாளும் எனக்குத் தெரியாமல் போய் விட்டதே...! அதற்காக வருத்தப்படுகிறேன், டாக்டர்!

ரமேஷ்: ரொம்ப நன்றி டாக்டர்... உணவு முறைகளைப் பற்றி எங்களுக்குத் தெரியாத பல விஷயங்களைத் தெளிவாக விளக்கினீர்கள். நன்றி, நன்றி.


சுரேஷின் அம்மா: சரி, டாக்டர்... நேரமாகிவிட்டது. நாம் எல்லோரும் சாப்பிடச் செல்வோம். சமையல் ரெடியாகி விட்டது.

சுரேஷ்: டாக்டர், இன்றையிலிருந்து நான் நன்றாகச் சாப்பிடப் போகிறேன்... அதுவும் நீங்கள் சொன்ன மாதிரி சத்துள்ள உணவுகளையே அதிகமாகச் சாப்பிடப் போகிறேன். இதோ உங்கள் கண் முன்னாலேயே அதை ஆரம்பிக்கிறேன். (சாப்பிடத் தொடங்குகிறான்.)

நான்: வெரிகுட் சுரேஷ்! நீ இவ்வளவு விரைவில் திருந்தி விடுவாய் என நான் எதிர்பார்க்கவில்லை! நன்கு சாப்பிடு. உன் உடம்பை ஆரோக்கியமாக வைத்துக் கொள்.

சுரேஷின் அப்பாவும் அம்மாவும்: ரொம்ப தேங்க்ஸ் டாக்டர்! எப்படியோ சுரேஷை உங்கள் வழிக்குக் கொண்டு வந்து விட்டீர்கள்.

(நாங்கள் அனைவருமே மகிழ்ச்சியுடன் விருந்துண்ண ஆரம்பித்தோம்.)



இளந்தளிர்க் கதையரங்கம்

ஏழைகளும் நல்லவர்களே



பூங்குளம் என்பது ஒரு சிறு கிராமம். அக் கிராமத்தில் வேலன், பாலன் என்று இரு சிறுவர்கள் இருந்தார்கள். இருவரும் அண்ணன் தம்பிகள். வேலன் பாலனை விட மூன்று வயது மூத்தவன். அவர்களுக்குத் தந்தை இல்லை. தாய் மட்டும் இருந்தாள்.

அவள் நல்ல வசதி படைத்த ஒருவர் வீட்டில் வேலை செய்து வேலனையும், பாலனையும் காப்பாற்றி வந்தாள். அவள் சம்பாதித்தது அவர்களுக்குப் போதவில்லை. ஆதலால், அவள் வேலனிடம் படிப்பை நிறுத்தி விட்டு வேலைக்குச் சேருமாறு கூறினாள். வேலனும் அதற்கு இசைந்து வேலைக்குச் சேர்ந்தான்.

வேலன் வேலைக்குச் சேர்ந்த அன்று அவ் வீட்டு எஜமானரின் தம்பி மகன் விடுமுறைக்கு வந்திருந்தான். மறுநாள் அவ் வீட்டில் இருபது ரூபாய் காணாமல் போய் விட்டது! அப்பணம் அவ் வீட்டுக் கூடத்தில் இருந்த மேஜையின் மேல் வைக்கப் பட்டிருந்தது. அன்று வேலன்தான் அக் கூடத்தை நன்றாக மெழுகிச் சுத்தம் செய்தான். அவன் சுத்தம் செய்யும் போது அவனைத் தவிர அங்கு வேறு யாரும் இல்லை. ஆதலால், அவ்வீட்டின் எஜமானர் வேலன்தான் அப் பணத்தைத் திருடினான் என்று கூறி வேலனை நன்றாக அடித்து, வேலனையும் அவன் தாயையும் வேலையை விட்டு நிறுத்தினார்.

அன்று முதல் அந்த வீட்டில் எந்த வேலையும் சரிவர நடக்கவில்லை. ஒருநாள் எஜமானர் ஏதோ நினைவாகத் தம் தம்பி மகனின் துணிப் பெட்டியைத் திறந்து பார்த்தார். அப் பெட்டிக்குள் அன்று காணாமல் போன இருபது ரூபாய் இருந்தது. அவரும் தம்பி மகனை அதட்டி, மிரட்டிக் கேட்டதில் திருடியதை ஒப்புக் கொண்டான். அவரும் தாம் அநியாயமாய் ஒரு நல்ல சிறுவனை அடித்ததற்காக மிகவும் வருந்தினார். உடனே சென்று வேலனிடமும் அவன் தாயிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

அப்போது வேலனின் தாய் 'ஐயா, நாங்கள் பசியைத் தீர்த்துக் கொள்ள உழைத்துப் பிழைப்போமே தவிர, திருடிப் பிழைக்க மாட்டோம். பணக்காரர்கள் மட்டுமே நல்லவர்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அது தவறு. ஏழைகளும் நல்லவர்கள்தான்.

இதைப் புரிந்து கொள்ளுங்கள்' என்றாள்.

அதைக் கேட்ட எஜமானரும் 'புரிந்து கொண்டேன். ஏழைகளும் நல்லவர்கள்தான்' என்றார். பின் அவர்களைத் தன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போலக் கருதிக் காப்பாற்றினார். வேலன், பாலன் ஆகியோரின் படிப்பைத் தொடரவும் உதவி செய்தார்.



சேத்துப்பட்டி என்னும் ஊரில் மணிவேலு என்னும் 15 வயதுச் சிறுவன் இருந்தான். அவனுடைய அம்மாவிற்கு வயிற்றில் புற்றுநோய். அதைக் குணப்படுத்த குறைந்தது 10 ஆயிரம் ரூபாயாவது செலவு ஆகும் என மருத்துவர் கூறினார்.

மணிவேலுவின் தாயோ ஏழை. ஆதலால் அரசு மருத்துவமனையில் சேர்ந்தாள். பெயருக்குத்தான் சிகிச்சை. அரசு மருத்துவ மனையில் நோயாளிகளை நல்ல முறையில் கவனிப்பதென்பது அரிதாகி விட்டது. தனியார் மருத்துவ மனையில் சேர்ப்போம் என்றால் கையில் நயா பைசா இல்லை. மணிவேலுவிற்குத் தாயைத் தவிர வேறு யாரும் இல்லை. தந்தையோ இறந்து விட்டார். இந்த நிலையில் வயிற்றுப் பசிக்காக அழுவதா அல்லது உயிருக்கு உயிரான அன்னையை நினைத்து அழுவதா என்று தெரியாமல் தவித்தான்.

அவன் வகுப்பு ஆசிரியரோ, "கடவுளை நம்பு. அவர் எப்படியும் உன் தாயைக் காப்பாற்றுவார்." என்று ஆறுதல் கூறினார். கடவுள் நம்பிக்கை அதிகம் வைத்துள்ள மணிவேல் நாளுக்கு நாள் அந்த நம்பிக்கை குறைந்து வருவதைக் கண்டு மனம் வருந்தினான். அந்த அளவு அவனைக் கடவுள் சோதித்தார்.

ஒருநாள். அவன் பள்ளி விட்டு வரும்போது வழியில் உள்ள மாரியம்மன் கோயிலினுள் சென்று, "தாயே, நீதான் என் அம்மாவின் வியாதியை தீர்க்கணும்" என்று மனமுருகக் கண்ணீர் விட்டு வேண்டினான். பிறகு, மருத்துவ மனைக்குச் சென்று தன் தாயின் நெற்றியில் திருநீர், குங்குமத்தை இட்டான். பிறகு எப்போதும் போல் கஞ்சியைக் குடித்து விட்டுத் தன் தாய் அருகிலேயே அமர்ந்து பள்ளிப் பாடங்களை முடித்த போது மணி ஒன்பது இருக்கும். பிறகு தன் தாய் அருகிலேயே படுத்துக் கொண்டான்.

தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தான். அப்போதும் தூக்கம் வரவில்லை. எழுந்து ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தான். அங்கே எதிர் வரிசையில் உள்ள பணக்காரர் வீட்டில் மாடியிலிருந்து கழிவுநீர் கீழே வரும் குழாய் வழியாக ஓர் உருவம் மேலே ஏற முயன்றது. அதைப் பார்த்த மணிவேலு வாசலுக்கு வந்தான். அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அப்போது ஒரு யோசனை தோன்றியது.

உடனே கீழே உள்ள கற்களை எடுத்து அந்த உருவத்தின் மீது சரமாரியாக எறிந்தான். அக் கல்லில் ஒன்று அந்த உருவத்தின் பின் மண்டையில் பட்டது. உருவம் 'வீல்' என கத்திக் கொண்டு கீழே மயங்கி விழுந்தது. உடனே பணக்காரரிடம் சென்று நடந்ததைக் கூறினான்.

பணக்காரர், தம் வீட்டில் உள்ள தொலைபேசியின் மூலம் காவல்

நிலையத்திற்குத் தகவல் கொடுத்தார். இன்ஸ்பெக்டர் இரண்டு கான்ஸ்டபிள்களுடன் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து திருடனைக் கைது செய்தார்.

மணிவேலுவைப் பார்த்து, ''நீ யார்?'' என்று கேட்டார் பணக்காரர். மணிவேலு, தன் தாயின் வியாதியையும் தன் ஏழ்மை நிலைமையையும் எடுத்துக் கூறினான். ''உன் தாயின் வியாதியைத் தீர்ப்பது என் பொறுப்பு. உன்னையும் பட்டப் படிப்பு வரையில் படிக்க வைப்பதும் என் பொறுப்பு'' என்றார் அந்தப் பணக்காரர்.

அதைக் கேட்ட மணிவேலு பூரித்துப் போனான். மணிவேலு, ''நீ செய்த சாகசத்தை கவர்மெண்டிடம் கூறி உனக்குச் சாகசப் பரிசாக ரூபாய் பத்தாயிரம் வாங்கித் தருகிறேன்'' என்று கூறினார் இன்ஸ்பெக்டர்.

மணிவேலு சந்தோஷத்தால் பேசாமல் நின்றான். மணிவேலுவின் தாய் பணக்காரரால் காப்பாற்றப் பட்டார். மணிவேலுவிற்குச் சாகசப் பரிசாக ரூபாய் பத்தாயிரம் அரசாங்கம் கொடுத்தது. கடவுள் நம்பிக்கையால்தான் நம்மால் தாயைக் காப்பாற்ற முடிந்தது; பரிசும் பெற முடிந்தது' என்று மணிவேலு மனமார நம்பினான்.

யார் சிறந்தவர்?



இரா. சுமதி. (17578)

அந்த நாய் வராண்டாவில் உட்கார்ந்திருந்தது. முகம் வாடிப் போய் இருந்தது. வயிற்றுப் பசி முகத்தில் பிரதிபலித்தது. வீட்டின் உள்ளேயிருந்து சாம்பார் வாசனை காற்றில் வந்து அதன் நாசியை அடைந்து நாக்கிலிருந்து நீரைச் சுரக்க வைத்தது.

உள்ளே அந்த வீட்டுக்கார அம்மாள் சாப்பாட்டைச் சுவாமிக்குப் படைத்துக் கொண்டிருந்தாள். 'இப்பொழுது நமக்குச் சோறு போடுவாள்.' என்று எண்ணியபடியே நாய் எட்டிப் பார்த்தது. அதே வினாடி அந்தம்மாள் சிறிய வாழை இலையில் கொஞ்சம் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தாள்.

நாய் ஆவலுடன் எழுந்து நின்று வாலைக் குழைத்தவாறே அவள் காலைச் சுற்றி வந்தது. ஆனால், அந்த அம்மாளோ நாயைக் கடந்து வெளியில் வந்து 'காகா...' என்று கூவினாள்.

வாசலில் இருந்த முருங்கை மரத்தில் எங்கிருந்தோ ஒரு காகம் வந்து அமர்ந்தது. சோற்றை வராந்தாவின் வெளிச் சுவரில் வைத்து விட்டு அந்தம்மாள் உள்ளே சென்றாள். நாய் ஏமாற்றத்துடன் நின்றது. அப்பொழுது அந்தக் காகம் 'கா....கா' என்று கூவ, எங்கிருந்தோ நிறையக் காகங்கள் வந்து சோற்றை உண்டன.

உடனே நாய் காகத்திடம்,

''ஏ காகமே.. இந்த உலகத்தில் நீயே சிறந்தவன். நீ மட்டும் சாப்பிடாமல் உன் இனத்தையும் அழைத்து உண்ணுகிறாய். அதனால்தான் இந்த அம்மாள் உனக்குச் சோறிட்டாள். நான் மிகவும் தாழ்ந்தவன்'' என்று வேதனையோடு கூறியது.

இதைக் கேட்ட காகங்கள் பெருமையாகக் கரைந்தன. தலைக்கனம் காகங்களுக்கு ஏறியது.

அப்பொழுது வாசல் 'கேட்'டை யாரோ திறக்க நாய் திரும்பிப் பார்த்தது.

ஒருவன் உள்ளே வந்தான். அவன் கைகளைப் பின்புறமாக வைத்திருந்

தான். அதில் ஒரு கத்தியையும் வைத்திருந்தான். அவன் விழியே அவனை 'திருடன்' என்றது.

உள்ளே வந்த அவன் கேட்டை காலால் தள்ளி சிரமத்துடன் ஓசையின்றிச் சாத்தினான். அடிமேல் அடி வைத்து அவன் பாதம் நடக்க திருட்டு விழி சுற்று முற்றும் சுழன்றது.

அவனைக் கண்டதும் அந்த நாயின் விழிகள் திடீரென சிவக்க, காதுகள் இரண்டும் விறைப்பாக, பற்கள் தெரியக் குலைத்தது. பக்கென்று தாவி 'லொள்.... லொள்....' என்றவாறே அவனை நோக்கி ஓடியது. அதைக் கண்ட அந்தப் பகல் திருடன் கத்தியை நாயை நோக்கி விட்டெறிந்தான்.

குறியாய் வந்த அந்தக் கத்தி நாயின் வயிற்றில் பாய்ந்தது. 'வாவ்..., வா...... வா......' அலறியபடியே அந்த நாய் துடித்தது. தரையில் விழுந்து புரண்டது. இரத்தம் ஆறாக ஓட அந்தத் திருடன் நாயைத் தாண்டி வீட்டினுள் அடி வைத்தான்.

இரத்த வெள்ளத்தில் துடித்த நாய் அவன் முன்னேறுவதைப் பார்த்து 'வாவ்....' என பாய்ந்து அவன் காலைக் கவ்வியது.

'ஆ..... அம்மா....' அவன் அலறினான். சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த அந்த அம்மாள் 'ஆ....' என அலறிப் 'படாரென' வாசல் கதவைச் சாத்தித் தாழிட்டாள்.

நாயின் வாயிலிருந்து காலை இழுத்து எப்படியோ விடுவித்துக் கொண்டான். இரத்தம் வழிந்த காலுடன் அவன் கேட்டைத் திறந்து கொண்டு வெளியே ஓடி விட்டான்.

அந்த நாய் வராண்டாவில் இரத்த வெள்ளத்தில் துடித்தது. இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த காகங்கள் பறந்து வந்து நாயைச் சுற்றி வட்டமிட்டன.

ஒரு காகம் சொன்னது: ''அன்புள்ள நாயே, உண்மையிலே சிறந்தவன் நீதான். நாங்கள் எங்கள் இனத்தை மட்டுமே அழைத்து உணவைப் பங்கிட்டுக் கொள்கிறோம். இது சுயநலம் தானே! ஆனால், நீயோ விலங்கினம்: விலங்கினமான நீ மனித இனத்திற்கு எவ்வளவு உதவி செய்கிறாய்? அந்த அம்மாள் இன்று முதலில் உனக்குச் சோறு வைக்கவில்லை! பண்பாட்டின்படி எங்களுக்கு வைத்தாள். அவள் மேல் உனக்குக் கோபமிருந்தால் திருடனை வீட்டினுள் அனுமதித்திருக்கலாம். ஆனால், நீயோ இத்தனை நாள் போட்ட சோற்றினை உண்ட நன்றியால் அவளுக்கு உதவி செய்தாய். எனவே, நீயே சிறந்தவன்.'' என்றது. இதைக் கேட்ட நாய் மகிழ்ச்சியில் கண்ணை மூடியது.


வழி எப்படி?

''பெரிய ஆஸ்பத்திரிக்கு எப்படிங்க போகணும்...?''

''நோயாளியாப் போகணும்...!''

— மயிலாடுதுறை ஸ்வாமி.






கரடியின் விருப்பம்

கரடி: ''ஐயா... எனக்கு ஸ்டெப் கட்டிங் வெட்டி விடறீங்களா...?''


— மயிலாடுதுறை ஸ்வாமி.



சு. காணிக்கைராஜ்

சித்திரப் புதிர்! 30

ஆழி



1 கண்டுபிடிக்கப்பட்டபோது, இந்த எந்திரம் இப்படித்தான் இருந்தது. என்ன எந்திரம் இது?



3 இது எதற்காக உருவாக்கப்பட்ட சின்னம்?



2 யார் காலத்து நாணயங்கள் இவை?



4 இது உலகப் பிரசித்திப் பெற்ற ஒரு கட்டடத்தின் முன் வாயில். என்ன கட்டடம் என்பது தெரியுமா?




5 கொஞ்சம் வித்தியாச மான தோற்றத்தில் இருக்கும் இந்த அமெரிக்க ஜனாதிபதி யார்?

விடை வேறுபக்கம்

பாவமா? சாபமா?

கமலவேலன்



இடம்: வீடு.
காலம்: மத்தியானம் உணவு வேளை.
பாத்திரங்கள்: பிரசன்னா, அவன் அம்மா வேணி, அப்பா சாந்தப்பன், தாத்தா சதாசிவம்.

(பள்ளிக் கூடம் விட்டு மத்தியானச் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு வருகிறான் பிரசன்னா. சைக்கிளைத் தெரு ஓரமாக நிறுத்தி விட்டுப் படபடப்புடன் உள்ளே வருகிறான்.)

பிரசன்னா: அம்மா... அம்மா... சாதம் போடுங்க. பள்ளிக் கூடத்துக்குப் போகணும். நேரமாச்சு.

வேணி: டேய், இப்பத்தான் உள்ளே வந்து நிக்கறே. அதுக்குள்ளே பறக்கிறியே. கை கால் கழுவிட்டு வா... சாப்பாடு எடுத்து வைக்கிறேன்.

பிரசன்னா: (எரிச்சலுடன்) கை கால் எல்லாம் காலையிலேயே கழுவிட்டேன் அம்மா.

சதாசிவம்: (உள் அறையிலிருந்து) சாப்பாடும்தான் காலையிலேயே சாப்பிட்டுட்டியே! அப்புறம் எதுக்கு இப்போ ஒரு தடவை சாப்பிடணும்.

பிரசன்னா: தாத்தா... உங்களுக்கு எப்பவும் கேலிதான். இப்போ எனக்கு வயிறு பசிக்குதே!

சதாசிவம்: பசிக்கு சாப்பாடு எவ்வளவு முக்கியமோ... அவ்வளவு முக்கியம் சுத்தம். சுத்தம் சோறு போடும்.

வேணி: சத்தம் போட்டு நல்லாச் சொல்லுங்க. உங்க பேரனுக்கு உறைக்கிற மாதிரி.

(எரிச்சலுடன் கை கால் அலம்பச் செல்கிறான். இந்த நேரம் பிரசன்னாவின் அப்பா சாந்தப்பன் உள்ளே வருகிறார்.)

சாந்தப்பன்: வேணி... வேணி... அப்பப்பா... என்ன வெயில்.... என்ன வெயில். சூரியனே வெடிச்சுக் கீழே விழுந்துடும் போலயிருக்கு. வேணி... வேணி எங்கே போய்த் தொலைஞ்சாளோ.

வேணி: (சாப்பாட்டுடன் வந்து கொண்டே) எங்கேயும் போகலே. உங்க செல்லப் பிள்ளைக்குச் சாப்பாடு

பரிமாறத் தயார் ஆகிக்கிட்டுயிருக்கேன். வரும் போதே நீங்களும் அவனை மாதிரியே பறக்கிறீங்களே!

சாந்தப்பன்: ஏ வேணி, நீ தேனீ மாதிரி கொட்டறியே! இப்ப நான் என்ன சொல்லிட்டேன். வெயில் கொடுமை தாங்கலே. கொஞ்சம் ஃபேனைப் போடு.

பிரசன்னா: அம்மா, சாப்பாட்டைப் போடுங்க.

சாந்தப்பன்: (எரிச்சலுடன்) முதலிலே நீ ஃபேனைப் போடு. ஆமா. தபால் எதுவும் வந்ததா?

வேணி: இதோ... ரெண்டு தபால் வந்திருக்குதுங்க. (கடிதத்தைக் கொடுத்தல்.)

சாந்தப்பன்: கொண்டா.... படிப்போம்.

(தபாலை வாங்கியவர் திடீரென நினைவு வந்தவராய்க் கைப் பையில் எதையோ பரபரப்புடன் தேடுகிறார். இதற்கிடையில் பிரசன்னாவின் அழைப்பு.)

பிரசன்னா: அம்மா... சாப்பாடு.

சாந்தப்பன்: முதலிலே அந்தச் சனியனுக்குச் சாதத்தைப் போட்டுத் தொலை.

வேணி: குழந்தையைச் சனியன்னு சொல்லாதீங்க.

சாந்தப்பன்: சனியன்னு சொல்லாமே, இனியன்னு சொல்லவா? பனியன்லே ஒட்டின வியர்வை மாதிரி அம்மா... அம்மான்னு ஒட்டிக்கிட்டுத் திரிகிறான்.

(மறுபடியும் அவர் எதையோ பரபரப்புடன் கைப் பையில் தேடுகிறார்.)

சதாசிவம்: (உள் அறையிலிருந்து) சன்னு சன்னுன்னு எரிஞ்சு விழுகிற உனக்குப் போய் சாந்தப்பன்னு பேர் வச்சேன் பாரு. என்னைச் சொல்லணும்.

சாந்தப்பன்: அப்பா... நீங்க என்னோட அவசரம் தெரியாமே கோவிச்சுக்கிறீங்க. கம்பெனி வேலையா... பாங்குக்கு வந்தேன். அப்படியே சாப்பிட்டுப் போயிடலாம்னு வீட்டுக்கு வந்தேன். இங்கே வந்தால் ஒரே ரகளை!

பிரசன்னா: அம்மா... சாம்பார் ஊத்துங்கம்மா.

வேணி: ஊத்துறேன்டா.

பிரசன்னா: ஐய்யய்யோ... போச்சு.. போச்சு!

சதாசிவம்: என்ன ஆச்சு!

சாந்தப்பன்: சாம்பாரிலே பல்லியா? பாம்பா?

பிரசன்னா: பாம்பு இல்லேப்பா. வேம்பாக் கசக்கிற காய்கறிகளை நிறையக் கொட்டிட்டாங்க.

வேணி: காரெட், வெண்டைக்காய், கத்தரிக்காய் இந்த மூணும்தான் போட்டிருக்கிறேன். காரெட்டு கண்ணுக்கு நல்லது. வெண்டைக்காய் ஞாபக சக்தியை வளர்க்கும். கத்தரிக்காய் காய்களிலே ராஜா...

பிரசன்னா: அம்மா... எனக்குக் காய்கறின்னாலே கட்டோடே பிடிக்காது. அது உங்களுக்கு நல்லாவே தெரியும். சாம்பார்ச் சாதம் வேண்டாம். மோர்ச் சாதம் மட்டும் போடுங்க. நாழியாகுது.

சாந்தப்பன்: எனக்கும் நாழியாகுது. (மறுபடியும் கைப்பையில் எதையோ தேடிக் கொண்டேயிருக்கிறார்.)


சதாசிவம்: நாழியாகுதுன்னு சொல்லிட்டுக் கோழி மாதிரி கைப் பையைப் பிராண்டிக்கிட்டிருக்கியே!

சாந்தப்பன்: (தயக்கத்துடன்) அப்பா... அது... வந்து... மூக்குக்

சித்திரப்புதிர் -30- விடை

1. அச்சு எந்திரம்
2. மகா அலெக்ஸாண்டர்
3. 1980 – இல், மாஸ்கோவில் நடந்த ஒலிம்பிக்கின் சின்னம் — மிஷா கரடிக் குட்டி.
4. தாஜ்மகாலின் முன் வாயில்.
5. ஆபிரகாம் லிங்கன்.





கண்ணாடியை பாங்கிலேயே தவற விட்டுட்டேன்னு நினைக்கிறேன். பையிலே காணோம். இந்த தபாலைக் கொஞ்சம் படிச்சுச் சொல்லுங்கப்பா. தமிழிலேயிருந்தா, இவளையே படிக்கச் சொல்லிடுவேன். அது இங்கிலீஷ்லே... அதுவும் கடுகு மாதிரி பொடியெழுத்துலே இருக்கு!

பிரசன்னா: (வியப்புடன்) என்னம்மா இது! கண்ணாடியில்லாம படிக்க முடியாதுன்னு அப்பா சொல்றாரே, பாவம்!

சதாசிவம்: பாவம் இல்லேடா; அது சாபம்!

சாந்தப்பன்: நீங்க அவனுக்குத் தூயம் போடுங்க.

வேணி: (கவலையுடன்) போன மாசம்தான் கண்ணாடியை மாத்தினீங்க. ஃபிரேமே நூத்தி நாற்பது ரூபாய்ன்னு சொன்னீங்க. கண்ணாடியில்லாமே உங்களாலே ஒரு எழுத்துக் கூடப் படிக்க முடியாது. கொஞ்சம் கூட உங்களுக்குப் பொறுப்பு கிடையாது.

சாந்தப்பன்: நெருப்பாக் கொட்டுறியே. பாங்கிலே போய்த் தேடி எடுத்துடுவேன். (அப்பாவைப் பார்த்து) அப்பா... நீங்க படிச்சுச் சொல்லுங்கப்பா.

சதாசிவம்: (தபால்களைப் படித்துக் காட்டுகிறார்.)

பிரசன்னா: (வாய் விட்டுச் சிரிக்கிறான்). அம்மா, இது ரொம்ப வேடிக்கையாயிருக்கு!

சாந்தப்பன்: இதிலே என்னடா வேடிக்கை?

பிரசன்னா: இல்லப்பா... உங்களாலே கண்ணாடியில்லாமல் படிக்க முடியல்லே! தாத்தா கண்ணாடியில்லாமல் கடகடன்னு படிக்கிறாங்களே!

சதாசிவம்: அப்படிக் கேளுடா என் கண்ணு! மண்ணு செழிப்பாயிருந்தால் தாண்டா மரம் செழிப்பாயிருக்கும்.

பிரசன்னா: (குழப்பத்துடன்) ஒண்ணுமே புரியலையே தாத்தா.

சதாசிவம்: நான் உன்னைப் போலச் சின்னப் பையனா இருக்கறப்போ... எல்லாக் காய்கறிகளை

யும் நிறையவே சாப்பிடுவேன். உங்க அப்பா... எந்தக் காயும் சாப்பிட மாட்டான். உன்னை மாதிரியேதான். கண்ட கண்ட நேரத்திலே முறுக்கு, சீடைன்னு சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்கிட்டான். உணவே மருந்துன்னு வள்ளுவரே சொல்லியிருக்காரு. சத்தான நீரை, காய்கறிகள் சாப்பிட்டால்தான் உடல் வலுப்பெறும்!

பிரசன்னா: அப்படியா தாத்தா!

சதாசிவம்: அது மட்டுமல்ல: இறைவன் கொடுத்த உடம்பை ஒழுங்காப் பாதுகாக்கலேன்னா, கடவுள் அதுக்குத் தண்டனையா, கண்கோளாறு, பல் சொத்தை... குடல் நோயின்னு கொடுத்து நம்மை உணர வைப்பாரு. புரியுதா பிரசன்னா அதனால்தான் சாபம்னு சொன்னேன்!

பிரசன்னா: புரியுது தாத்தா.

சாந்தப்பன்: பிரசன்னா, உங்க தாத்தா சொல்றது நூத்துக்கு நூறு உண்மை. அவர் சொன்னதை அன்னிக்கு நான் கேட்கல்லே. இப்போ அவஸ்தைப்படுறேன்.

வேணி: மாமா... குழந்தைகள்தான் நாட்டின் கண்கள். அவங்க எல்லாரும் நீங்க சொன்னதைக் கேட்டு நடந்தால் நல்லாயிருக்கும்.

பிரசன்னா: அம்மா... எனக்குக் காரெட், வெண்டைக்காய், கத்தரிக்காய் எல்லாம் போடுங்க அம்மா. சாப்பிடுறேன். இதைப் பத்தி என் நண்பர்களுக்கும் எடுத்துச் சொல்லப் போறேன்.

வேணி: இப்பவாவது உணர்ந்துக்கிட்டியே!

பிரசன்னா: கண்ணாடி போடற நிலைமை பின்னாடி வந்துடக் கூடாது. தாத்தா சொல்றபடி சத்தான உணவுப் பொருள்களைச் சாப்பிடணும். இல்லையா அம்மா?

சதாசிவம்: வெரிகுட். என் பேரன் எப்பவுமே புத்திசாலி.

வேணி: அப்படிச் சொல்லுங்க மாமா. (கணவனைப் பார்த்து நீங்களும் சாப்பிட வாங்க)

சாந்தப்பன்: என் அப்பாவுக்கும்சாப்பாடு போடு.

வேணி: மாமாவின் நேரம் சரியாக இரண்டு மணி. இப்போ இலட்ச ரூபாய் கொடுத்தாலும் அவர் சாப்பிட வர மாட்டார்.

பிரசன்னா: 'ஓல்ட் ஈஸ் கோல்டு'ன்னு எங்க சார் சொல்றது சரிதான் அம்மா!

சதாசிவம்: போக்கிரிப் பயலே நான் 'ஓல்டு'ன்னு 'போல்'டா சொல்றியே...!

(பேரனைச் செல்லமாக அடிக்கக் கையை ஓங்குகிறார். அவன் எழுந்து உள்ளே ஓடிவிடுகிறான்.)

(வேணியும் சாந்தப்பனும் தாத்தா—பேரன் விளையாட்டை ரசித்து நிற்கின்றனர்)

(திரை)

கண்டுபிடித்தவரைக் கண்டுபிடியுங்கள்

கண்டுபிடித்தவர்கள் இடம் மாறி இருக்கிறார்கள். கண்டுபிடியுங்கள்:


1. மின் விசிறி	—	மோர்ஸ்
2. ரயான் (செயற்கைப் பட்டு)	—	ஷோல்ஸ்
3. தந்தி	—	மார்க்கோனி
4. எக்ஸ்ரே	—	ஹைறயாட்
5. தட்டச்சு	—	வீலர்
6. செல்லுலாய்ட்	—	ராண்டஜன்
7. டீசல் (எண்ணெய்) இயந்திரம்	—	ஆடிமார்ஸ்
8. ரேடியோ	—	டீசல்



விடை: 1 — 5; 2 — 7; 3 — 1; 4 — 6; 5 — 2; 6 — 4; 7 — 8; 8 — 3.

சோம்பேறிக் கழுதை

ஓவியர் – எஸ்.கே. ராமானுஜம் (ராஜு÷)






ஒரு நாள் கந்தனுக்குச் சாப்பிடக்கூட பணவசதி இல்லாமல் பணக்கஷ்டம் ஏற்பட்டு விட்டது.
அதனால் அவன், கழுதையை சந்தைக்கு அழைத்துக்கொண்டு சென்றான்...
சந்தையில்.. ஒரு முரடன் சோம்பேறிக்கழுதையை பணம் கொடுத்து விலைக்கு வாங்கிக் கொண்டான்.
கழுதை அவனுடன் செல்ல மறுத்தது.
முரடனிடம் சிக்கிய அது --- தினமும் அடிபடத்தொடங்கியது.
அவன், அதற்கு சரியான ஆகாரம் கொடுப்பதில்லை.
அது மிகுந்த பசியுடனும், பெரிய மூட்டைகளைச்சுமந்தும், கம்பால் அடிகளையும் வாங்கியது.
என்னுடைய பழைய எஜமானருக்குச்செய்த துரோகத்தை நான் இப்பொழுதுதான்-- உணர்ந்தேன். அடுத்து என் சோம்பேறித்தனத்திற்கும் தண்டனை கிடைத்து விட்டது....


Colour Transparency : Yoga








இடுப்புவரை மனித உருவமும் அதற்குக் கீழே குதிரை வடிவமும் கொண்டவர் சிரான்...
சிரான் ஒரு மாமேதை. அவரிடம் வளர்ந்தான் ஜேஸன்...
ஜேஸன்! நீ ஓர் அரச குமாரன்! வீரத்தோடு போரிடு!
ஜேஸன் தன் சந்தேகத்தை வெளியிட்டான்....
ஐயா! என்னைப் பலகலைகளில் வல்லவனாக வளர்க்கிறீர்கள். . . ஆனால் என் நாடு எது?
இயால்கஸ் நகரில் இருந்து அரசாளும் பெலியாஸ் உன் தந்தையிடமிருந்து நாட்டைப் பிடுங்கிக் கொண்டான்.
ஒரு நாள்...
ஜேஸன்! எங்கே புறப்பட்டாய்?
இயால்கஸுக்கு! பெலியாஸைப் பழிவாங்கினால்தான் என் மனம் நிம்மதி அடையும்.
கிரேக்க வீரன்
ஜேஸன்
கதை: ஆனந்தி
படம்: வினு



அப்படியானால், இந்தச் செருப்புக்களை அணிந்து செல்!
இவை...?
உன் தந்தையுடையவை!
தந்தையின் செருப்புக்களை அணிந்ததும் ஜேஸன் உள்ளத்தில் முன்னிலும் வீரம் விளைந்தது...
இயால்கஸ்! இதோ வருகிறேன்! பெலியாஸ்! உன்னை எச்சரிக்கிறேன்!
ஒரு ஆறு குறுக்கிட...
அட, வெள்ளம் பெருக்கெடுத்தோடு கிறதே! எப்படி கடப்பது...?
அப்போது ஒரு கிழவி...
என்னப்பா, செருப்பு நனைந்து விடும் என்று பயப்படுகிறாயா?
ஜேஸன் துணுக்குற்று...
உன் வயதுக்காக மரியாதை காட்டுகிறேன்... சுழல் மிகுந்த இந்த ஆற்றை எப்படி கடப்பது?
ஹி... ஹி... இதற்கு அஞ்சுகிறவன், இழந்த சிங்காசனத்தை எப்படி மீட்பாய்?



ஜேஸன் திகைத்தான்:
இவளிடம் மந்திரசக்தி இருக்கிறது!
என்னை முதுகில் சுமந்து அக்கரை சேர்த்துவிட்டுப் போ!
ஜேஸன் அவ்வாறே செய்தான்....
நீ நல்லவன். வயதானவர்களுக்கு உதவுகிறாய்...
அது சரி! ஆனால் அதோ மிதந்து வரும் மரம் இடித்தால் நாம் தொலைந்தோம்!
பயப்படாதே!
மந்திரத்தில் கட்டுண்டது போல் மரம் ஒதுங்கிப் போய் விட்டது...
ஆச்சர்யம் தான்... ஆனால்...
ஆனாலென்ன?
வெள்ளம் என்னுடைய செருப்பு ஒன்றை அடித்துக் கொண்டு போய் விட்டது!



அக்கரையில் . . .
கவலைப்படாதே! ஒரு காலில் மட்டும் செருப்புடன் உள்ள உன்னை பெலியாஸ் பார்க்கும் போது நடுங்கு வான்.
இயால்கஸ் நகரில் மக்கள் ஜேஸனை வியப்புடன் பார்த்தனர்...
பேசும் மரம் சொன்னது நிஜமாயிற்று! பெலியாஸைப் பழி வாங்க, ஒற்றைக்கால் செருப்புடன் இளைஞன் வருவான் என்றதே!
பெலியாஸ் முன் வந்து நின்றான் ஜேஸன்.
யார் நீ? எங்கிருந்து வருகிறாய்?
சிரானுடைய மாணவன் நான்! பெயர் ஜேஸன்!
அவர் அறிவாற்றலை யெல்லாம் பெற்று விட்டாயா?
சோதித்துப் பாரேன்!
உன் வீட்டுக்கு விரோதி வந்தால் என்ன செய்வாய்?
அதிதியைக் கொல்ல லாமா? கூடாது! எனவே, 'தங்க ரோமத்தைக் கொண்டு வா' என்று அனுப்பி விடுவேன்!


ஜேஸனின் பதில் பெலியாஸ் மன்னனுக்கு மகிழ்ச்சி அளித்தது....
ஜேஸன்! உன் யோசனையை ஏற்கிறேன்... பொன்னாலான ஆட்டு ரோமத்தைக் கொண்டு வா பார்ப்போம்!
இவன் வார்த்தைகளை வைத்தே இவனை ஒழித்துக் கட்டுவேன்! தங்க ரோமத்தைக் கொண்டு வருவது ரொம்பக் கஷ்டமாயிற்றே!
ஆகட்டும், ஆனால் ஒரு நிபந்தனை... அதை நான் கொண்டு வந்தால் நீ உன் சிம்மாசனத்தையும் கிரீடத்தையும் எனக்குத் தந்து விட வேண்டும்...
சரி!
ஜேஸன் சென்றதும் பெலியாஸ்...
பல அபாயங்களைக் கடந்து, பொன்னாகத் தகதகக்கும் அந்த ஆட்டு ரோமத்தைக் கொண்டு வருவதென்பது அசாத்தியம். தொலைந்தான் ஜேஸன்! ஹ.. ஹ.. ஹா!...
ஜேஸன், பேசும் ஓக் மரத்தை அடைந்து....
தெய்வ சக்தி வாய்ந்த மரமே! வணங்குகிறேன். எனக்கு வழிகாட்டி உதவு.....



மரத்தின் இலைகள் சலசலத்து ரகசியம் பேசின...
ஆர்கஸ், கப்பல் கட்டுவதில் நிபுணன். அவனைத் தேடு.. .. நலன் பெறுவாய்...
ஜேஸன் பல நாட்கள் அலைந்து... கடைசியில்...
நீங்கள்தானே ஆர்கஸ்?
ஆமாம்..
ஜேஸன் நடந்ததைக் கூறி....
பேசும் ஓக் மரத்தின் கட்டளையைத் தாங்கள் நிறைவேற்றித்தர வேண்டும்....
ஆகட்டும்....
கப்பல் உருவாயிற்று....
ஆகா! அற்புதமான கப்பல்!
நானே இதுவரை இப்படிப்பட்ட ஒரு கப்பலை உருவாக்கியதில்லை....
ஜேஸன் மீண்டும் பேசும் ஓக் மரத்திடம் சென்று...
அடுத்த கட்டளை?
எனது ஒரு கிளையை வெட்டி, தெய்வவடிவம் தந்து, கப்பலின் முகப்பில் பொருத்து!


அறிவுத் தெய்வமாம் அதீனே சிலை கப்பல் முகப்பில் பொருத்தப் பட்டது...
கிரேக்க நகரங்கள் பலவற்றுக்குத் தூது அனுப்பு... உன்னுடன் பயணம் செய்ய வீரர்கள் வருவார்கள்!
வந்த வீரர்கள் தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள்.
நான் ஹெர்குலிஸ்
நான் தெஸியஸ்
பலசாலிகள்! மாவீரர்கள்!
நான் ஆர்ஃபியஸ்!
நீ உன் வாத்தியத்தை இசைத்தால் கல்லும் உருகுமே!
என் பெயர் அட்லாண்டா. ஒரு பெண்ணை அழைத்துப் போகத் தடையில்லையே?
உன் ஆற்றலைக் காட்டு...
அலைகளின் மேல் அனாயாசமாகத் தாவி ஓடினாள் அட்லாண்டா!



அசாதாரண ஆற்றலோடு பலமும் வீரமும் உள்ளவள் நீ! உன்னை அழைத்துப் போவது எமக்குப் பெருமை!
அப்போது ஒரு இரட்டையர் வந்தனர்...
நாங்கள் காற்றுத் தேவனின் புதல்வர்கள். காற்று நின்று போன போதிலும் எங்களால் ஊதி ஊதிக் கப்பலைச் செலுத்த முடியும்!
வருக! உங்கள் வீரம் வெல்க!
ஜேஸன் உள்பட ஐம்பதுபேர் ஆர்கஸ் நிர்மாணித்த ஆர்கோ கப்பலில் பயண மானார்கள். அவர்களுக்கு ஆர்கோநாட்ஸ் என்று பெயர்.
கால்சிஸ் நாட்டுக்குச் செல்வோம்!
பொன் ஆட்டு ரோமம் அங்கேதான் இருக்கிறது.
வீரர்களுக்குக் களைப்பு ஏற்படாதிருக்க ஆர்பியஸ் வாத்தியம் இசைத்தான்...
பாட்டிலேயே கதை கூறுகிறேன்... கேளுங்கள்!




ஆர்பியஸ் கதை கூறினான்... தெபீஸ் நாட்டில் அதமாஸ் என்ற மன்னனுக்கு இரு குழந்தைகள்...
கண்களா!
அந்தக் குழந்தைகளை அவனுடைய இரண்டாவது மனைவிக்குப் பிடிக்கவில்லை.
இவர்களைக் கடலில் தள்ளிவிடு! இந்தா, பணம்!
குழந்தைகளைக் கடற்கரையில் விட்டுவிட்டுக் காவலன் படகு சம்பாதித்துவரப் போனான்...
பயப்படாதே! நானிருக்கேன்...!
அப்போது ஒரு பொன்னிற ஆடு தோன்றியது...
அட! இதற்கு இறக்கை இருக்கே!
அற்புத ஆடு! இதன்மேல் ஏறிக்கொள்வோம்!



பொன் உரோமம் உடைய ஆடு கடல்மீது பறந்தது...
ஹய்யா...
ஆனால் ஹெல்லியின் பிடி தளர...
அண்ணா!
ஹெல்லி!
அண்ணன் பிரிக்ஸஸ் மட்டும் கால்சிஸ் நாட்டை அடைய...
அட! அதிசய ஆட்டில் பறந்து வரும் சிறுவன்!
ஆடு தரை இறங்கியதும் களைப்பில் இறந்தே போயிற்று...
என்னைக் காப்பாற்ற உன் உயிரைத் தந்தாயா....
அந்நாட்டு மன்னனுக்கு விஷயம் தெரியவர...
பிரிக்ஸஸ்! உனக்கு அடைக்கலம் தந்தேன். உன் ஆட்டின் உடலும் தங்கம்; உள்ளமும் தங்கம்! அதன் உரோமத்தைப் பாது காப்போம்!




காட்டின் மத்தியில் ஒரு மரத்தின் மீது தங்க உரோமத்தை வைத்தான் மன்னன். அதனை ஒரு பயங்கர மிருகம் பாது காத்தது.
ஆர்பியஸ் கதை கூறி முடித்தான்...
இதுதான் பொன் உரோமத்தின் கதை....
கால்சிஸ் எவ்வளவு தூரம்?
ஜேஸன் கூறினான்...
அந்நாட்டை அடைவது சுலபமில்லை; பல அபாயங்களை நாம் சந்திக்க நேரும்...
பல மாதங்கள் பயணம் செய்து பல தீரச் செயல் களைப் புரிந்து கால்சிஸ் நாட்டை அடைந்தார்கள்...
வருக! கால்சிஸ் உங்களை வரவேற்கிறது...
ஐயா! உங்கள் நாட்டு மன்னர் யார்? அவரை நாங்கள் சந்திக்க முடியுமா?


கால்சிஸ் நாட்டை இப்போது ஐடெஸ் ஆண்டு வந்தான். அவன் மகள் மீடியா. . . . .
ஆர்கோ கப்பலில் வந்தவர்களை வரச் சொல்!
நான் ஆர்கோநாட்ஸ் தலைவன் ஜேஸன். பொன் ஆட்டு உரோமத்தை எடுத்துச் சென்றால் என் நாட்டைத் திரும்பப் பெறுவேன்.
அதற்குப் பல சோதனைகளில் நீ வெற்றி பெற வேண்டுமே...?
சித்தமாக இருக்கிறேன்...
முதலில் நெருப்பைக் கக்கும் வெண்கல எருதுகளை நீ ஜெயிக்க வேண்டும்!
மீடியாவுக்கு ஜேஸனிடம் அன்பும் பரிவும் ஏற்பட்டது. ... அன்றிரவு...
ஜேஸன் என்னை நம்பு! நான் உனக்கு உதவவே வந்தேன்!
நன்றி!


எனக்கு மந்திர சக்தி உண்டு. இந்தத் தைலத்தைத் தடவிக் கொண்டு எருதுகளை அடக்கு!
நன்றி மீடியா! உன் அறிவோடு அழகும் பிரகாசிக்கிறது...
மறு நாள்...
நெருப்பைக் கக்கியபடி ஓடி வருகின்றன... இரு கரங்களில் இரு கொம்புகள் சிக்கினால் நல்லது...
ஜேஸன் இரு எருதுகளுடனும் போராடி....
அடக்கி விட்டேன்!


எருதுகளைக் கலப்பையில் பூட்டி நிலத்தை உழுதான் ஜேஸன். அரசன் ஜீடஸ் தந்திரம் செய்தான்.
இந்த விதைகளைத் தூவு....
மந்திர யாளிப் பற்கள் என்று தெரியாமல் ஜேஸன் விதைக்க...
கவசமணிந்த வீரர்கள் தோன்றி ஜேஸனைத் தாக்க வந்தார்கள்...
ஆ! நான் நிராயுதபாணியாகத் தனித்து நிற்கிறேன்...
மீடியா சொன்னது நினைவுக்கு வர ஜேஸன்...
தலைக் கவசத்தைக் கழற்றி அவர்கள் மீது எறிகிறேன்...
அந்த வீரர்கள் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொண்டு மடிந்தார்கள்.


ஜீடஸ் மன்னனுக்கு அசாத்திய கோபம்...
மீடியா! உன் உதவியின்றி இவன் வெற்றி பெற்றிருக்க முடியாது! மீண்டும் உதவினால் உன்னைக் கொன்று விடுவேன்!
ஆர்கோ கப்பலில்...
ஐடெஸ் மேலும் சோதனைகளை வைப்பான்!
பொன் ஆட்டு ரோமத்தைத் தரமாட்டான்!
ஏமாற்றி விடுவான்!
அப்போது மீடியா வர, ஜேஸன்...
கண்ணே! எனக்குப் பொன் ஆட்டு ரோமத்தை அடைய வழிகாட்டு. பிறகு என்னுடன் கப்பலேறி வந்துவிடு!
நள்ளிரவில் நான் கூறுமிடத்துக்கு வரவேண்டும். உங்களுடன் ஆர்பியஸ் மட்டும் வரட்டும்.
மரத்திலிருந்து தொங்கிய பொன் ஆட்டு ரோமத்தை விநோத மிருகம் பாது காத்தது...
மீடியா அங்கே அழைத்துப் போனள்...
இந்தக் கொடிய ஜந்துவை எப்படி வெல்வது?
ஆர்பியஸ் வாத்தியம் வாசிக்கட்டும்..


ஹார்ப் என்ற இசைக் கருவியை ஆர்பியஸ் வாசிக்கக் கொடிய ஜந்து மயங்கியது...
ஜேஸன் எளிதாகப் பொன் ஆட்டு ரோமத்தை எடுத்துக் கொண்டான்...
கப்பலை நோக்கி அனைவரும் ஓடினார்கள்.
கப்பலில் பயணம் செய்து ஜேஸன் தோழர்களுடன் தன் நாட்டை அடைந்தான்.
நிபந்தனைப்படி பெலியாஸ் சிம்மாசனத்தையும் கிரீடத்தையும் ஜேஸனுக்கே வழங்கினான்.
மீடியா வாழ்க!
ஜேஸன் வெல்க!
ஆர்கோநாட்ஸ் புகழ் ஓங்குக!



சொ. அடைக்கலம்

திருப்பதி குடை

திருப் பதியில் திருவிழா;
திரு மலையான் உற்சவம்
திருப் பதிக்குக் குடைகளும்
தெருவில் சுற்றிப் போகுது.

நாமம் போட்ட யானையும்,
நடந்து முன்னே வருகுது.
வண்டி மேலே உண்டியல்
வைத்து வசூல் ஆகுது.

வீட்டு வாசல் பந்தலில்
வேங்கடேசன் இருக்கிறார்.
அலங் கரித்துப் பார்க்கிறார்;
ஆரா தனைகள் நடத்துறார்.

குடைகள் போகும் வழியிலே
கூடி மக்கள் வணங்குறார்.
தடை யில்லாமல் சுண்டலும்,
புளியோ தரை வழங்குறார்.

எங்கும் மேள தாளங்கள்,
இசைக் கச்சேரி நடக்குது.
எங்கும் பலூன், மிட்டாய்கள்
எது, எதுவோ விற்குது.

ஒலிம்பிக்

ஓர் நவீன ஒலிம்பிக்கின் கதை

— ஜானகி மணாளன்

பதினைந்தாவது — ஹெல்சிங்கி ஒலிம்பிக்:

ஆண்டு 1952. எமில் ஜைடோபெக் 5000, 10,000 மீட்டரில் ஒலிம்பிக் சாதனையாளர். அவர் மாராத்தான் ஓடிப் பழகியவர் இல்லை. எனினும், ஓடிப் புதிய சாதனை புரிந்தார். இவரது மனைவி டானா ஜாவலின் வீச்சில் தங்கப் பதக்கம் பெற்றாள். (165 அடி 7.05 அங்) முதன் முதல் கணவன் — மனைவி தம்பதி தங்கப் பதக்கம் பெற்ற ஒலிம்பக் இது! 1948இன் சாம்பியன்கள் 3 பேர் இதிலும் சாம்பியன். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜப்பான் இதில் பங்கேற்றது. அத்துடன் 40 வருடங்களுக்குப் பிறகு சோவியத் ரஷ்யா இதில் கலந்து கொண்டது. அதற்கு இரண்டாம் இடம். முதலிடம் அமெரிக்காவுக்கு.

பதினாறாவது — மெல்போர்ன் ஒலிம்பிக்:

ஆண்டு 1956. ஆஸ்திரேலியாவில் தொலை தூர இடம். எனவே, குறைந்த வீரர்களே கலந்து கொண்டனர். புதிய சாதனைகள் அதிகம். 11 புதிய சாதனைகள், 36 புதிய உலக சாதனைகள் ஏற்படுத்தப் பட்டன. சென்ற ஒலிம்பிக்கில் இரண்டாம் இடம் பெற்ற ரஷ்யா இப்போது முதலிடம். முதலாம் இடம் பெற்ற அமெரிக்கா இரண்டாம் இடம். ஆஸ்திரேலியாவின் 18 வயதுப் பெண் வைடி குட்வர்ட் 3 தங்கப் பதக்கம் பெற்றார். அவை 100மீ 200மீ ஓட்டம், மற்றும் 400மீ ரிலே. நார்வேயின் ஈ.டெலிசன் ஜாவலின் வீச்சில் முதல் இடம் (85.7மீ) இது புதிய சாதனை பல உலக மற்றும் ஒலிம்பிக் ரிகார்டுகள் முறியடிக்கப் பட்டன.

பதினேழாவது — ரோம் ஒலிம்பிக்:

ஆண்டு 1960. நல்ல ஏற்பாடுகள். ரஷ்யா மீண்டும் முதலிடம் பெற்றது. அமெரிக்கா இரண்டாவதிலிருந்து ஏழாவது இடத்திற்குப் போய்விட்டது. அமெரிக்காவின் வில்மா அடால்ஃப் 100மீ ஓட்டத்தில் 11 செகண்டுக்கு உலக சாதனை. அத்துடன் 200மீ 400மீட்டரில் தங்கப் பதக்கம். அதே போல நீச்சல் வீராங்கனை 3தங்கப் பதக்கம். பெயர் க்ரிஸ் வான் ஸால்த்ஜா. பெண்கள் நீச்சலில் எல்லாப் பழைய சாதனைகளும் மிஞ்சப்பட்டன.

பதினெட்டாவது — டோக்கியோ ஒலிம்பிக்:

ஆண்டு 1964. முதன் முதல் ஒரு ஆசிய நாட்டில் நடந்த ஒலிம்பிக்! மிகச் சிறப்பான ஏற்பாடுகள். வரும் ஒலிம்பிக்களுக்கு முன்மாதிரி! 1945 ஆம் ஆண்டு ஜப்பானிய நகரம் ஹிரோஷிமா மீது அமெரிக்கா அணு குண்டை வீசியது. அதே தினத்தில் அவ்விடத்துக்கு அருகில் பிறந்து வளர்ந்த 19 வயது யோஷிநோரி ஸாகாய் என்ற வீரர் ஒலிம்பிக் ஜோதியை ஏற்றினார். பல பழைய சாதனைகள் முறியடிக்கப்பட்டன. தடகளப் போட்டிகளில் 10 புதிய ஒலிம்பிக் சாதனைகளும், 3 உலக சாதனைகளும் ஏற்படுத்தப்பட்டன. 18 வயது அமெரிக்க மாணவன் டான் ஸ்கோ


லண்டர் நீச்சலில் நான்கு தங்கப் பதக்கம் பெற்றார். 24 போட்டிகளில் அமெரிக்கா 12—ல் வென்றது. இதில் எட்டு ஒலிம்பிக் சாதனைகள். இரண்டு உலக சாதனைகள். அமெரிக்க வீரர் எல் ஓர்டர் மூன்றாவது தடவையாக டிஸ்கசில் தங்கப் பதக்கம் பெற்றார். எதியோப்பியாவின் அபேப் பிகிலா தொடர்ந்து இரண்டாவது தடவையாக மராதானில் தங்கப் பதக்கம் பெற்றார். அத்துடன் புதிய சாதனை! இந்தத் தடவை அமெரிக்கா 36 தங்கமும், ரஷ்யா 30 தங்கமும், ஜப்பான் 16 தங்கமும் பெற்றன. முதன் முதல் வாலிபால் போட்டிகள் இதில்தான் துவக்கப்பட்டன.

பத்தொன்பதாவது — மெக்ஸிகோ ஒலிம்பிக்:

ஆண்டு 1968. நடந்த இடம் கடல் மட்டத்திலிருந்து 2240 மீ உயரத்தில் உள்ள இடம். அந்த உயரம் விளையாட்டுக்களை — குறிப்பாக நீண்ட தூர ஓட்டங்களைப் பாதிக்கும் என்ற வாதம் எழுந்தது. ஆஸ்திரேலியாவில் உலக சாதனை வீரர் ரான் க்ளார்க் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் வென்றார். அத்துடன் உடனேயே மூர்ச்சையாகி விட்டார். மற்றபடி, உயரத்தினால் வேறு எந்த பாதிப்பும் இல்லை. மாறாக, பல உலக சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன. அமெரிக்காவின் ஜிம் ஹயின்ஸ் 100 மீ ஓட்டத்தில் 9.9 செகண்டு என்ற உலக சாதனையளவை எட்டினார். 200 மீட்டரில் அமெரிக்காவின் டி. எஸ்மித்தும், 400 மீட்டரில் லீ இவான்சும் புதிய உலக சாதனை ஏற்படுத்தினர். ஓர்டருக்கு தொடர்ந்து நான்காவது தடவையாக டிஸ்கஸ் எறிதலில் தங்கப் பதக்கம். 36 போட்டிகளில் 27—ல் புதிய ஒலிம்பிக் சாதனை. அதில் 16 அமெரிக்காவுடையது. அமெரிக்காவின் டைபி மேயர் நீச்சலில் நான்கு தங்கப் பதக்கம் பெற்றார். அத்தகைய மற்றொரு வீராங்கனை செக்கோஸ்லோவாகியாவின் வீர கேஸல்வஸ்கா.

இருபதாவது — ம்யூனிச் ஒலிம்பிக்:

ஆண்டு 1972. கருப்புக் கறை



* ரோம் ஒலிம்பிக்கில் அமெரிக்க அணி.



* மாஸ்கோ ஒலிம்பிக்ஸ் ஸ்டேடியம்.

படிந்த ஒலிம்பிக் இது. மிகச் சிறப்பான ஏற்பாடுகள். அத்தனையும் சோபிக்கவில்லை. காரணம், செப்டெம்பர் 5 ஆம் நாள் பாலஸ்தீன தீவிரவாதிகள் உள்ளே புகுந்து 2 இஸ்ரேலிய வீரர்களைக் கொன்றனர். 9 பேரை அடைத்து வைத்தனர். தங்கள் நாட்டு 200 பாலஸ்தீன கொரில்லாக்களை விடுதலை செய்யுமாறு கோரினர். போட்டிகள் அத்துடன் நின்று விடுமே, என்ற அச்சம் எழுந்தது. ஆனால், 24 மணி நேரத்துக்குப் பிறகு மீண்டும் தொடர்ந்தது. மிக அதிகமாக 122 நாடுகள் பங்கேற்றன. 21 போட்டிகள் நடந்தன. மொத்த வீரர்கள் 7830 பேர். அமெரிக்காவின் மார்க் ஸ்பிட்ஸ் நீச்சலுடன் நான்கு தங்கப் பதக்கங்கள் பெற்று விளங்கினார். அதே போல் பெண்களில் ரஷ்யாவின் ஜிம்னாஸ்ட் ஓல்கா கோர்பத் 3 தங்கமும் ஒரு வெண்கலமும் பெற்றார். 38 தடகளப் போட்டிகளில் 25—ல் புதிய சாதனை. பின்லாந்தின் லாஸே விரேன் 10 ஆயிரம் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் புதிய ஒலிம்பிக் சாதனையுடன் வென்றார். ரஷ்யா அமெரிக்காவை விட 17 தங்கப் பதக்கங்கள் அதிகம். ரஷ்யா 99 பதக்கம், அமெரிக்கா 94 ; கி. ஜெர்மனி 66.

இருபத்தோராவது — மான்ட்ரியல் ஒலிம்பிக்:

ஆண்டு 1976. பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகள் பகிஷ்கரித்தன. ருமேனியாவின் நாடியா கோமனேச் ஜிம்னாஸ்டிக்கில் சிறப்புப் பெற்றார். க்யூபாவின் அல்பர்டோ ஜுவாந்தொரேனா 400 மீ, 800 மீட்டர் ஓட்டத்தில் வென்றார். பின்லாந்தின் லாசே விரேன் முதன் முதலாகத் தொடர்ந்து இரண்டாவது தடவையாக 5000 மீ, 10,000 மீட்டர் ஓட்டத்தில் வெற்றி பெற்றார். கிழக்கு ஜெர்மனியின் பெண்கள் தடகளத்தில் 14—க்கு 9 தங்கப் பதக்கம் பெற்றனர். அத்துடன் நீச்சல் போட்டிகளில் 15—க்கு 11 தங்கப் பதக்கம் பெற்றனர். கிழக்கு ஜெர்மனி 90 பதக்கம். அதில் 40 தங்கம் முதலிடம் ரஷ்யா. அமெரிக்காவுக்கு மூன்றாவது இடம்தான்.

இருபத்திரண்டாவது — மாஸ்கோ ஒலிம்பிக்:

ஆண்டு 1980. முதன் முதல் ஒரு கம்யூனிஸ்ட் நாடான ரஷ்யாவில் நடைபெற்றது. மத்திய ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, மற்றும் ஆப்பிரிக்கா கண்டத்தின் ஏறத்தாழ 36 நாடுகள், சில அரசியல் காரணங்களுக்காக இதைப் பகிஷ்கரித்தன. அதற்கு முன்பு இப்படி நடந்ததில்லை. எனினும், மாஸ்கோ ஒலிம்பிக் ஒரு முழு வெற்றிதான். தடகளப் போட்டிகளில் 6 உலக சாதனைகள் மிஞ்சப்பட்டன. எதியோப்பியாவின் மிருத்ஸ்


இஃப்டருக்கு வயது 36. 6 குழந்தைகளின் தந்தை. எனினும், 5 ஆயிரம் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்றார். கிழக்கு ஜெர்மனியின் ஸிர்பிங்ஸ்கிக்கு நிகராகத் தொடர்ந்து இரண்டாம் தடவையாக மராதான் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்றார். சோவியத்தின் அலெக்சாந்தர் தித்யாதின் ஜிம்னாஸ்டிக்கின் எட்டு போட்டிகளிலுமே தங்கப் பதக்கம் பெற்றுப் புகழ் பெற்றார். வேறு எவரும் எந்த ஒலிம்பிக்கிலும், இப்படிப் பெற்றதில்லை. பாராத்தலின் போட்டிகளில் மொத்தம் 18 உலக சாதனைகள் முறியடிக்கப்பட்டன. இந்தியா இந்த ஒலிம்பிக்கில் 16 வருடங்களுக்குப் பிறகு ஹாக்கியில் தங்கப் பதக்கம் பெற்றது. இந்த ஒலிம்பிக் நடப்பதற்கு ஆறு மாதம் முன்பு தான் விடுதலை பெற்ற ஜிம்பாப்வே நாட்டின் பெண்கள் ஹாக்கி அணி, தமது முதல் ஒலிம்பிக்கிலேயே தங்கப் பதக்கம் பெற்றது. பிரிட்டன், ஸ்பெயின், ஆஸ்திரேலியா, சுவிட்ஜர்லாந்து பிரான்சு மற்றும் டென்மார்க் ஆகிய நாட்டு அரசாங்கங்கள், தம் நாட்டுக் கொடியை ஏற்றவும், கீதத்தை இசைக்கவும், தமது நாட்டு வீரர்களுக்கு அனுமதி வழங்கவில்லை. எனவே, அவர்கள் ஒலிம்பிக் கொடியை பறக்க விட்டனர். இருந்த போதிலும், துவக்க விழாவின் போது பார்வையாளர்கள் வரிசையிலிருந்த இரு அமெரிக்கப் பிரஜைகள் அமெரிக்கக் கொடியைப் பறக்க விட்டு விட்டனர். நமது ஸ்ரீராம்சிங் தவிர மற்றவர்கள் தடகளப் போட்டிகளில் சோபிக்கவில்லை. ரஷ்யா 197 பதக்கம்.

இருபத்து மூன்றாவது — லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்:

ஆண்டு 1984. இங்கு இரண்டாம் தடவையாக ஒலிம்பிக் நடந்தது. ஏற்கனவே 1932—ல் பத்தாவது ஒலிம்பிக் நடந்தது. ஏற்கனவே 1932—ல் பத்தாவது ஒலிம்பிக் நடந்தது. அதை விட இப்போது ஏற்பாடுகள் மிகச் சிறப்புப் பெற்றிருந்தன. கலந்து கொண்ட மொத்த வீரர்கள் 7078 பேர். வீரர்களின் பாதுகாப்புக்கு விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. இதில் சோவியத் ரஷ்யா கலந்து கொள்ளவில்லை. அமெரிக்கா 174 பதக்கம். சீனா, ஜப்பான் இரண்டும் மிகச் சிறப்பாகத் தமது திறமையைக் காட்டின. இந்தியாவின் பி.டி. உஷாவை மறந்து விட முடியாது. மே 6 ஆம் நாள் புராதன ஒலிம்பியா மைதானத்தில் சூரிய கிரணங்களிலிருந்து ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்டது. அங்கிருந்து நியூயார்க் சென்றது. அங்கிருந்து யார் அதிகப் பணம் தருகிறார்களோ அவர்கள் எடுத்துக் கொண்டு ஓடலாம் என்று ஏற்பாடு செய்தார்கள். அதற்கு எதிர்ப்பு ஏற்பட்டது. கமிட்டியினர் கூறிய சமாதானம் என்ன, தெரியுமா? ஊனமுற்ற விளையாட்டு வீரர்களின் நலனுக்காகத்தான் அத் தொகை பயன்படுத்தப்படப் போகிறது என்பதுதான். நியூயார்க்கிலிருந்து ஜோதி லாஸ் ஏஞ்சலிசை அடைய 82 நாட்கள் ஆயின. 14,600 கி.மீ. தூரம் கடந்தார்கள். இடையில் 33 அமெரிக்க மாநிலங்கள் வழியாக ஜோதி எடுத்துச் செல்லப்பட்டது. ஒலிம்பிக் வரலாற்றில், இத்தனை தூரம் ஜோதி எடுத்துச் செல்லப்பட்டதும் இல்லை; இத்தனை மாநிலங்கள் வழியாகவும் சென்றதில்லை.

இருபத்து நான்காவது — சியோல் ஒலிம்பிக்:

ஆண்டு 1988. குழந்தைகளே, இந்த ஆண்டு ஒலிம்பிக் வரும் செப்டெம்பர் 17—ல் தொடங்கி அக்டோபர் 2—ல் நிறைவடைய உள்ளது. அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் மிகவும் விரிவாக நடைபெற்று வருகின்றன. இது பற்றிய கதையை — அதாவது 'சியோல் ஒலிம்பிக்கின் கதை'யை அடுத்த மாத கோகுலத்தில் சொல்கிறேன். அது வரையில் பொறுமையாக இருங்கள். என்ன? சரிதானே?



ஆபத்தில் உதவிய ஆதிவாசிச் சிறுவன்!

கொ. மா. கோதண்டம்

அடர்ந்த வனம் சூழ்ந்த அந்த மலையின் மேல் ஒற்றையடிப்பாதையில் அவர்கள் ஏறிக் கொண்டிருந்தனர். முதலில் ஆதிவாசிச் சிறுவன் நீலனும், அவனுக்குப் பின்னால் போட்டோகிராபர் சுப்பையாவும், மூன்றாவதாக எஸ்டேட் உரிமையாளரின் மகன் செல்வமும் கடைசியில் தோட்ட ஏஜண்ட்டும் நடந்தனர்.

மலையில் பெரிய பெரிய தூண்களை நட்டதைப் போன்று மரங்கள் உயரமாக வளர்ந்திருந்தன. மரத்தின் கிளைகளும், அதிலுள்ள இலைகளும் மலையை மறைக்கக் கூரை வேயப்பட்டது போல அடர்ந்து செழித்திருந்தன.

இதனால் அங்கு சூரிய வெளிச்சம் குறைவாகவே இருந்தது. சிறு சிறு செடிகளில் வித விதமான பூக்கள் கண்ணைப் பறிக்கும் விதத்தில் பூத்திருந்தன. ''கீய்ய்'' என்ற சில் வண்டுகளின் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது.

'சில்'லென்ற குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. சருகுகளின் மீது கால் படும் போது எழும் சத்தம் 'சர சர'வென்று கேட்டுக் கொண்டிருந்தது.

நீலன் உதடுகளில் விரலை வைத்து அமைதியாக வரும்படி சைகை செய்து விட்டு மேலே சென்று கொண்டிருந்தான். தூரத்தில் ஏதோ சத்தம் கேட்கவே அவர்கள் நின்று கவனித்தனர். காட்டுக் கோழியைச் செந்நாய் ஒன்று துரத்திச் சென்றது. அவை ஓடிப் புதர்களில் மறைந்தன.

நீலன் பேசாமல் வரும்படி சைகை செய்தது செல்வத்திற்குப் பிடிக்கவே இல்லை. ஆனாலும், அந்தச் சூழ்நிலையில் கோபத்தை அடக்கிக் கொண்டு,

''சேவலைத் துரத்திட்டுப் போச்சே, அது என்ன?'' அதட்டலுடன் கேட்டான்.

''அது செந்நாய் சாமி, மலையிலே தான் இருக்கும்'' நீலன் பதில் சொன்னான்.

''சேவலைப் பிடுச்சிடுமா?''

''கட்டாயம் பிடுச்சுடும். பல நாய்கள் ஒண்ணு கூடித் தந்திரமாப் புலியைக் கூட பிடுச்சிக் கொன்னு போடும்.''

அப்போது பிடிபட்ட சேவலின் அலறல் சத்தம் தூரத்தில் பயங்கரமாகக் கேட்டது.

''அதோ பிடிச்சிருச்சு பாருங்க சாமி, இந்த இடத்திலே நாம சத்தம் போடாமே நடக்கணும். யானை ஏதாவது, மறைவிலே நின்னா ஆபத்து!'' என்றான்.

அவர்கள் அமைதியாக நடந்தனர்.

செல்வம் மூன்று நாட்கள் பள்ளிக்கூட விடுமுறையில் தோட்டத்திற்குப் போய் வர வேண்டும், அழகான இடங்களில்தான் நின்று புகைப்படங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தந்தையிடம் கேட்டு ஒரு போட்டோகிராபரையும் கூட அழைத்துக் கொண்டு வந்தான். உதவிக்குத் தோட்டத்து ஏஜண்ட்டையும் கூட்டிக் கொண்டான்.

இடையில் சிற்றாறு குறுக்கிட்டது. அதில் தண்ணீர் 'சலசல'வென்று பாய்ந்து கொண்டிருந்தது.



"இங்கே கொஞ்சநேரம் உட்கார்ந்து சாப்பிட்டுக் கூடப் போகலாமே" என்றார் தோட்டத்து ஏஜண்ட்.

எல்லோரும் பாறைகளில் அமர்ந்திருந்தனர். "இங்கே ஒரு படம் எடுக்கலாமே" என்றார் போட்டோகிராபர் சுப்பையா.

பின்னால் மலையும், வனமும் அழகாகத் தெரிகிறாற் போல ஓர் இடத்தைத் தேர்வு செய்து செல்வத்தை அங்கு அழைத்தார்.

செல்வம் தனியாகவும், அனைவரும் கூட இருந்தும் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர். ஏஜண்ட் நீலனையும் போட்டோவிற்கு அழைத்த போது, செல்வம் அவரை முறைத்தான்.

அவர் கண்ணாலேயே அவனைச் சமாதானம் செய்தார். பின் தன் பையிலிருந்த இட்டிலிப் பொட்டலங்களை எடுத்து ஆளுக்கு ஒன்று கொடுத்தார். அவர்கள் பாறைகளில் அமர்ந்து சாப்பிட்டனர். நீலன் இட்டிலியை ஆவலுடன் சாப்பிட்டான். செல்வம், தன் பையிலிருந்த பிஸ்கட்களை எடுத்து ஆளுக்கு மூன்று கொடுத்தான். நீலனுக்கு பிஸ்கட் தரவில்லை என்றறிந்த ஏஜண்ட் தமது பிஸ்கட்களை அவனுக்குத் தந்து விட்டார்.

சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டு அவர்கள் மலை ஏறி நடந்தார்கள். மலைவனத்தின் அந்த ஒற்றையடிப் பாதை வளைந்து நெளிந்து மலைப் பாம்பு போல நீண்டு கிடந்தது.

பாதை ஓரத்தில் கண்ட முள் கொடிகள் மேலே படாமல் அவர்கள் குனிந்தும் சாய்ந்தும் சென்று கொண்டிருந்தனர்.

மேகமூட்டம், பஞ்சுப் பொதிகளாய்ப் பாதையை மறைத்தது. அவர்கள் சிறிது நேரம் அங்கு நின்றனர். மெல்லிய தூறல் விழத் துவங்கியது. அவர்கள் ஆளுக்கொரு துண்டுகளைத் தலையில் போட்டுக் கொண்டார்கள்.

"மழையில் நான் நனைந்தால் ஒன்றும் செய்யாது" என்று நீலன் கூறி விட்டுச் சாரலில் நனைந்தான். தூறல்



நின்றதும் புறப்பட்டனர்.

ஓரிடத்தில் மரங்கள் அடர்ந்த பகுதி முடிந்து, 'போதைதிரடு' வர ஆரம்பித்தது. நூல் பிடித்து நட்டதைப் போன்று மரங்கள் இயற்கையாகவே ஒரே வரிசையாக வளர்ந்து, பார்ப்பதற்கு அழகாகத் தோற்றமளித்தன.

அந்தப் பகுதியில் இடுப்பளவு போதைப்புல் செழிப்பாக வளர்ந்திருந்தது. கடலில் அலையடிப்பதைப் போல காற்றுக்கு அசைந்து கொண்டிருந்தது. அவர்கள் அங்கே நின்று இயற்கை அழகை ரசித்துக் கொண்டிருந்தனர். பின்னர் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர். 'புறப்படுவோமா?' என்றார் தோட்ட ஏஜண்ட். நீலன் ஓர் இடத்தைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீலா, அப்படி அங்கே என்ன பார்க்கிறாய்?" அவன் தூரத்தே கையை நீட்டி ஓர் இடத்தைக் காட்டினான். அந்த இடத்தில் புல்லின் இடைவெளி ஏற்பட்டு அது அசைவது போலத் தெரிந்தது.

"என்னப்பா அது, என்னவா இருக்கும்?" ஏஜண்ட் கேள்வியில் பதற்றம் தெரிந்தது.

அவன் பேசாமல் இருக்குமாறு சைகை செய்து விட்டு ஒரு மரத்தில் தாவி ஏறினான். அங்கிருந்து பார்த்து விட்டு, விடுவிடுவென்று கீழே இறங்கினான். எல்லோரும் அருகே சென்றனர்.

"சாமி, கரடி வருது. உடனே எல்லோரும் மரத்திலே ஏறிடுங்க" என்றான்.

"ஐய்யோ! எனக்கு மரமேறத் தெரியாதே!" என்றான் செல்வம்.

நீலன் உடனே குனிந்து, தன் தோள்களில் ஏறிக் கிளையைப் பிடித்துக் கொள்ளுமாறு சொன்னான். அவனைத் தொடவே கூச்சமடைந்த செல்வம், வேறுவழியின்றித் தோள்களில் ஏறிக் கொண்டான்.

செல்வத்தைச் சுமந்தபடி நீலன் மரத்தில் ஏறினான். ஒரு கிளையில் அவனை உட்கார வைத்தான். இதற்குள் ஏஜண்ட்டும், போட்டோகிராபரும் ஆளுக்கொரு மரத்தில் ஏறியிருந்தனர்.

கிளையில்லாத தூண் போன்ற பெரிய மரத்தில் பாதியளவு ஏறிய போட்டோகிராபரின் கால்கள் நடுங்கின. அவர் உடும்பு போலக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

புல்திரடு முடிந்ததும், கரடி இவர்கள் ஏறியிருந்த மரங்களின் கீழே வந்து நின்றது. மரங்களைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தது. ''கும்கும் கும்கும்'' மென்று உறுமியது.

கன்னங்கரேல் என்று ரோமம் அடர்ந்த கரடி எழுந்து நின்றால், ஆளுயரத்திற்கு மேல் இருக்கும் போலத் தெரிந்தது. பயத்தினால் ஒருவரும் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.

உயரமில்லாத கிளையில் இருந்த செல்வம், கரடி இங்கு ஏறிவிடுமோ எனப் பயந்து மேலே ஏற முயன்றான். கால் நழுவிக் கீழே விழுந்தான். கரடி அவனருகே ஓடி வந்தது. உடனே நீலன் ''ஓ...' வென்று சத்தமிட்டவாறே சரியாகக் கரடியின் முதுகில் விழுந்து கீழே உருண்டான்.

'கும்கும்' என்று அலறிய கரடி பின்னால் இருந்த புல் திரட்டில் ஓடி மறைந்தது. அவசர அவசரமாக ஏஜண்ட்டும், போட்டோகிராபரும் இறங்கி ஆளுக்கொருவனைத் தூக்கினார்கள்.

உடனே நீலன் ஓடிச் சென்று ஊற்றில் இரண்டு கைகளாலும் தண்ணீர் கொண்டு வந்து மூர்ச்சித்திருந்த செல்வத்தின் முகத்தில் தெளித்தான். செல்வம் கண்களைத் திறந்து பார்த்தான்.

அப்படியே, நீலனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

''நீலா, நான் உன்னை ரொம்ப அலட்சியப்படுத்தினேன். நீ என் உயிரையே காப்பாத்திட்டே. என்னை மன்னிச்சிடு'' என்ற செல்வத்தின் கண்களில் கண்ணீர் பெருகியது.

''என்னை நம்பித்தானே சாமி நீங்க இங்கே வந்தீங்க? உங்களைப் பாதுகாக்கிற பொறுப்பு எனக்கிருக்குமில்லே. இதைப் பெரிசா நினைக்காதீங்க'' என்றான் நீலன்.

''ஆமா, நீ என்ன நோக்கத்திலே கரடி மேலே குதிச்சே?'' என்றார் போட்டோகிராபர்.

''சாமி, கரடிக்கு மென்மையான இதயம். அது அதிர்ச்சியைத் தாங்காது. ஓ....ன்னு பலமாச் சத்தம் போட்டாலே அது பயந்து ஓடிப் போயிடும். அதை நினச்சுத்தான் அது மேலேயே குதிச்சேன். சத்தத்தோட திடீர்னு அது மேலே நான் விழுந்ததும், நம்மைக் கொல்லத்தான் வந்திருக்கான்னு அது பயந்து ஓடிப் போச்சு.''

'நீலன் சொன்ன விஷயம் இவ்வளவு காலம் நமக்குத் தெரியாமல் இருந்திருக்கிறதே!' என்று நினைத்த தோட்ட ஏஜண்ட்டுக்கு அது ஓர் அதிர்ச்சியாகவே இருந்தது.

கண்ணன் வருகிறான்

கண்ணில் காணும் பொருள்களிலெல்லாம்
கண்ணன் இருக்கின்றான்! — நாம்
விண்ணில் பார்க்கும் நிறங்களிலும் அவன்
நிறைந்தே சிரிக்கின்றான்!

உள்ளம் என்ற கோவிலிலே அவன்
வாழ்ந்திட வருகின்றான்! — நம்
வெள்ளை மனத்தைப் பாற்கடலாக்கிப்
பள்ளி கொள்கின்றான்!

கண்ணின் முன்னே அவனை நிறுத்திக்
களிப்புடன் துதித்திடுவோம்! — மனப்
புண்கள் எல்லாம் மறைந்திட அருளை
மழையாய்ப் பொழிந்திடுவான்!

— அம்மாபேட்டை கிருஷ்ணப்ரியா,
தஞ்சாவூர்.



மீ-நாம் நதியின் நாகம்

சயாமிக் கதை

இப்போது தாய்லாந்து என்று அழைக்கப்படுகிற தேசத்திற்கு ஒரு காலத்தில் சயாம் என்ற பெயர் வழங்கி வந்தது.

அந்த தேசத்தின் மிகப் பெரிய நதி மீ—நாம். சயாம் நாட்டின் வடக்கே உள்ள சாந்தபூர்யா மலைகளில் உற்பத்தியாகி, சியாமி என்கிற பெரிய ஏரியில் நிரம்பி, பிறகு சமவெளிக்கு வருகிறது அந்த நதி.

சமவெளியில் பல மைல் தூரத்தைக் கடந்து கடைசியில் பல கிளைகளாகப் பிரிந்து கடலில் கலக்கிறது.

அந்த நதியில் எப்போதும் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கும். ஆனால், பெரிய வெள்ளமாக வந்தால்தான் வயல்களில் தண்ணீர் ஏறும்; மேடான இடங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும்.

அப்படி வெள்ளம் வந்தால்தான், வயல்கள் விளையும்; எல்லோருக்கும் உண்ணச் சோறு கிடைக்கும்.

ஆகவே, ஒவ்வொரு ஆண்டும் அந்த நதியில் எப்போது வெள்ளம் பெருகும் என்று அந்தத் தேசத்து மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டே இருப்பார்கள்.

மீ—நாம் நதியும் தவறாமல் பெருகி வந்து அவர்களுடைய வயல்களைச் செழிப்பாக்கி விட்டுச் சென்று கொண்டிருந்தது.

இதனால், சயாமிய மக்கள் மீ—நாம் நதியைத் தெய்வமாகவே மதித்துப் போற்றி வந்தார்கள்.

இப்படிப் பல தலைமுறை காலமாக நடந்து வந்தது. ஆனால், காலம் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பது இல்லை; இல்லையா?

ஒரு வருஷம் நதியில் வெள்ளம் பெருகி வரவில்லை. 'வரும், வரும்' என்று பல நாட்கள் காத்திருந்தும் வரவில்லை. சயாம் தேசமே கதி கலங்கி விட்டது.

'ஏதோ விபரீதம் நடந்து விட்டது — நதிக்கு ஏதோ கோபம் வந்து விட்டது!' என்று எல்லோரும் முடிவு செய்து விட்டார்கள்.

அப்போது சயாமை ஆண்டு வந்த சக்கரவர்த்தி மந்திராலோசனை சபையைக் கூட்டினார்.

பெரிய தளபதிகள், அமைச்சர்கள், குருமார்கள், எல்லோரும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

வெகுநேரம் காரசாரமாக விவாதம் நடந்த பிறகு சக்கரவர்த்தி அவர்களிலிருந்துநான்குபேரைப்பொறுக்கி எடுத்து, அவர்களை, 'எது தண்ணீரை விடாமல் தடுத்திருக்கிறது' என்று கண்டறிந்து வரச் சொன்னார்.

அந்த நாலு பேர் குழுவிலே ஓர் அமைச்சர், ஒரு தளபதி, இரண்டு குருமார்கள் இருந்தார்கள்.

அவர்கள் சமவெளிகளைக் கடந்து மலை மீது ஏறி இருண்ட கானகத்திடையே பயணம் செய்தார்கள். கடைசியில் சியாமி ஏரிக்கரைக்கு

தமிழில்: சந்திரநாத் *



வந்து சேர்ந்தார்கள்.

ஏரியிலே தண்ணீர் நிரம்பிப் பல மைல் தூரத்திற்குக் கடல் போல விரிந்து கிடந்தது.

அந்தக் கரு நீலத் தண்ணீரின் அடியில் சடை சடையாக நீர்க் கொடிகள் தலையாட்டின. அழுகின இலைகளால் எழுந்த துர்நாற்றம், மூக்கைத் துளைத்தது.

குருமார்கள் ஏரிக்குப் பூஜைகள் செய்தார்கள். மந்திரங்களை உரக்கச் சொல்லிப் பூக்களை மிதக்க விட்டார்கள்.

''நதி தெய்வமே! உனக்கு எங்கள் மீது என்ன கோபம்? என்ன குறை உனக்கு? என்ன வேண்டும் சொல்லு...'' என்று வேண்டினார்கள்.

சிறிது நேரம் நதி ஏந்த பதிலும் சொல்லவில்லை. கடல் போலப் படர்ந்திருந்த கருநீலத் தண்ணீர் அமைதியாக இருந்தது.

ஆனாலும், அந்தப் பெரிய நீர்ப் பரப்பின் அடியில் இருந்து யாரோ தங்களைக் கூர்ந்து கவனிப்பதாக அவர்கள் உணர்ந்தார்கள்.

''நதியின் காவலனான பிரபுவே! சொல்லுங்கள்! என்ன வேண்டும் உங்களுக்கு'' என்று மறுபடியும் கேட்டார்கள்.

சற்று நேரம் கழித்து நதியின் நீர் மெதுவாக அசைந்தது. எதுவோ நீருக்குள் கறுப்பாக, நீளமாக அசைந்தது. பிறகு, லேசாகத் தலையை நீருக்கு மேலே தூக்கிற்று.

பெரிய குகைகளைக் கொண்ட ஒரு பெரிய பாறை மேலே வருவது போல இருந்தது. அந்தக் குகைகள் மூக்குகளே என்று, அதிலிருந்து 'புஸ்புஸ்' என்று வந்த உஷ்ணமான காற்றிலிருந்து பிறகுதான் தெரிய வந்தது. அந்த மூக்குகளுக்குப் பக்கத்தில் பெரிய கண்கள் தெரிந்தன. பிறகு, ராட்சசப் பற்களுடன் கூடிய ஒரு பெரிய வாய் மேலே வந்தது.

அதன் நீண்ட பெரிய உடம்பு வெகு தூரம் வரையில் ஏரியில் நீண்டு கிடந்தது.

ராட்சசப் பாம்பு தன் வாலை இரண்டு தடவை 'பட், பட்' என்று நீரில் அடித்தது. இதனால் அரைப் பனை உயரத்திற்குத் தண்ணீர் தெறித்து விழுந்தது.

கரையிலே நின்ற நான்கு பேரும் அதற்கு முன் இவ்வளவு பெரிய ராட்சசப் பாம்பைப் பார்த்ததே இல்லை. அவர்கள் நடுநடுங்கிக் கொண்டு நின்றார்கள்.

பாம்பு இடி போன்ற குரலில் சொல்லிற்று. ''நான்தான் இந்த ஏரியின் ராஜா — என்ன வேண்டும் உங்களுக்கு!''

''இந்த நதியின் நீர்தான் எங்களுக்குச் சாப்பாடு போடுகிறது. இது இப்போது தடைப்பட்டு விட்டது'' என்றார் தலைமைக் குரு.

''நான்தான் அதைத் தடுத்து விட்டேன்'' என்றது ராட்சதப் பாம்பு, கர்வத்துடன்: ஏரியிலிருந்து தண்ணீர் போகிறவழியில்என் வாலின்கடைசிப் பகுதியைப் போட்டு அடைத்து விட்டேன்'' என்றது.

''நீங்கள் எங்களிடம் என்ன எதிர் பார்க்கிறீர்கள்?''

''ஆடுகள் — வருஷத்திற்கு ஆறு கொழுத்த ஆடுகள். இந்த நீர் வாழ் பிராணிகளைத் தின்று தின்று எனக்கு அலுத்துப் போய் விட்டது.

''தாங்கள் எதைக் கேட்டாலும் தருகிறோம்''


''அப்படியானால் கவனமாகக் கேளுங்கள். ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் முதல் வாரத்தில் அதோ அந்த மரத்தடியில் ஆறு கொழுத்த ஆடுகளைக் கொண்டு வந்து கட்டி வையுங்கள். அவைகளை விழுங்க நான் தண்ணீரை விட்டு வெளியே வருவேன். என் வாலும் அடைப்பை விட்டு விலகி விடும். தண்ணீர் ஆற்றில் வெள்ளமாகப் பெருகும்.''

''அது போதும் நதியின் ராஜாவே'' என்றார்கள் நால்வரும்.

''எந்த ஒரு வருஷத்திலாவது ஆடுகள் வராவிட்டால் நீரை விடாமல், உங்களைப் பட்டினி போட்டு விடுவேன்.''

''ஒரு வருஷம் கூடத் தவற மாட்டோம்'' என்றார்கள் நாலு பேரும்.

''ஆடுகளைக் கட்டி விட்டுத் திரும்பிப் பார்க்காமலே போய் விட



வேண்டும்.''

''திரும்பிப் பார்க்க மாட்டோம்.''

''இது என் கட்டளை. உங்கள் சக்கரவர்த்தியிடம் போய்ச் சொல்லுங்கள்—'' என்று சொல்லி விட்டுச் 'சரக்' கென்று தன் பிரம்மாண்டமான தலையைத் தண்ணீருக்குள் இழுத்துக் கொண்டு மறைந்து விட்டது பாம்பு.

2

குருமார்களின் குழு திரும்பி வந்து சக்கரவர்த்தியிடம் எல்லாவற்றையும் சொன்னார்கள்.

''ஆறு ஆடுகள்தானே வேண்டும் என்கிறது. அது ஒன்றும் பிரமாதமில்லை. அடுத்த மாதம்தானே செப்டம்பர்? ஆடுகளைத் தயார் செய்யுங்கள். பெரிய ஊர்வலமாகவே கொண்டு போய்க் காட்டுவோம். நானே நேரில் வந்து இந்த வருஷத்துப் பலியைச் சமர்ப்பிக்கிறேன்'' என்றார் சக்கரவர்த்தி.

குறித்த நாளில் எல்லாம் சித்தமாகி விட்டன. சக்கரவர்த்தி தாமே கோயிலுக்கு வந்து ஆடுகளுக்கு மாலைகளிட்டு, பூஜைகள் செய்தார்.

பிறகு அவைகளை ஒரு ராஜ படகில் ஏற்றிக் கொண்டு நதியில், மலையடிவாரத்தை நோக்கிச் சக்கரவர்த்தி கிளம்பினார்.

அவருடைய அமைச்சர்களும், தளபதிகளும் குருமார்களும் அவரவர் படகுகளில் ஏறிப் பின் தொடர்ந்து போனார்கள். இரு கரைகளிலும் மக்கள் கூடி நின்று வாத்தியங்களை வாசித்து, ஆடிப்பாடி, ஆடுகளை வழி அனுப்பினார்கள்.

நதியின் நீரை எதிர்த்துக் கொண்டு படகுகள் பயணமாயின. சமவெளியைக் கடந்ததும், இந்தப் பலி ஊர்வலம் கரையில் இறங்கி, கால்நடையாக மலை மீது ஏறிச் சென்றது.

சியாம் ஏரிக் கரையை அடைந்ததும், நதிக்குப் பெரிய பூஜை நடந்தது. பிறகு ஆடுகளை ராட்சச நாகம் குறிப்பிட்ட மரங்களில் கட்டி விட்டு, சக்கரவர்த்தி, தம் பரிவாரங்களுடன் திரும்பி விட்டார்.

ராட்சச நாகம் எப்போது கரைக்கு வந்தது, எப்படி இரைகளைத் தின்றது என்பதெல்லாம் யாருக்கும்

தெரியாது.

ஆனால், இதற்கு மூன்றாம் நாள், மீ—நாம் நதியில் வழக்கம் போல வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி வந்தது. சயாம் எங்கும் இருந்த வயல்கள் நீரால் நிரம்பின. நாற்றுகள் நீரை உண்டு செழித்து வளர்ந்தன. நெல்லும் தானியங்களும் அமோகமாக விளைந்தன. மக்கள் மகிழ்ச்சியும் நிம்மதியும் அடைந்தார்கள்.

இப்படியே பல ஆண்டு காலம் தொடர்ந்து நடந்து வந்தது. ராட்சச நாகத்திற்குச் சயாமிய மக்கள் ஆறு ஆடுகளை ஆண்டுதோறும் பலியாகக் கொடுத்து வந்தார்கள். ராட்சச நாகமும் வாக்குத் தவறாமல் நதியில் நீர் விட்டு வந்தது.

இந்த ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் ஆறு ஆடுகளைக் கொடுப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. ஆடுகளும், படகுகளும் தயாராகி விட்டன.

ஆனால், சக்கரவர்த்தியால் கிளம்ப முடியவில்லை. அவர் ஒரு பெரிய பிரச்னையில் சிக்கிக் கொண்டிருந்தார்.

''நான் எப்படி வர முடியும், அமைச்சரே?'' என்றார் சக்கரவர்த்தி பரிதாபமாக.

அவருக்கு ஏழு பெண்கள். கடைக்குட்டியின் பெயர் பீ—லின். பொம்மை மாதிரி அழகாக இருப்பாள். அவள் அரச குடும்பத்திற்கு ஒவ்வாத ஒரு காரியத்தைச் செய்து விட்டாள். ராஜ குடும்பத்துப் பெண்ணான அவள் ஒரு சாதாரண ஆளை மணக்கத் தீர்மானித்து விட்டாள்.

''இது தப்பில்லையா?'' என்றார் சக்கரவர்த்தி.

''ஆனால், ஹிடெகி சாதாரண ஆள் அல்ல — மகாவீரன்'' என்றார் அமைச்சர் சூகூ.

''ஆனாலும், அவன் அரண்மனைக் காவல் படையின் காப்டன்தானே — ராஜ ரத்தம் இல்லையே!'' என்றார் சக்கரவர்த்தி.

''இளவரசி இன்னமும் பிடிவாதமாகத்தான் இருக்கிறாரா?'' என்று கேட்டார் சூகூ.

''நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன். அவள் அவனை மறப்பதாக இல்லை. இந்த மாதிரி விவகாரத்தில் தண்டனை எப்படி இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும், அல்லவா?'' என்றார் சக்கரவர்த்தி.

''தெரியும், பிரபுவே!'' என்று சொன்ன போது சூகூவின் குரல் நடுங்கிற்று. ''இருவருக்கும் மரண தண்டனை.''

''ஆமாம் — அதுதான்'' என்றார் சக்கரவர்த்தி.

''ஆனால், அவள் ராஜகுமாரி அல்லவா? அவளுக்குமா அந்தத் தண்டனை?''

''சட்டம் எல்லோருக்கும் ஒன்றுதான்'' என்றார் சக்கரவர்த்தி கம்பீரமாக. ''என் மகள் என்பதற்காக யாரும் தப்பி விட முடியாது.''

சக்கரவர்த்தி தங்க இழை மின்னும் தம் அங்கவஸ்திரத்தை அள்ளித் தோளில் போட்டுக் கொண்டு ஜன்னலை நோக்கி நடந்தார்.

வெளியே பார்த்தார். கீழே தோட்டத்தில் ஏராளமான மலர்ச் செடிகள் பூத்து 'கம்'மென்று மணம் வீசிக் கொண்டிருந்தன. அரண்மனை வாத்திய கோஷ்டி உற்சாகமாக வாசித்துக் கொண்டிருந்தது.


ஒரு நிமிஷம் அதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினார் சக்கரவர்த்தி.


''நான் தீர்மானம் செய்து விட்டேன், சூ—கூ, அவர்கள் இருவருமே சாவைத் தழுவ வேண்டியதுதான்'' என்றார்.

ராமு: நீ வீட்டுப் பாடத்தை ஸ்கூல்ல எழுதுவியா? வீட்டிலே எழுதுவியா? எங்கே எழுதுவாய்?

சோமு: இரண்டிலும் இல்லை. நோட்டிலே தான் எழுதுவேன்.

— ஆர். கே. அருள்செல்வன்.





சூ—கூ வேதனையுடன் சிறிது நேரம் பேசாமல் நின்றார். பிறகு, மெதுவாக, ''மேன்மை தங்கிய இளவரசி இப்போது எங்கே இருக்கிறார்?'' என்று கேட்டார்.

''அந்தப் பயல் ஹிடெகி அவனுடைய வீட்டிலும், அவள் தன் அறையிலும் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். பீ—லின்னுடன் அவள் செல்லமாக வளர்க்கும் பர்மியப் பேசும் பூனையும் இருக்கிறது'' என்றார் சக்கரவர்த்தி.

''ஓ, அந்தப் பூனையா? நீலக் கண்களுடன் கறுப்புக் காதுகளுடன், பழுப்பு நிறமாக இருக்குமே'' என்றார் சூ—கூ.

''அதேதான். யாரோ சீன வியாபாரி கொடுத்தானாம்'' என்றார் சக்கரவர்த்தி. பிறகு 'சூ—கூ' என்று அழைத்துத்துயரத்துடன்சொன்னார். ''சூ—கூ, பலி ஊர்வலம் சியாமி ஏரிக்குப் போய், ஆடுகளைக் கொடுத்து விட்டு வந்ததும், இவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றி விட வேண்டும்'' என்றார்.

அப்போது வெளியே பெரிதாக யாரோ கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்கிற சத்தம் கேட்டது. சில நிமிடங்களில் ஒரு கதவு திறந்தது. ஒரு காவலாளி உள்ளே வேகமாக வந்து வணங்கினான்.

''பெருமானே! வாசலில், எப்படியோ ஒரு கிழ விவசாயி உள்ளே வந்து விட்டான். உங்களிடம் ஏதோ முக்கியமான சமாசாரம் உடனே சொல்ல வேண்டும் என்கிறான்'' என்றான்.

அப்போது மறுபடியும் கூச்சல் கேட்டது. ''கடவுள் மீது ஆணை — அவரைப் பார்க்க விடுங்கள்'' என்று யாரோ கத்தினார்கள்.

''சரி, அழைத்து வா, அவனை'' என்றார் சக்கரவர்த்தி. அடுத்த இரண்டாவது நிமிஷம் ஒரு வயதான குடியானவன் உள்ளே ஓடி வந்து சக்கரவர்த்தியின் முன் மண்டியிட்டான். அவன் முதுகில் ஒரு வைக்கோல் தொப்பி தொங்கியது.

''பிரபுவே!'' என்று கதறினான் அவன். ''நான் தலைவலிக்கு மூலிகைகளைத் தேடி சாந்த பூர்யா மலைக்குப் போயிருந்தேன். சியாம் ஏரிக் கரையில் மூலிகைகளைத் தேடி அலைந்து கொண்டிருந்த போது, ஏரி

யில் யாரோ தண்ணீரை பலமாக அறைவது போலிருந்தது. பயந்து போனேன். பிறகு ஒரு பெரிய நாகத்தின் தலை மேலே வந்தது. அதைப் பார்த்ததும் என் மூச்சே நின்று விடுவது போலாகி விட்டது'' — என்று நிறுத்தினான்.

சக்கரவர்த்தி திரும்பி கூ—கூவைப் பார்த்தார். கூ—கூ, ''மேலே நடந்ததைச் சொல்'' என்றார்.

''அந்த நாகம் இடி போன்ற குரலில் என்னுடன் பேசிற்று. 'ஏ, மனிதா — நீ தலை நகரத்திற்குப் போகிறவன் தானே? நான் இப்போது சொல்கிற செய்தியை உங்கள் சக்கரவர்த்தியிடம் போய்ச் சொல். எனக்கு ஆடுகள் அலுத்து விட்டன. இந்தத் தடவை எனக்கு மனித பலி வேண்டும். மனித பலி தரவில்லை என்றால் இந்த வருஷம் ஆற்றில் வெள்ளம் வராது. இதைப் போய்ச் சொல்லிவிடு'' என்று சொல்லி விட்டு தண்ணீரில் மூழ்கி மறைந்து விட்டது'' என்றான் குடியானவன்.

''மனித பலியா! கடவுளே'' என்று கூவினார் கூ—கூ. ''இது என்ன கொடுமை'' என்றார். சக்கரவர்த்தியின் முகத்தைப் பார்த்தார்.

சக்கரவர்த்தியின் முகம் இறுகிக் கிடந்தது. ''கூ—கூ! ஒரு பலி என்ன? இரண்டு மனித பலியாகவே கொடுப்போம். அந்த ராஜத் துரோகிகள், ஹிடெகியையும் பீ — லின்னையும் நாளைக்கே பாதுகாப்புடன் அழைத்துக் கொண்டு போய் ஏரிக்கரையில் கட்டிப் போட்டு விட்டு வரச் செய்யுங்கள்'' என்று உத்திரவிட்டார்.

3

பீ—லின் சோகமாக உட்கார்ந்திருந்தாள். தூரத்திலிருந்து பார்க்கும் போது ஓர் அழகுப் பதுமை உட்கார்ந்திருப்பது போலிருந்தது.

அவள் காலடியில் அவளுடைய செல்லமான பர்மியப் பூனை உட்கார்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தது.

''எவ்வளவு அழகான பெண் என் யஜமானி! இவளுக்கா இந்த கதி?'' என்று வருந்தியது அது.

மெதுவாக அவள் காலை உராய்ந்து, உடம்பை அவள் மீது அன்புடன் தேய்த்தது.

பீ—லின் அதைத் திரும்பிப் பார்த்தாள். ''என்ன!'' என்று கேட்டாள். பூனையின் கண்களில் நீர் வழிந்தது.

''உன் கதியை நினைத்தேன். தாள முடியவில்லை'' என்றது பூனை.

''இதுவும் நல்லதற்குத்தான்'' என்றாள் பீ—லின்.

''என்ன நல்லது இதில்?'' என்று கோபமாகக் கேட்டது பூனை.

''இந்த மாதிரி, காதலித்ததற்காக, மரண தண்டனை விதித்ததை நான் கேட்டதில்லை. ஆனால், என்னுடைய மரணத்தால் இந்த தேசம் முழுவதற்கும் நன்மை விளையப் போகிறதே! அதை நீ எண்ணிப் பார்க்கவே இல்லையே! ஆற்றிலே வெள்ளம் பெருகி வருமே — அதற்காக உயிரைக் கொடுப்பது எத்தனை பெருமைப்பட வேண்டிய விஷயம்!''

''அந்த நாகத்தை நீ பார்த்திருக்கிறாயா? நீ பார்த்திருக்க முடியாது. நான் பார்த்திருக்கிறேன். அதன் நாக்கு இரண்டாகப் பிளந்திருக்கிறது. அது தெரியுமா, உனக்கு?'' என்று கேட்டது மாங்குட்.

''அதனால் என்ன?'' என்றாள் இளவரசி.

''ஒரு நாக்கு உள்ளவர்களே தங்கள் வாக்கைக் காப்பாற்றுவதில்லையே — பிளந்த நாக்கு நாகம் மட்டும் காப்பாற்றும் என்று நினைக்கிறாயா? நிச்சயமாகக் காப்பாற்றாது. விஷ நாக்குக் காரனல்லவா, அது? முதலில் ஆடுகளைக் கேட்டது; இப்போது நிபந்தனையை மாற்றிக் கொண்டு, மனிதனைக் கேட்கிறதே! இந்தப் பலியோடு அது திருப்தியடைந்து விடும் என்பது என்ன நிச்சயம்? அடுத்த வருஷம் மூன்று பலி, நான்கு பலி என்று கேட்டுக் கொண்டே போனால் — உங்கள் இருவர் தியாகமும் வீணாக அல்லவா போய்விடும்?'' என்றது மாங்குட்.

''எப்படி இருந்தாலும் நாங்கள் சாக வேண்டியவர்கள்தானே?'' என்றாள் இளவரசி.

''அதுவும் முட்டாள்தனம்'' — என்றது மாங்குட். ''இது தேச விசுவாசமா, ராஜ விசுவாசமா?'' என்று கேட்டது.



''முட்டாள் நாட்டிடமும், மூட அரசனிடமும் எந்தப் பிரஜையும் கட்டுப்பட்டிருக்கும்படி எந்த நீதி சாத்திரமும் சொல்லவில்லை'' என்றது.

''என்ன சொல்கிறாய் நீ?'' என்று நிமிர்ந்து உட்கார்ந்தாள் இளவரசி. அவள் கண்களில் புதிய ஒளி வீசியது.

''புரியவில்லையா, உனக்கு? தேசத்திற்காகக் கொஞ்சம் மூளையை உபயோகித்துப் பெரிய சேவை செய்யலாம்; அதற்கு விலையாகக் காதலையும் ராஜ்யத்தையும் பெறலாம். அப்படித்தான் உலகத்திலே எல்லா தேசங்களிலும் மாவீரர்கள் செய்கிறார்கள்'' என்றது மாங்குட்.

''கொஞ்சம் புரியும்படி சொல்லேன்'' என்றாள் இளவரசி. ''தேசத்திற்குத் தண்ணீரைக் கொடுப்போம்-தேசம் உங்களுக்கு உயிரைக் கொடுக்கட்டும்'' என்றது மாங்குட்.

''எப்படி?''

''கிட்ட வா, சொல்கிறேன்''

இளவரசி மண்டியிட்டு அமர்ந்தாள். மாங்குட் எழுந்து நின்று அவள் காதில் ஏதோ சொல்லிற்று. அவள் முகம் மலர்ந்தது. ''சரிதானா?'' என்று கேட்டது மாங்குட்.

''எல்லாம் நல்லபடியாக நடந்தால் சரிதான்'' என்றாள் இளவரசி.

''நல்லபடியாக நடக்கும். கவலைப்படாதே. விதியை மதியால் வெல்லலாம் — நான் இப்போதே காப்டனைப் பார்க்கப் போகிறேன் — அவரிடம் ஏதாவது சொல்ல வேண்டுமா?'' என்று கேட்டது மாங்குட்.

''சாவிலும் அவர் பக்கத்தில் இருப்பேன் என்று சொல்லு'' என்றாள் இளவரசி.

4

மறுநாள் காலை ஏரி — நாகத்திற்கு இரண்டு மனித பலி கொடுக்கப் போவது பற்றிய செய்தியை முரசு அறைபவர்கள் நகரமெங்கும் அறிவித்துக் கொண்டே போனார்கள்.

''இளவரசியையும் காப்டன் ஹிடெகியையுமா? இது என்ன கொடுமை?'' என்று எல்லோருமே வருந்தினார்கள். அவர்கள் இருவரையும் ஊரே நேசித்தது.

ஆனாலும், இது அநியாயம் என்று பகிரங்கமாகச் சொல்ல யாருக்கும் துணிவு வரவில்லை.

குறிப்பிட்ட நாள் வந்தது. இளவரசியையும் ஹிடெகியையும் அழைத்துக் கொண்டு வீரர்கள் கிளம்பினார்கள்.

மாங்குட்டும் அவர்கள் பின்னால் போயிற்று.

மீநாம் நதியில் படகில் ஏறிச் சம வெளியைக் கடந்து, மலை அடிவாரத்திற்கு எல்லோரும் வந்து சேர்ந்தார்கள்.

பிறகு, மலை மீது ஏறி அடர்ந்த காடுகளையும் ஓடைகளையும், புதர்களையும் தாண்டிக் கொண்டு சென்றார்கள்.

இளவரசியையும் ஹிடெகியையும் அழைத்துச் சென்ற குழுவில் ஏழெட்டு வீரர்கள்தான் இருந்தார்கள். அந்தக் குழுவுக்கு இப்போது தலைமை தாங்கியவன், முன்பு ஹிடெகியிடம் பணி புரிந்தவன். அவன் முன்னாள் தலைவனிடம் கடுமையாக நடந்து கொள்ள விரும்பவில்லை. நாகாஜி என்பது அவன் பெயர். வீரர்களும் நாகாஜியும் இளவரசியையும் ஹிடெகியையும் மிகவும் நேசித்தார்கள். அவர்களுக்கு இந்த வேலையில் இஷ்டமே இல்லை. சக்கரவர்த்தியின் கட்டளையை மீற முடியாமல்தான் வந்தார்கள்.

கடைசியாக சியாமி நதிக்கரைக்கு வந்ததும் மாங்குட், நாகாஜியைத் தனியாக அழைத்துச் சென்று அவனிடம் ரகசியமாக ஏதோ சொல்லிற்று. அதைக்கேட்டதும் அவன் முகம் மலர்ந்தது.

"மாங்குட் — இப்படியா திட்டமிட்டிருக்கிறாய்? நல்லது; உன் திட்டம் வெற்றி அடையட்டும். என் நல்லாசிகள்" என்றான் நாகாஜி.

பிறகு அவன் மட்டும் ஏரி நீர் அருகில் போனான். ஏரியில் தண்ணீர் கருநீலமாகக் கிடந்தது. தண்ணீர்க் கொடிகள் சடைசடையாக எங்கும் கிடந்து நாறின.


அதனடியில்தான் ராட்சச நாகம் பசியோடு காத்துக் கிடந்தது.

நாகாஜி ஏரி ஓரமாகச் சென்று, "ஏரியின் ராஜாவே — ஓ, ஏரியின் ராஜாவே" என்று உரக்கக் கூவினான்.

அடுத்த நிமிடம் தண்ணீர் புரண்டது. சுருண்டு மடங்கியது. அலை மோதிற்று. கொதித்து நுரை நுரையாகக் கக்கியது.

'ஏரிக்கடியில் எரிமலை ஏதாவது வெடித்து விட்டதோ?' என்று நடுங்கிப் போனான் நாகாஜி. தன் வாளை உருவிக் கொண்டு உஷாராக நின்று கவனித்தான்.

கடைசியில், குகை போன்ற இரண்டு மூக்குத் துவாரங்களும் முரசு போன்ற கண்களும் தண்ணீரிலிருந்து வெளிப்பட்டு மேலே எழுந்தன.



இரண்டு கண்களிலும் நெருப்புப் பொறி பறந்தது.

ஐம்பது பேர் நிற்கக் கூடிய பெரிய கற்பாறை ஒன்று மேலே எழுந்தது போலிருந்தது. காட்டு நீர்க் கொடிகள் அதன் தலை முழுவதும் சிதறித் தொங்கின. கூர்மையான வாள் போன்ற இரண்டு பற்களை உதடுகள் மூடி மூடி வெளிப்படுத்தின.

இவ்வளவும் வெளிப்படுவதற்குள்ளேயே ஏரியின் நீர் பல தடவை எகிறிச் சிதறி விழுந்து விட்டது.

''அடே, பலி எங்கே?'' என்று பசி தாளாமல் கிறீச்சிட்டுக் கத்தியது நாகம்.

''கொண்டு வந்திருக்கிறேன்.''

''யார்?''

''எங்கள் சக்கரவர்த்தியின் அருமை மகள்.''

''பலே, பலே'' — என்றது நாகம். ''சரி, அவளை அதோ மரத்தில் கட்டிப் போட்டுவிட்டு எல்லோரும் போய் விடுங்கள். இருட்டு வேறு வந்துவிட்டது; பசி காதை அடைக்கிறது. நான் பலியை ஏற்க நகர்ந்தால்தான் நதியில் தண்ணீர் வரும் — சீக்கிரம்'' என்றது நாகம்.


நாகாஜி, ''இதோ, ஒரு நிமிஷத்தில் கொண்டு வந்து சேர்ப்பிக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

ராட்சச நாகம், சிவப்புக் கண்கள் தீ மாதிரி மின்ன, தலையை மட்டும் நீருக்கு மேல் நீட்டிக் கொண்டு அங்கேயே நின்றது.

சிறிது நேரத்தில் நன்றாகவே இருட்டி விட்டது. மங்கிய வெளிச்சத்தில், வீரர்கள், தங்கமும் வெள்ளியும் மின்னும் முக்காடு தரித்த ஒரு பெண்ணை நடத்தி வந்து மரத்தில் கட்டுவதை அது பார்த்தது. நாக்கை ஆசையாகத் தடவி விட்டுக் கொண்டது.

பீ—லினை மரத்தில் கட்டியதும் வீரர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டார்கள் என்று நிச்சயப் படுத்திக் கொண்ட நாகம், மலைகளுக்கு மேலே சந்திரன் உதயமாவதற்காகக் காத்திருந்தது.

சிறிது நேரத்தில் சந்திரனும் உதய



மானான். நதியில் அவனுடைய கிரணங்கள் பட்டுத் தண்ணீர் வெள்ளி போலப் பிரகாசித்தது.

சந்திர ஒளியில், கரையில் உள்ள பொருள்களும் நன்றாகத் தெரிந்தன. நாகம் கூர்ந்து பார்த்தது. இரையைத் தவிர வேறு யாரும் இல்லை. இதை நிச்சயப்படுத்திக் கொண்டதும், அது மெதுவாக ஏரியை விட்டுக் கரையை நோக்கி நகர ஆரம்பித்தது.

முக்காடு உருவம் கட்டப்பட்டிருந்த மரத்தின் பின்னால், பீ—லினுடைய செல்லப்பூனை மாங்குட்டி மறைந்து உட்கார்ந்திருப்பது அதன் கண்களில் படவில்லை.

நாகம் மெதுவாக ஏரியை விட்டு வெளிக் கிளம்பியது. முதலில் கறுத்த புள்ளிகள் நிறைந்த அதன் பெரிய தலையும், பிறகு முடிவே இல்லாமல் நீண்ட உடம்பும் கடைசியில் சுழற்றி அடிக்கும் அதன் மலைப்பாம்பு போன்ற வாலும் வெளியே வந்தன.

அது வாலைச் சுழற்றி அடித்த போது தண்ணீர் ஆள் உயரத்திற்கு நுரைத்துக் கொண்டு வந்து விழுந்தது. ஒரு பெரிய அணையே உடைந்து வழிவது போல அந்தக் காட்சி இருந்தது.

அது கரைக்கு வந்த போது அதன் மீதிருந்து வழிந்த தண்ணீர் பெரிய ஆறு போல வழிந்து ஓடியது.

அதன் மூக்கிலிருந்து சூறாவளி

மாதிரி உஷ்ணக் காற்று வீசியது. மரத்தின் பின்னால் மறைந்து நின்ற மாங்குட்டின் மனம் கூட அஞ்சி விட்டது. ஆனாலும், தைரியத்தைக் கைவிடாமல், அது உஷாராக நின்று நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தது.

மாங்குட் நல்ல புத்திசாலி; சமயோசித அறிவு அதற்கு அதிகம். அது நல்ல வலுவான உடல்கட்டும், பெரிய கூரிய நகங்களும், அரம் போன்ற பற்களும், இரண்டரை அடி உயரமும் இருந்தது.

பூமி அதிரக் கரையேறிய ராட்சச நாகம் சரசரவென்று கரையோரத்து மரங்களிடையே ஊர்ந்து இரையை நோக்கி வந்தது.

இதோ அருகில் வந்து விட்டது. பத்து அடி தூரம்தான் பாக்கி. அப்போது எதிர்பாராத ஓர் அதிசயம் நடந்தது.

மரத்திலே கட்டியிருந்த பலியின் கட்டுகள் எல்லாம் நழுவி விழுந்தன. உருவத்தை மூடியிருந்த தங்க இழைப் போர்வையும் கீழே நழுவி விழுந்தது.

அந்த இடத்தில் இளவரசி பீலிக்குப் பதிலாக ஆண்மை நிரம்பிய காப்டன் ஹிடெகி பளபளக்கும் கூர்மையான பட்டயத்தை ஓங்கிக் கொண்டு நின்றான்.

ராட்சச நாகம் இதைக் கண்டு திடுக்கிட்டு அப்படியே நின்றது. அதன் கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறந்தது.

''எங்கே எனக்குப் பலியாக வந்த பெண்?'' என்று உறுமியது அது.

''நான்தான் அந்தப் பலி. என்னைக் கொன்று விட்டு, பிறகு அவளை எடுத்துக் கொள்'' என்றான் ஹிடெகி. ''அவள் சார்பாகச் சண்டையிட நான் வந்திருக்கிறேன்.''

''ஓஹோ அப்படியா?'' என்று நாகம் உறுமியது. ''சரி, அதையும் பார்ப்போம்'' என்றவாறே அவனை நோக்கிப் பாய்ந்தது.

ஹிடெகி முன்னமே திட்டமிருந்தபடி திரும்பிக் காட்டுக்குள் மின்னல் வேகத்தில் ஓடினான்.

நாகத்தை முழுமையாகத் தண்ணீரை விட்டு வெளியே வரச் செய்வதற்காகவே அவன் அப்படி ஓடினான்.

நாகம் முழுசாகக் கரைக்கு வந்து விட்டது என்று தெரிந்ததும் அவன் நின்று ஒரு சுழல் சுழன்று எகிறி, வாளால் அதன் மூக்கின் மீது ஒரு போடு போட்டான். அந்த முதல் அடியே அதன் மூக்கை இரண்டாகப் பிளந்து விட்டது. ''ஹா'' என்று அந்த மலைப் பிரதேசமே கிடுகிடுக்கும்படி அது பெரும் கூச்சலிட்டது.

அது சமாளித்துக் கொள்வதற்குள் ஹிடெகியின் பட்டை வாள் இன்னொரு முறையும் அதன் முகத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது. நாகம் படுகாயம் அடைந்தது.

பயங்கரமான கோபத்துடன், மூஞ்சியிலிருந்து ரத்தம் கொட்ட நாகம் ஹிடெகியின் மீது பாயத் தலையை உயர்த்தியது.

ஆனால், இதற்குள் அதன் வால் பகுதிக்குப் போய் விட்ட மாங்குட், தன் கூரிய நகத்தால் நாகத்தின் நுட்பமான வால் பகுதியை அழுத்திக் கீறியது. இதனால் நாகத்தின் கவனம் வால் பக்கம் திரும்பியது.

ஹிடெகி இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு துள்ளிக் குதித்துத் தப்பி விட்டான். விலகி நின்று இன்னொரு அடி அதன் மண்டையில் போட்டான்.

உடனே நாகம் வாலை மறந்து ஹிடெகி பக்கம் திரும்பியது; உடனே மாங்குட் வாலைக் கடித்து மீண்டும் அதைப் பின்னால் திரும்பும்படி செய்தது. அப்படி அது பின்னால் திரும்பும் போது ஹிடெகி அதை வாளால் தாக்கினான்.

ஒவ்வொரு தடவை ஹிடெகியை, நாகம் தாக்க வரும் போதும் மாங்குட் வாலைக் கடித்துக் குதறி, நாகத்தின் கவனத்தைத் திருப்பி அவனைக் காத்தது. இரண்டு பக்கமும் கவனம் செலுத்த முடியாமல் நாகம் தத்தளித்தது.

மூன்றாவது அடி விழுந்ததும், அது மகா கோரமாகக் காடெல்லாம் எதிரொலிக்கும்படி கத்திற்று. காரணம், அந்த அடி அதன் கண்களில் ஒன்றையே பெயர்த்து விட்டது!

மண்டை இரண்டாகப் பிளக்க நாகம் கீழே விழுந்தது. ஒற்றைக் கண்

ணால் அது எதையுமே சரியாகப் பார்க்க முடியவில்லை. ஆனாலும், தன் வால் அருகில் இன்னொரு எதிரியும் இருப்பதை உணர்ந்து கொண்டு, அவனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வாலைத் தூக்கி இங்குமங்குமாக வீசிற்று.

மாங்குட் வால் வீச்சுகளை எதிர்பார்த்து, துள்ளிக் குதித்துத் தன்னைக் காத்துக் கொண்டு, மீண்டும் மீண்டும் நாகத்தைத் தாக்கிற்று.

நாகம் வாலால் ஹிடெகியையும் தாக்க முயன்றது. தலைக்கு மேலே வாலைத் தூக்கி ராட்சச வேகத்தில் அவனை அறைய முயன்றது. வால் ஹிடெகியின் தலைக்கு மேலே வரும் போதெல்லாம் மாங்குட் குரல் கொடுக்கும். ஹிடெகி எச்சரிக்கையுடன் நகர்ந்து தப்பி விடுவான்!

ஒவ்வொரு தடவை தப்பும் போதும் அவன் நாகத்தின் மீது வாளால் ஒரு அடி போட்டான்.

கடைசியில் ஏராளமான சிறு மரங்களையும் செடிகளையும் அடித்துத் தள்ளி விட்டு அதன் வால் ஓய்ந்தது.

ஆனால், அதற்கு இன்னமும் உயிர் இருந்தது. மண்டை உடைந்தும் அது குருட்டாம்போக்கில் அவனைத் தேடி அலைந்து சீறியது. பிடிக்க முயன்றது.

கடைசியில் அது பயங்கரமாக ஒரு கூக்குரலிட்டு விட்டுக் கீழே விழுந்தது.

அடுத்த கணம் மாங்குட் அதன் மீது தாவி ஏறித் தன் கூரிய நகங்களை முழு வேகத்துடன் அதன் கழுத்துச் சதையில் செலுத்தியது.

ஹிடெகி வலப்பக்கமாகப் போய் அதன் கழுத்தை இரண்டாகத் துண்டித்து விட்டான்.

நாகம் செத்து விழுந்தது. அதே சமயம் ஹிடெகியின் தோள் மீது மிருதுவான ஒரு கை விழுந்தது. அவன் திரும்பிப் பார்த்தான்.

இளவரசி பீ—லின்தான் நின்றாள். அவள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகி வழிந்தது.

மாங்குட் நாகத்தின் தலையிலிருந்து கீழே அவர்கள் எதிரில் குதித்தது.



''மாங்குட், எல்லாம் உன் யுக்தியினால்தான்'' என்றாள் பீ—லின். ''நீ மட்டும் இல்லை என்றால் என்னால் தனியாக இவ்வளவு பெரிய ராட்சசனுடன் போராடி வென்றிருக்க முடியாது'' என்றான் ஹிடெகி.

''போராட்டம் இன்னமும் முடியவில்லை. இன்னும் பாதி இருக்கிறது. உன் அப்பா இருக்கிறாரே'' என்றது மாங்குட்.

''அவர் இதைக் கேட்டால் நிச்சயமாக சந்தோஷமடைவார். இதைப் பெரிய தேச சேவை என்பார். 'தேசத்தை ஆபத்திலிருந்து காக்கும் ஒவ்வொருவனுடைய ரத்தமும் ராஜ வம்ச ரத்தம்தான்' என்பார். எங்களை மன்னித்து விடுவார்'' என்றாள் பீ—லின்.

''அப்படியானால், நானும் ராஜ வம்சம்தான்'' என்று சிரித்தது மாங்குட். ''எனக்கேற்ற ராஜகுமாரி எங்கே இருக்கிறாளோ — உம்'' என்றது.

''பாதி ராஜ்யத்தை உனக்குக் கொடுத்து ஒரு ராஜகுமாரியை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறோம்'' என்று கூறிச் சிரித்தாள் பீ—லின்.

இரு பழைய மாணவர்கள்

— எஸ்.மஞ்சுளா

மழை தூறிக் கொண்டிருந்தது. பேருந்திற்காகக் காத்திருந்தவர்கள் நனைய ஆரம்பித்தனர். தோளிலிருந்த துண்டை எடுத்துத் தலைக்குப் போட்டுக் கொண்ட ஆசிரியர் விநாயகம் எதேச்சையாகத் திரும்பியவர் அந்த இளைஞனைப் பார்த்தார்.

'கண்களை கூலிங்கிளாஸ் மறைத்திருக்க டிப்டாப்பாக நிற்கும் இவன்... என் மாணவன் ஜவஹர் ஆயிற்றே! பாவம் நனைகிறான்!'

நெரிசலைத் தள்ளிக் கொண்டு அவனிடம் சென்றார்.

''ஜவஹர்!''

அவன் புருவங்களைச் சுருக்கினான்.

''நல்லாயிருக்கியாப்பா?'' — அன்புடன் விசாரித்தார்.


''ம்... ம்... நீங்க யாரு?'' — அதிகாரத்துடன் கேட்டான்.

''நான்தானப்பா உன் ஆசிரியர் விநாயகம்.''

''ஓ! என்ன விஷயம்?'' என்றான் அலட்சியமாக.

''மழைத் தூறல் போடுது. நனைஞ்சா என்னப்பா பண்ணுவே? இந்தத் துண்டைப் போட்டுக்கோ'' — தன் மேல் துண்டினை அவனிடம் நீட்ட, அது மறுவிநாடியே அருகில் கிடந்த சகதியில் விழுந்தது.

''ஏங்க சார்! இவ்வளவு நீட்டா ட்ரஸ் செய்துக்கிட்டு அதுவும் ஓர் இன்ஜினியர் தலைமேல துண்டைப் போட்டுக்கிட்டா மத்தவங்க என்ன நினைப்பாங்க?





''கொஞ்சம்கூட நாகரிகம் தெரியாமல் இருக்கீங்களே! நான் மழையிலே நனைஞ்சா பரவாயில்லை. நீங்க உங்க வேலையைப் பார்த்துட்டுப் போங்க.''

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். ஆசிரியருக்கோ குளிருக்கேற்ற சூடான வார்த்தைகள். கண்களில் நீர் மறைக்க, சகதியில் கிடந்த தன் துண்டை எடுத்துக்கொண்டார். அவருக்கென்று இருக்கும் சொத்து இப்போது இரண்டு வெள்ளை வேட்டி, இரண்டு சட்டை, ஒரு மேல் துண்டு.

கும்பலிலிருந்து விலகி ஓரமாக நின்று கொண்டு பழைய நினைவுகளில் மூழ்கினார்.

அன்று இரவு மணி ஒன்பது.

விநாயகம் ட்யூஷன் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

''என்னங்க! சாதம் போட்டு அரை மணி நேரம் ஆகுது. சாப்பிட வாங்க.''

அவர் மனைவி சமையலறையிலிருந்து அழைத்தார். ''இதோ வந்திட்டேன் தங்கம். முதலிலே என் மாணவர்களுடைய அறிவுப் பசியைப் போக்கிட்டு, அப்புறம் வயிற்றுப் பசியைப் போக்கிக்கறேன்.''

''ஏற்கெனவே உங்களுக்கு உடம்பு சரியில்லை. நேரத்தோட சாப்பிடலேன்னா உடம்பு என்னவாகும்?'' என்று முணுமுணுப்பார்.

விநாயகம் பொருட்படுத்த மாட்டார். ட்யூஷன் சொல்லிக் கொண்டு ஜவஹரும் ராஜாவும் செல்வதற்குள் மணி பத்தாகி விடும்.

அந்த ஊரிலேயே ட்யூஷனுக்குப் பணம் வாங்காமல், பணத்தை ஒரு பொருட்டாக மதிக்காத, கல்வி போதிப்பதை வியாபாரமாகக் கருதாத ஒரே ஆசிரியர் விநாயகம்தான். தன் கஷ்டங்களை ஒரு பொருட்டாகவே மதிக்க மாட்டார்.

அவர் மனைவி ஆஸ்துமாவினால் அவதிப்படும்போது மருந்து வாங்கிச் சமாளிக்கக் கூடப் பணமில்லை அவருக்கு.

''ட்யூஷன் கற்க வரும் மாணவர்களிடம் பணம் வாங்கிக் கொள்ளலாமே'' என்று பிறர் முணுமுணுத்ததையும் அவர் பொருட்படுத்தவில்லை.

''ஏழை மாணவர்கள்தானே என்னிடம் பயில்கிறார்கள்? அவர்களிடம் மட்டும் எப்படிப் பணம் இருக்கும்?'' என்று மறுப்பார்.

அவர் மனைவி இறந்த பிறகு ஒண்டிக்கட்டையாக அநாதையாக அவர் இப்போது வாழ்கிறார். அவரிடம் பயின்ற மாணவர்கள் டாக்டர்கள், வக்கீல்கள், இன்ஜினியர்கள் என்று பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். இவர்தான் இன்னும் பள்ளிவிட்டுக் கிளம்பினால் வீடு, வீடு விட்டால் பள்ளிக்கூடம் என்று இயந்திர வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்.

சாக்கடையைத் தட்டிவிட்டு, அந்தத் துண்டினால் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். பேருந்து வர இன்னும் கால்மணி நேரம் இருந்தது. அனைவரும் காத்திருந்த அந்த வேளையில் —

கண்ணைப் பறிக்கும் சிவப்புக் கலரில் ஒரு மாருதி கார் அந்த இடத்தைக் கடந்து சிறிது தூரத்தில் நின்றது. அதனுள்ளே இருந்தவர் கூட்டத்தைஎட்டிப்பார்த்ததும் அவர்களிடையே ஒரு சலசலப்பு.

'இவர்தாங்க பிரபல இருதய சிகிச்சை நிபுணர் ராஜா, ஃபாரின்லே இருக்கார்' — முணுமுணுத்தார்கள். அந்தக் காரில் இருந்து இறங்கிய டாக்டர் ராஜா ஓரமாக நின்று,

யோசித்துக் கொண்டிருந்த ஆசிரியர் விநாயகத்திடம் வந்தார்.

எல்லோரும் ஆவலுடன் அவர்கள் பேசுவதைக் கேட்டனர்.

ராஜா அவர் கையைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு, கண்ணீர்வடித்தான். அவரால்பேசமுடியவில்லை.

"ஐயா!"

"தம்பி, யாரப்பா நீ?" — ஆசிரியரால் எளிதாக அடையாளம் காண முடியவில்லை.

"நான்தான் ஐயா ராஜா... ஃபாரின்லே டாக்டரா இருக்கேன்! உங்க மாணவன்."

"சந்தோஷம்பா ராஜா. ரொம்ப சந்தோஷம்" — அவர் நாத் தழுதழுத்தது. பெருமையுடன் கூட்டத்தைப் பார்த்தார்.

"ஐயா! நான் உங்களை உங்க வீட்டிலே கொண்டு போய் இறக்கிடறேன். என் காரில் வாங்க."

"வேண்டாம்ப்பா ராஜா. இதோ பஸ் வந்திடும்" — அவர் எவ்வளவோ மறுத்தும் ராஜா விடவில்லை. அவரைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு காரில் ஏறினான்.


ஆசிரியருக்கோ கண்களில் அவரை அறியாமல் நீர் சுரந்தது. அது ஆனந்தக் கண்ணீர்!

டிப்டாப்பாக நின்று கொண்டிருந்த ஜவஹர் மீது சேற்றை வாரி இறைத்தவாறு கார் விருட்டென்று கிளம்பிச் சென்றது. அவன் மனத்தைப் போலவே அவன் உடையும் அழுக்காக மாறியது.




பழமொழிப் புதிர்

புதிர்-43



புதிர்-44



இப்படங்கள் இரண்டும் இருவேறு பழமொழிகளை நினைவூட்டுகின்றன அல்லவா? அப்பழமொழிகளைக் கண்டுபிடிக்க முடியுமா?

— விடை 89 – ஆம் பக்கம்.

என் குழந்தைப் பருவம்



ஓவியர். கோபுலு

சென்ற இதழ் தொடர்ச்சி

பலன் வீட்டுத் தரை, சுவர், புத்தகங்களின் காலி இடங்கள், நோட்டுகள் எல்லாமே மாங்குடி சிதம்பர பாகவதர், காந்திஜி, வாண்டுப் பயல் படங்கள்தான்.

சிறு வயதில் என் நண்பர்களுடன் பட்டம் விட, மாஞ்சா போட அடிக்கடி தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் போவதுண்டு. மனித நடமாட்டமே இல்லாமல் ஹோ என்றிருக்கும் கோவில்.

பட்டத்தை மறந்து, மாஞ்சாவை மறந்து பெரிய கோவில் கோபுரத்தைப் பார்த்தபடியே நிற்பேன். பிரம்மாண்டமான ஒரே கல் நந்தியைப் பிரமிப்புடன் பார்ப்பேன். பிரகதீஸ்வரர் லிங்கத்தை அண்ணாந்து பார்ப்பேன், மெய்மறந்த நிலைதான். வீட்டில் பெரிய கோவில் கோபுரத்தைக் கிறுக்குவேன். நந்திதான் சரியாக வராது. இந்தச் சின்னக் கோட்டிலேயே சரியாக வராத நந்தியை எப்படித்தான் கச்சிதமாய் அவ்வளவு பெரிய அளவில் கல்லில் செதுக்கினார்களோ என்று ஆச்சரியப்படுவேன்.


தஞ்சை சரஸ்வதி மகால் லைப்ரரியில் ஒரு புஸ்தகம் பார்த்தது இன்னும் ஞாபகம் இருக்கிறது. அதில் மனிதனுக்கும், மிருகத்திற்கும் உள்ள முக ஜாடை, மனிதனுக்கும் பறவைகளுக்கும் உள்ள முக ஒற்றுமையை படம் போட்டு இருந்தது. அதே மாதிரி எழுத நானும் முயற்சி செய்ததுண்டு. எனது 'காரிகேசருக்கு' அஸ்திவாரம் அது.

பள்ளிக்கூடத்திற்கு இன்ஸ்பெக்டர் வரும் போது எனது படங்களை வகுப்பில் மாட்டி இருப்பார்கள். எனது முதல் கண்காட்சி அது! நானே நின்று ரசித்துக் கொண்டிருப்பேன்.



யாரோ ஞாபகமில்லை. அன்பளிப்பாக ஒரு கலர் பாக்ஸ் வாங்கித் தந்தார்கள். அன்று முதல், என் படங்கள் வண்ணப்படங்களாய்த் திகழ ஆரம்பித்தன. கலர்கள் ஒன்றோடொன்று கலந்து கழுதைக் கலரில் படம் முடியும். எல்லோரும், "நீ கழுதைப் படம் போட்டு கலர் கொடுடா; சரியாயிருக்கும்" என்று பரிகாசம் செய்வார்கள்.

நாளாவட்டத்தில் சரியான கலர் வந்தது. பிறகு, பஞ்சவர்ணக் கிளி போட்டேன், கச்சிதமாக. அதன் பலன், கலர் பாக்ஸ் குளோஸ். பிறகு வர்ணக்காரர் பட்டாபி ஞாபகம் வந்தது. நானே கடைக்குப் போய் கலர் பவுடர்கள், கோந்து எல்லாம் வாங்கி வந்து, கொட்டாங்கச்சியில் கலர் குழைக்க ஆரம்பித்தேன்.



தஞ்சையிலிருந்து திருவிடைமருதூர் வந்தோம், குடிபெயர்ந்து. பிறகு என் அப்பா ரிடையர் ஆகி க்ஷேத்திராடனம் செய்ய எங்களையெல்லாம் வடஇந்தியாவுக்கு அழைத்துச் சென்றார்.

வடக்கே, மதுராவிற்குப் போனோம். அங்கே எங்களைக் காண, அப்பாவுக்குத் தெரிந்த தஞ்சை நண்பர் ஒருவர் வந்தார். பெயர் சீதாராம கோஸ்வாமி. "என்ன சீதாராமா, இங்கு என்ன செய்துண்டு இருக்கே?" என்று என் தகப்பனார் கேட்ட ஞாபகம்.

"வாங்கோ என் இடத்துக்கு, சொல்றேன்" என்றார், அவர்.

அவர் இடத்துக்குப் போனோம். அடேங்கப்பா, இந்த சீதாராம கோஸ்வாமியும் ஒரு ஓவியர்! எங்கும் அவர் வரைந்த கிருஷ்ணன் படங்கள். மதுரா, கிருஷ்ணர் பிறந்த ஊர் இல்லையா? வருகிற யாத்ரிகர்கள் இவருடைய படங்களை வாங்கிச் சென்றனர். ஏக வியாபாரம். எனக்கு அவர் இடத்தை விட்டு வெளிவர மனசே இல்லை.

"சீதா ராமா, இந்தப் பையனும் ஏதோ படம் கிறுக்குவான். நீ பார்."

"டேய் பையா! பேஷ். எங்கே ஒரு படம் போட்டுக் காண்பி?"

சின்னக் கடிதாசியிலே ஒரு படம் வரைந்த ஞாபகம். புத்தர் போதி மரத்தடியில் தபஸ் பண்ணுகிற மாதிரி... அடுத்தது என் ஸ்பெஷாலிடி — மாங்குடி சிதம்பர பாகவர் படம். ஓவியர் சீதாராம கோஸ்வாமி, என் முதுகைத் தட்டிக் கொடுத்து, "பலே! பலே பேஷ்!" என்றார்.

"இவனை இங்கேயே விட்டு விடுங்கள் மாமா. நான் இவனுக்கு ஆர்ட் சொல்லிக் கொடுக்கிறேன்.



பெரிய ஆர்டிஸ்டாயிடுவான் பின்னாடி'' என்றார்.

எனக்கு ஒரே குஷி! அவர் வீட்டிலேயே தவம் கிடந்தேன்! மற்றவர்கள் பிருந்தாவனம் போனாலும் சரி, கோவர்த்தன கிரி போனாலும் சரி, யமுனைக்குப் போனாலும் சரி.

இப்படிச் சில நாட்கள் ஓடின. கடைசியில், மதுராவை விட்டுக் கிளம்ப வேண்டிய நாள் வந்தது. ''நான் இங்கேயேதான் இருப்பேன்'' என்று அடம்பிடித்து அழுதேன். அப்பாவின் அதட்டல், உருட்டல், மிரட்டல் எதற்கும் நான் மசியவில்லை.

கடைசியில் சீதாராம கோஸ்வாமி எனக்குச் சொன்னார். ''நன்னா படிச்சுட்டு வா. அப்புறம் இங்கு உனக்கு ஆர்ட் கத்துத் தரேன்'' அப்புறம் அவரைப் பார்க்கவே இல்லை, வெகு காலத்திற்கு.

பிறகு கும்பகோண வாசம்.

ஒரு நாள் பள்ளிக் கூடம் செல்லும் போது தெருப் பூராவும் எல்லாச் சுவர்களிலும் காவியினால் எழுதிய அனுமார் படங்கள்; கை கூப்பிய அனுமார், தோளில் கதையுடன் அனுமார், சஞ்சீவி பர்வதத்துடன் பறக்கும் அனுமார், ராவணன் முன் சுருட்டப்பட்ட வடம் வடமான வாலின் மேல் அமர்ந்திருக்கும் அனுமார். இப்படிப் பல போஸ்களில் அனுமார் சித்திரங்கள்.

பார்க்கப் பார்க்க ஆச்சரியம்! நேற்றுப் பார்த்த காலிச் சுவர்களிலெல்லாம் இன்று அனுமார் படங்கள்!

''யார் இந்த ஓவியர்னு தெரியல்லே. நூற்றுக்கணக்கான அனுமாரை ஒரே நாளில் போடும் மகத்தான ஓவியர். யார் அது? அவரைக் காண ஒரே ஆவல். ஒரு நாள் கடைத் தெருவில் சிறு கூட்டம். நடுவே புகுந்து பார்த்தால் இத்தனை நாள் தேடி வந்த அனுமார் ஓவியர்! தாடி மீசை, கையில் காவிச் சட்டி, ஈச்சமட்டை பிரஷ் பிடித்து சரசர வென்று அனுமாரை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்! அவர் வரைந்த

அனுமார். அருகே உள்ள சோடாக் கடைக்காரரின் வேண்டுகோளுக்கு இணங்கச் சோடா குடித்துக் கொண்டிருப்பது போல் உருவம்!

ஒரு புதுவித ஓவியரைக் கண்ட புத்துணர்ச்சி. மறுநாள் எங்கள் வீட்டுச் சுவரிலே அனுமார் படம் போட்டேன். நானும் ஜூனியர் அனுமார் ஓவியர்!

வரலக்ஷ்மி விரத காலம் என்றால் எனக்கு ரொம்ப டிமாண்ட்! ஏனென்றால், நான் படம் வரைபவனாயிற்றே! எங்கள் வீடு, அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்தெல்லாம் சுண்ணாம்பு தடவிய பல சைஸ் சொம்புகள் வந்துவிடும். அவற்றில் இந்தப் புகழ் பெற்ற ஓவியர், அம்மன் முகத்தை வண்ணங்களில் வரைந்து கொடுக்க வேண்டும்.

அதற்குச் சன்மானம் என்ன தெரியுமா? இட்லி, கொழுக்கட்டை, அப்பம், அதிரசம் — பல சைஸ், பல ருசிகளில்.

சில வீடுகளில் சுவரிலேயே கஜலட்சுமி, அல்லது அம்மன் முகம் வரையவேண்டும். எனது சித்திரசாமக் கிரியைகளான கலர் கொட்டாங்கச்சியையும், பிரஷ்களையும் (அவற்றை நானே ஈச்ச மட்டையில் தயார் செய்தது!) எடுத்துச் செல்வேன்.

நாள் முழுக்கப் படம் வரைவேன். காப்பி டிபன் கிடைக்கும், அல்லது ஓரணா, இரண்டணா சன்மானம் கிடைக்கும். பெரிய நிதி கண்ட மாதிரி இருக்கும் அது!

பக்கத்து வீட்டிற்கு ஒரு மனிதர் வந்தார். அவர் வெளியூரில் ஒரு டிராயிங் மாஸ்டராம். அவர் என் கலை முயற்சிகளைப் பார்த்து, "இந்தப் பையனுக்குக் கை நன்னாயிருக்கு. ஆர்ட் ஸ்கூலிலே போடுங்கள்" என்று என் தகப்பனாரிடம் சொன்னார். என் மனத்தில் அழுத்தமாய்ப் பதிந்தது அந்த வார்த்தை.

அந்த ஆர்ட் ஸ்கூல் வழியாகத்தான் நான் தினமும் எனது ஹைஸ்கூலுக்குப் போக வேண்டும். அந்த ஆர்ட் ஸ்கூலின் ஜன்னல் வழியாகப் பார்ப்பேன் — பார்த்துக் கொண்டே நிற்பேன். ஓவிய மாணவர்கள் 'ஸ்டாண்ட்' முன்னே நின்று படம் வரைவார்கள்.



அதைப் பார்த்துப் பார்த்து ஒரே ஏக்கம் — 'இந்தத் தொல்லை பிடித்த படிப்பு எப்பொழுது முடியும்? எப்பொழுது சித்திர சாலையில் அடி எடுத்து வைப்பேன்' என்ற ஏக்கம்.

ஒரு வழியாகப் படிப்பு முடித்து ஆர்ட் ஸ்கூலில் சேர்ந்தேன். பிறகு கலை, கற்பனை, சுருள் சுருளாகப் படங்கள். பரீட்சை, ஃபர்ஸ்டு கிளாஸ் பாஸ், டிப்ளமோக்கள். குறைந்த பட்சம் ஒரு டிராயிங் மாஸ்டராகவாவது ஆகிவிடலாம் நிச்சயம்! மாதம் 30 ரூபாய் சம்பளம் கிடைக்கும் என்ற மனக்கோட்டை...

சித்திர சாலையில் அடிமேல் அடி வைத்து முன்னேறிக் கடந்த மைல் கற்கள் பலப்பல. இன்னமும் நடை போட்டுக் கொண்டேயிருக்கிறேன், அதே சாலையில். போக வேண்டியதோ வெகுதூரம்!



பிருந்தாவனம்





காசிஸ்ரீ

என் தந்தையார் இராமேஸ்வரத்திலிருந்து காசி வரை நடந்து சென்று காசி விஸ்வநாதரைத் தரிசித்து வந்துள்ளார்கள். காடுகளையும், மலைகளையும், பல மாநிலங்களையும் 2000 மைல்கள் நடந்து, கடந்து சென்றார்கள். அதனால், அவர்களுக்கு 'காசிஸ்ரீ' என்ற பட்டம் வழங்கப்பட்டது. காசி இராமேஸ்வரம் — காசி நடைப் பயணம்' என்ற புத்தகத்தையும் எழுதியிருக்கிறார்கள். அதற்குத் தமிழக அரசின் பரிசும் கிடைத்திருக்கிறது. பல சங்கங்கள் என் தந்தையாரின் இந்த மாபெரும் சாதனையைப் பாராட்டி விழாக்கள் எடுத்தன. ஆமாம், இவ்வளவும் சொன்னேனே, என் தந்தையாரின் பெயர் என்ன என்று சொல்லவில்லையே! அவர்கள் பெயர் 'காசிஸ்ரீ பொற்கிழிக் கவிஞர் அரு. சோமசுந்தரம்' என்பதுதான்!

— சோம. மங்கையர்க்கரசி மீனாட்சி
(22,601), காரைக்குடி.

விடுகதையில் மனித உறுப்பு

1. பாறைமேல் கோரை; கோரைக்குள் குறவன்.
2. தண்ணீர் இல்லாமல் வளரும்; தரையில்லாமல் படரும்.
3. நித்தம் கொட்டும்; சத்தம் இல்லை.
4. குண்டு சட்டியில் கெண்டை மீன்.
5. காற்று ஜீவனம்; கண்ணிடை வாசம்.


விடை: 1. தலை, மயிர், பேன்; 2. தலைமயிர்; 3. கண் இமை; 4. நாக்கு; 5. மூக்கு.

— ப. தினேஷ்குமார் (3321),
சென்னை — 7.

ஆடு கண்டு பிடித்த காபி!

அரேபியாவில் ஒருநாள் —

மேயச் சென்ற ஆடுகளில் சில உற்சாகமாக வீடு திரும்பின. இரவெல்லாம் தூங்காமல், ஓடி ஆடித் திரிந்



தன. இதற்கு என்ன காரணம் என்று கண்டறிய விரும்பினார்கள், அந்த ஆடுகளை மேய்த்த இடையர்கள். மறுநாள் அந்த ஆடுகளைப் பின் தொடர்ந்தார்கள். புதர் போலிருந்த செடிகளின் பழங்களை அவை ஆசை ஆசையாகத் தின்றன. அந்தப் பழங்களை அவர்களும் தின்று பார்த்தார்கள். அந்தப் பழங்கள் சுவையாக இருந்தன. உடலுக்கு உற்சாகமும் ஊட்டின. அந்தப் பழங்களின் கொட்டைகளில்தான் உற்சாகமூட்டும் சக்தி இருப்பதை அறிந்து, அந்தக் கொட்டைகளிலிருந்து ஒரு வகைப் பானம் தயாரித்தார்கள். அந்தப் பானம்தான் காப்பி.

— ஏ. ஆர். விவேக் (21,649),
காரைக்குடி.

நொடியிலே விடுகிறேன்

ஒரு தமிழ்ப் புலவர், புகை வண்டி நிலையத்திலிருந்து ஊருக்குள் செல்ல ஒரு மாட்டு வண்டியை வாடகைக்கு அமர்த்தினார். சிறிது தூரம் சென்றதும் வண்டி ஒரு பள்ளத்தில் சிக்கிக் கொண்டது. வண்டிக்காரன், ''ஐயா, வண்டிச் சக்கரம் பள்ளத்தில். சிக்கியிருக்கு, கொஞ்சம் கீழே இறங்குங்கோ. தள்ளுவோம்'' என்றான்.

''வண்டியில் ஏறும் போது நீ சொன்னது போல் செய்துவிட்டாயே!'' என்றார் புலவர்.



வண்டிக்காரன் புரியாமல் விழித்தான்.

''அப்பா, நான் வண்டியில் ஏறும் போது நீ என்ன சொன்னாய்? 'ஒரு நொடியிலே கொண்டு போய் விட்டு விடுகிறேன்' என்றாயல்லவா? இப்போது நீ சொன்னது போல் நொடியிலேதான் (பள்ளத்தில்தான்) கொண்டு வந்து விட்டிருக்கிறாய்'' என்று புலவர் விளக்கிய போதுதான் வண்டிக்காரனுக்குப் புரிந்தது.


— ஆறு. அண்ணாதுரை (10,403).

நேரம் என்ன நேரம்

கிரீன்விச் சராசரி நேரம் என்பது எல்லா நாடுகளுக்கும் பொதுவான நேரமாகும். இதை **GMT** எனச் சுருக்கமாகக் குறிப்பிடுவது வழக்கம். இதற்கும் நம் இந்திய நேரத்திற்கும் (**IST**) உள்ள வேறுபாடு 5½ மணி. நமக்கு காலை 10½ மணி என்றால், கிரீன்விச் நேரம் அதிகாலை 5 மணியாகும். 11 மணி **GMT** என்றால் நம் இந்திய நேரம் மாலை 4½ மணி. அதாவது 11 + 5½ = 16½ (இது மாலை 4½) மணியாகும்.

இப்போது **GMT** எனக் குறிப்பிடுவதற்குப் பதிலாக **UTC** எனக் குறிப்பிடுகின்றனர். இது **Universal Time Co-ordinated** என்பதன் சுருக்கமாகும். இப்போது **UTC**—ல் என்ன நேரம் என்று யாராவது திடீரென்று கேட்டால் என்ன செய்வீர்கள்? 5½ மணி நேரத்தைக் கழித்துக் கொண்டிருக்க வேண்டாம். கடிகாரத்தைத் தலைகீழாக வைத்துக் கொண்டு (நேராக இருப்பதாக நினைத்துக் கொண்டு) மணியைக் கூறுங்கள். நம் நேரத்துக்கு இணையான **UTC**தான் அது!

— இ. பாவை (14,813), கும்பகோணம்.





பாரதியார் செய்த தந்திரம்


பாரதியாருக்கு யாரும் பலத்த சத்தம் போட்டு பேசினால் பிடிக்காது. பேச்சுக் கூட சங்கீதம் மாதிரி இருக்க வேண்டும் என்று நினைப்பவர் அவர். ஒருநாள், பாரதியாரின் வீட்டில் சத்தம் போட்டு எல்லாரும் பேசிக் கொண்டிருந்தார்கள். உடனே, பாரதியார், அங்கேயிருந்த ஆர்மோனியத்தின் அருகில் சென்றார். எல்லாக் கட்டைகளையும் அழுத்திக் கொண்டு ஆர்மோனியம் வாசித்தார். கர்ண கடூரமாக இருந்தது அந்தச் சத்தம். உடனே எல்லோரும் பேச்சை நிறுத்தினார்கள். 'இப்படித்தான் என் காதுகளுக்கு இருந்தது உங்கள் பேச்சு' என்று சிரித்துக் கொண்டே கூறினார் பாரதியார்.

— ராமராஜன் (6523), திருச்சி — 14.

குத்துச்சண்டை வீரர்


இதுவரை அவர் 35 குத்துச் சண்டைப் பந்தயங்களில் கலந்து கொண்டிருக்கிறார். ஆனால், ஒரு முறை கூடத் தோல்வியைச் சந்தித்ததில்லை. அந்த மாபெரும் வீரர் யார்? அமெரிக்காவைச் சேர்ந்த மைக்கேல் டைசன் என்பவர்தான் அவர்!

— என். பிரபு (7758), குரும்பாட்டி கிராமம்.



புதிர் இரண்டு; விடை ஒன்று

1. ஆவணி பிறப்பது எதனால்? நாடகம் முடிவது எதனால்?
2. கடிகாரம் ஓடுவது எதனால்? கனத்த பூட்டு கைபட்டுத் திறப்பது எதனால்?
3. குவளைத் தண்ணீர் குறைவது எதனால்? குப்புசாமி குளறியது எதனால்?




விடை: 1. ஆடி முடிவதனால்; 2. சாவி கொடுப்பதனால்; 3. குடித்ததனால்.

— சிவ. இளங்கோவன் (3652), கீழைப்பெருமழை.

அறிவுச் சுடர்

1. எதைக் கொண்டு ஒரு மரத்தின் வயதைக் கண்டுபிடிப்பது?
2. அதிகப்படியான கல்வி கற்றோரைக் கொண்ட மாநிலம் எது?



3. புகைப்படங்களை எடுக்கப் பயன்படும் கலர் பிலிம்களைக் கண்டுபிடித்தவர் யார்?
4. முதல் முதலாகத் தபால்களை விமான மூலம் எப்போது ஏற்றிச் சென்றார்கள்?

விடை: 1. அடிமரத்தில் காணப்படும் வளையங்களின் எண்ணிக்கையைக் கொண்டு, 2. கேரளம், 3. அமெரிக்கரான ஈஸ்ட்மென், 4. 18.2.1911—ல்.

— ப. தேவேந்திரகுமார் (1418), சென்னை — 7.

சமையல் அறை ராணி



'சமையல் அறை ராணி' யார் என்று தெரியுமா?

சமையலில் பல வகைகளில் பயன்படுத்தப்படுவதால் ஜெர்மானியர் இதை 'சமையல் அறை ராணி' என்று அழைக்கிறார்கள்.

எதை?

வெங்காயத்தை!

— ஆ. இரமேஷ் (13,226), அட்டகட்டி.

கார்ட்டூனை அறிமுகப்படுத்தியவர்

இங்கிலாந்தைச் சேர்ந்த ஆஸ்பெர்ட் லஸ் காண்டர் என்பவர்தான்



முதல் முதலாகப் பத்திரிகைகளுக்குக் 'கார்ட்டூன்' படங்களை அறிமுகப்படுத்தினார். 'டெய்லி எக்ஸ்பிரஸ்' என்ற செய்திப் பத்திரிகைதான் முதல் முதலாகக் 'கார்ட்டூன்' படங்களை வெளியிட்டது.

— எஸ். ஜெயஸ்ரீ (1254), திருச்சி — 14.

அமுத மொழிகள் ஐந்து



* முட்டாளுக்கு அறிவுரை சொல்வது இறந்தவனுக்கு மருந்து கொடுப்பது போல

— அமெரிக்கப் பழமொழி

* இன்சொல் இரும்புக் கதவைத் திறக்கிறது.

— பல்கேரியப் பழமொழி

* நேர்மையான உள்ளத்திற்கு அச்சம் என்பதே தெரியாது.

— ஹாவர்டு

* வெறும் பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட உதவி செய்யும் கையே புனிதமானது.

— இங்கர்சால்

* வெற்றியின் ரகசியம் எடுத்த காரியத்தில் நிலையாக நிற்றல்.

— டிஸ்ரேலி

தொகுப்பு — தமிழ் தங்க நிலா (11641), தஞ்சாவூர்

பழமொழிப் புதிர் விடை

புதிர் — 45: மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?

புதிர் — 46: கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடிபுகுந்தது போல.

கேளுங்கள்; சொல்லுகிறோம்

*** சரயு நதி எங்கு ஓடுகிறது? அதற்கு ஏன் அப்பெயர் வந்தது?**

— கே. இசக்கிராஜன், செங்கோட்டை.

அயோத்திக்கு அருகில் ஓடுகிறது. இமய மலையிலுள்ள மானச சரசில் அது தோன்றியதால், சரயு என்று அழைக்கிறார்கள்.

*** தமிழில் இராமாயணத்தை இயற்றிய கம்ப நாடர், தமிழ் அறிஞர் வேங்கடசாமி நாட்டார் இருவரும் நாடார் குலத்தைச் சேர்ந்தவர்களா?**

— அ. மஹேஸ்வரி, அ. வேல்ராஜ், பாடி, சென்னை.

இருவருமே நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்களல்லர். கம்பர் என்ற பெயர் எப்படி வந்தது என்பதற்குப் பலர் பல கதைகளைக் கூறியிருக்கிறார்கள். அவற்றிலே ஒன்று, இவர் 'கம்ப நாடு' என்ற நாட்டில் பிறந்தார் என்றும், அதனால் 'கம்ப நாடன்' என்று அழைக்கப்படுகிறார் என்றும் சொல்லப்படுகிறது.

விவசாயம் செய்கின்ற சிலரும், வேறு சில சாதியினரும் தங்களின் பட்டப் பெயராக 'நாட்டார்' என்று வைத்துக் கொண்டதாகத் தெரிகிறது. முத்துசாமி நாட்டாரின் மகனாகப் பிறந்தவர்தான் ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

*** பர்மா நாட்டில் முஸ்லிம்கள் அதிகமா, கிறிஸ்தவர்கள் அதிகமா?**

— ச. கல்யாணி, தாம்பரம்.

இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதத்தினரை விட பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களே அங்கு அதிகம்.

*** நம் இந்தியாவில் எங்கு எங்கு பூட்டு தயாரிக்கிறார்கள்?**

— கே. கோவிந்தராசன், பேராவூரணி.

கான்பூர், அலிகார், திண்டுக்கல் — இந்த மூன்று இடங்களிலும் தயாராகும் பூட்டுகள் புகழ்பெற்றவை.

*** முதலில் பிறக்கும் குழந்தைதான் புத்திசாலியாக இருக்கும்; பேரும் புகழும் பெறும் என்கிறார்களே, இது உண்மையா?**

— ரா. லாவண்யா, காரைக்குடி.



உண்மை என்று எப்படிக் கூற முடியும்? முதலில் பிறக்கும் குழந்தைகள் எல்லாருமே புத்திசாலிகளாக, பேரும் புகழும் பெற்றவர்களாக விளங்குகிறார்களா? இல்லையே? 14—வதாகப் பிறந்த தாகூர், 16—வதாகப் பிறந்த கி. ஆ. பெ. விசுவநாதம் எட்டாவதாகப் பிறந்த கண்ணதாசன், நாலாவதாகப் பிறந்த காந்திஜி, ஐந்தாவதாகப் பிறந்த ஆறுமுக நாவலர் போன்றவர்கள் புத்திசாலிகளாகவும் பேரும் புகழும் பெற்றுத் திகழவில்லையா? முதலாவதாகப் பிறந்தாலும் பிறகு பிறந்தாலும், அறிவுக்கும் பேர் புகழ் பெறுவதற்கும் சம்பந்தமில்லை.


*** மணிப்புரி நடனம் என்பதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?**

— ஆர். தேவகி, சென்னை — 10.

நம் தேசத்திலுள்ள மாநிலங்களில் ஒன்றான மணிப்பூரியில் பிறந்தது இந்த நடனம். மணிப்பூரியில் அநேகமாக ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிருஷ்ணன் கோயில் இருக்கும். அங்கு ஆடப்படும் இந்த நடனம். பௌர்ணமி நாளில் இரவு முழுவதும் ஆடுவார்கள். கண்ணனின் குறும்புச் செயல்களை விளக்கும் நடனங்கள், சிவன் — பார்வதி நடனம், ஆனந்தத் தாண்டவம் போன்ற நடனங்களைக் காணலாம். பல வண்ண உடைகள் அணிந்து பாடிக் கொண்டே நடிகர்கள் ஆடுவார்கள். பின்னணிப் பாடல்களுக்கு ஏற்றபடி ஆடுவதும் உண்டு. குதிகாலைச் சிறிது தூக்கி, முன் பாதங்கள் தரையில் பதியச் சுழன்று ஆடுவது இந்த நடனத்தின் தனிச் சிறப்பு!

* **டாக்டர் பக்கம் எழுதி எங்களுக்கெல்லாம் மிகவும் உதவியாக இருக்கும் டாக்டர் கு. கணேசன் அவர்களின் புகைப்படத்தை வெளியிடுவீர்களா? அவர் விலாசம் என்ன?**

— பி. சரளா, சென்னை — 18.



இதோ அவர் புகைப்படம். அவரது முகவரி: டாக்டர் கு. கணேசன், 2, பூபதி பாங்க் தெரு, இராஜபாளையம் — 626 117.

* **'வாண்டு மாமா' — அவரின் இயற்பெயர் என்ன? அவர் இயற்றியுள்ள நூல்கள் யாவை?**

— ஏ. சங்கர், ஈரோடு.

இயற்பெயர்: வி. கே. மூர்த்தி. கற்பனைக் கதைகள், மந்திர—தந்திர கதைகள், அறிவியல், தகவல் நூல்கள் என இவர் ஏறத்தாழ 80 நூல்களை எழுதியிருக்கிறார்.

* **மயிலின் உணவு என்ன?**

— ஏ. எஸ். குமுதவல்லி, கோவை—18.

தானியங்கள், பூச்சிகள், பல்லிகள், சிறு பாம்புகள், — இவைதான் மயிலின் உணவு.

* **'சிங்கார மான வண்டி**
சீ மை யி லே செய்த வண்டி' என்று சைக்கிளைப் பற்றிக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடியிருக்கிறார். நம் நாட்டிலேயே சைக்கிள் தயாராகிறதே, ஏன் 'சீமையிலே செய்த வண்டி' என்று பாடினார்?

— எ. எல். ராமு, பெங்களூர்.



கவிமணி பாடிய போது, நம் நாட்டில் சைக்கிள் செய்யப்படவில்லை. அதனால் தான் அவர் அப்படிப் பாடினார்.

* **புகையிலை முதல் முதலாக உண்டான இடம் எது? இந்தியாவா? சீனாவா?**

— வி. லட்சுமி, மேலப்புதூர்.

இரண்டும் இல்லை. தென் அமெரிக்காவில்தான் இது முதலில் உண்டானது. இதை போர்ச்சுகீசியர் நம் நாட்டுக்கு 17 — ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கொண்டு வந்தார்கள். ஆயினும் புகையிலை அதிகமாக விளையும் மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருக்கிறது. மற்றவை அமெரிக்க ஐக்கிய நாடு, சீனா.

* **மரப் பொம்மைகள் செய்வதில் மிகவும் புகழ் பெற்றது ஆந்திர நாடு என்று சொல்கிறார்களே, இது உண்மையா?**

— பி. குமணன், வடலூர்.

உண்மைதான். ஆந்திர நாட்டிலுள்ள கொண்டபள்ளி என்ற ஊரில் மரப் பொம்மைகளை மிக அழகாகத் தயாரிக்கிறார்கள். அங்கு செய்த அம்பாரி யானை, மகா விஷ்ணுவின் பத்து அவதாரங்கள், கோலாட்ட நடனம் போன்ற பொம்மைகளைப் பல வெளிநாட்டுப் பொருட்காட்சி சாலைகளில் இன்றும் காணலாம்.

* **பாலைவனத்தில் அதிகமாக மணல் இருப்பதற்கு என்ன காரணம்?**

— எம். சொக்கலிங்கம், தூத்துக்குடி.

பாலைவனத்தில் பகலில் வெப்பம் மிக அதிகமாக இருக்கும்; இரவில் மிகக் குளிராக இருக்கும். இப்படி அதிக வெப்பமும், அதிகக் குளிரும் மாறி மாறி வருவதால், பாறைகள் வெடித்துச் சிதறி மணலாக மாறுகின்றன. காற்று, அந்த மணலை அடித்துச் சென்று, எங்கும் பரப்புகிறது.

பிருந்தாவனக்

எலுமிச்சை

எலுமிச்சையாம் எலுமிச்சை
எழில் மிகுந்த எலுமிச்சை!
உருண்டை யான எலுமிச்சை
உயர்வு மிக்க எலுமிச்சை!

குளிர்ச்சி தரும் எலுமிச்சை
குண்டுப் பழம் எலுமிச்சை!
மஞ்சள் நிற எலுமிச்சை,
மணம் அளிக்கும் எலுமிச்சை!

சர்பத் துடனே சேர்த்துநம்
தளர்வைப் போக்கும் எலுமிச்சை!
சத்து மிக்க எலுமிச்சை,
சாறு நிறைந்த எலுமிச்சை!

உப்பு மிளகாய் உறவினால்
உணவுக்கு உகந்த எலுமிச்சை!
நாவுக் கினிய எலுமிச்சை,
நாங்கள் விரும்பும் எலுமிச்சை!

— மா. குமார் (21,381), வேலூர்.





காந்தியடிகள்

காந்தி மிகவும் நல்லவர்,
கடமை உணர்வு கொண்டவர்!
உலகம் போற்றும் உத்தமர்,
உயர்ந்த குணங்கள் நிறைந்தவர்!

இந்தியாவின் தந்தை யாய்,
எவர்க்கும் இனிய தூயவர்!
தியாக வாழ்வின் சின்னமாய்த்
திகழ்ந்தார் அந்தப் பெரியவர்!

கதர் இயக்கம் தோன்றவே
கார ணமாய் இருந்தவர்!
நாட்டுக்காக உழைத்தவர்,
நமது நெஞ்சில் நிற்பவர்!

— பா. கணேசன் (16,234), விஜய
மாநகரம்.

கவியரங்கம்

ரயில்வண்டி

பெட்ரோல் இல்லா ரயில் வண்டி,
பெரியவர் ஏறா ரயில் வண்டி.


தண்ட வாளம் இல்லாமல்,
தரையில் ஓடும் ரயில் வண்டி.


சிக்கன மான ரயில் வண்டி,
சிறுவர் ஓட்டும் ரயில் வண்டி.

புகையும் கரியும் இல்லாமல்,
புறப்பட சிக்னலும் இல்லாமல்,

வாயால் கூவிக் கொண்டேதான்,
வாண்டுகள் ஓட்டும் ரயில் வண்டி.

— இ. வெங்கடேசன் (7561), மயிலாடு
துறை.





சாலைவிதி

சாலை ஒன்றைக் கடக்கவே
சாடு கின்ற தம்பியே!
பாலை யன்று சாலையும்,
பார்த்துச் செல்வாய் நம்பியே.

வலமும் இடமும் பார்த்திடு
வண்டி செல்லும் வரிசையாய்
பலவாய்ச் செல்லும் வண்டிகள்
பாய்ந்தால் ஆபத் தல்லவோ?

மேலே பார்த்து நடப்பதால்,
விபத்து வந்து சேருமே,
சாலை விதியை மீறினால்,
சங்க டந்தான் தம்பியே!

— மு. மணிவண்ணன் (21,723),
இராஜபாளையம்.



ஜண்டு பட்டர்

முன்னொரு சமயம், ஜாம் நகரில், ஜண்டு பட்டர் என்னும் பிரபல வைத்தியர் இருந்தார். நோயாளிகள் கூப்பிட்டனுப்பியதும் உடனே ஓடிப்போய் விடுவார். அவர்கள் பணம் கொடுத்தால், வாங்கிக் கொள்வார்; இல்லாவிடில் பேசாமல் திரும்பி விடுவார்.

ஒரு சமயம் நதிக்கரைக்கு அப்பால் இருந்த ஒரு பெண் வியாதியாகக் கிடக்கிறாள் என்று தெரிய, இவர் உடனே நதியில் குதித்து நீந்தி, அடுத்த கரையை அடைந்து, அந்தப் பெண்ணைப் பார்த்து அவளுக்கு மருந்து கொடுத்தார்.

ஒரு சமயம் பர்துவான் மகாராஜா வியாதியாகக் கிடக்க, பம்பாயிலிருந்து பல பெரிய டாக்டர்கள் வரவழைக்கப் பட்டார்கள். ஜண்டு பட்டரும் வரவழைக்கப் பட்டார்.


பம்பாய் டாக்டர்கள் எல்லாரும் மகாராஜாவைப் பரிசோதனை செய்து பார்த்துவிட்டு, அவர் பிழைக்க மாட்டாரென்று சொல்லிவிட்டுத் தங்கள் பீசை வாங்கிக் கொண்டு சென்று விட்டனர். ஆனால் ஜண்டு பட்டர் ஊருக்குத் திரும்பாமல் நோயாளியின் பக்கத்திலேயே இருந்தார்.


மற்ற டாக்டர்கள் அவரைப் பார்த்து, ''நோயாளிதான் பிழைக்க மாட்டாரென்று தெரிகிறதே, ஏன் இங்கேயே உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

அதற்கு பட்டர், ''எல்லோரும் போய்விட்டால் தாம் பிழைக்க மாட்டோம் என்கிற விஷயம் நோயாளிக்குத் தெரிந்துவிடும். அப்பொழுது அவர் மனம் மிகவும் வருத்தப்படும். அவர் வருத்தப்படக் கூடாது. கடைசி வரையில் நம்பிக்கையுடன் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் கூட இருக்கிறேன்'' என்றார்.

ஜண்டு பட்டர், மூன்று மாத காலம், அரசர் இறக்கும் வரை அங்கேயே கூட இருந்தார். கடைசியில் அரசரின் உதவியாளர்கள் அவருக்குப் பெருந்தொகை ஒன்று கொடுக்க முன்வந்தார்கள். ஆனால் ஜண்டு பட்டர் அதை வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டார். ''அரசர் பிழைக்காத போது நான் எப்படி பீஸ் வாங்க முடியும்?'' என்று சொல்லிவிட்டார்.

— நாடோடி —


ஜிம்மி, என் சிலேட்டை. கொஞ்சம் தொடச்சுக் கொடுடன், ப்ளீஸ்!
வெரி குட்! நல்லா தொடை!!
ரொம்ப தாங்க்ஸ்! இந்தா பிஸ்கெட்!
மாலா-


கோகுலம்
பாதாளகங்கையில் பெற்ற வாள்
அடுத்த இதழில்
16 பக்க வண்ணப் படக்கதை
கதை: ஆனந்தி
படம்: வினு

சார் தபால்

நல்ல பலன் விளைபடும்

* ஆகஸ்ட் மாதத்தில் வந்த தங்களின் கருத்தாழ மிக்க தலையங்கத்தில் புத்தகச் சுமையினால் மாணவ, மாணவியர் படும் சித்திரவதையை நன்றாக வெளிச்சம் போட்டுக் காண்பித்துள்ளீர்கள். 'செவிடன் காதில் ஊதிய சங்'காக ஆகி விடாமல், தங்கள் கருத்து போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்து நல்ல பலனை மாணவ சமுதாயத்திற்கு நல்கும் என நம்புவோமாக!

திருமதி தேவனாதன், மதுரை – 3.

* கோகுலத்துப் பிள்ளையார் பிரசாதமாக வழங்கிய இம்மாத 'கோகுலம்' மொத்தத்தில் எங்களுக்கெல்லாம் கிடைத்தற்கரிய ஒரு வரப்பிரசாதமேயாகும்.

— பா. சுந்தரி, விருதுநகர்.

* தம்பி சீனிவாசனின் 'இன்னொரு நாள் வருமா?" பாடல் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய பாடல்.

— சி. ஆர். நாகராஜன், வளவனூர்.

* ஆசிரியர்களின் போராட்ட காலத்தின் போது, விடுமுறையை வீணாகக் கழித்து விட்டு இப்போது திண்டாடும் என் போன்ற மாணவர்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தந்த எங்கள் கோகுலத்துக்கு, முத்தம் ஒன்று தருகிறேன்.

— எஸ். ராஜா, குத்தாலம்.

* ஆகஸ்ட் இதழில் புத்தக மூட்டை பற்றிய தங்கள் தலையங்கம் எங்களைப் போன்ற பெற்றோர்களின் கவலையை நன்கு பிரதிபலிக்கிறது. தங்கள் பள்ளியில் விற்கின்ற புத்தகங்களைத்தான் வாங்க வேண்டும்; நோட்டுப் புத்தகங்களைத்தான் வாங்க வேண்டும் என வர்த்தக ரீதியாகச் சில பள்ளிகள் செயல்படுகின்றன. எவ்வளவு அதிகமாகப் புத்தகங்கள், நோட்டுக்கள் சிறுவர்கள் சுமக்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு சொல்லிக் கொடுக்கின்றனர் என நம்ப வேண்டுமல்லவா?

— எஸ். ஸ்ரீநிவாஸ், சென்னை – 41.

* ஓவியர் கோபுலுவின் வாழ்க்கை வரலாறு முன்னேறத் துடிக்கும் இளம் நெஞ்சங்களை ஊக்குவிப்பதாக உள்ளது. 'முயற்சி திருவினையாக்கும்' என்ற வாசகத்தின் பொருளை உணர முடிகிறது.

— அம்மாபேட்டை, கிருஷ்ணபிரியா, தஞ்சை.

* ஓவியர் கோபுலுவின் குழந்தைப் பருவத்தை அவரே நேரில் சொல்வது போல் சிறப்பாக அமைந்திருந்தது.

— எம். ஏ. சுப்ரமணியன், ஏ. பி. லோகநாதன், முருகன் புதூர், கோபி.

* தனது இளம் பருவத்தில் ஓவியத்தில் அவ்வளவு ஆர்வமாக இருந்ததால்தான் தற்பொழுது ஓவியத் துறையில் கொடி கட்டிப் பறக்கிறார் ஓவியர் கோபுலு!

— ஓ. எஸ். பாலகிருஷ்ணன், திருப்பரங்குன்றம்.

* 'ஒலிம்பிக்ஸ்' தொடர் பள்ளிக் குழந்தைகளுக்குப் பயனுள்ள தொடர். தெரியாத சில விஷயங்களைப் பெரியவர்களும் தெரிந்து கொள்ள முடிந்தது.

—எஸ். நாதன் பாபு, திருவிடைமருதூர்.

* பூதலூர் முத்து அவர்களின் தொடர் 'கதை, 'எல்லா மதத்தினரும் இந்தியரே!' என்ற தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்துமென நம்ப இடமுள்ளது.

— பி. கோவிந்தசாமி (5703), பெதாதம்பட்டி புதூர்.

* 'வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்' கோகுலத்தில் அரும்பியிருக்கும் மற்றொரு பட்டு ரோஜா.

* 'பள்ளியும் படிப்பும்' கதை மிகவும் அருமை. சாந்தியைக் கேலி செய்த உஷாவும், கல்யாணியும் கடைசியில் தலைகுனிவது எங்களுக்கு ஒரு உண்மையை உணர்த்துகிறது.

— எம். சந்தோஷ்ம், டி. புதூர்.

* 'படிப்பு என்பது பள்ளியைப் பொறுத்தது அல்ல; படிக்கின்ற மாணவர்களைப் பொறுத்ததுதான்' என்ற உண்மையை உணர்த்தும் த. கி. இராமசாமி அவர்களின் கதையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

— ஏ. என். மீனாள், சென்னை – 19.

* உயிர்களிடத்தில் மிகவும் அன்பு கொண்ட கண்ணனின் அன்பு மற்றவர்களிடமும் பரவ உதவும் நல்லதொரு கதையைத் தந்துள்ளார் திரு. லூர்து எஸ். ராஜ்.

— ஆர். ராஜா, சென்னை – 17.


* எங்கள் கோகுலத்தில் மாதந்தோறும் எங்களுக்குப் புதுப் புது வண்ணப்படக் கதைகளை எழுதி வரும் ஆனந்தி அவர்களுக்கு ரொம்ப ரொம்ப நன்றி. ஓவியர் வினு அவர்களுக்கும்தான்! சென்ற மாத 'கடலரசனை வென்ற கரையோரக் குருவி' கதை அபாரம், சார்!

— ஏ. எஸ். சதீஷ் ஆறுமுகம் (10,081), தர்மபுரி.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை – 600 032. போன்: 4 31543, 4 34 157.

ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/–; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/–; விமானத் தபால்: ரூ. 135/–.
ஆண்டுச் சந்தா – உள்நாடு: ரூ. 36/–; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/–; விமானத் தபால் ரூ. 270/–.


சுமையைக் குறையுங்கள்
வாழ்வை ஒளிபெறச்
செய்யுங்கள்
வருங்கால சவாலை சமாளிக்க உதவுங்கள் கவர்ச்சிகரமான எலக்ட்ரானிக் உலகத்தின் அனுபவத்தைக் கிடைக்கச் செய்யுங்கள்.
"சிப்-சாப்" நீங்களே செய்யும் எலக்ட்ரானிக் கிட் மூலமாக எலக்ட்ரானிக்ஸை இல்லத்திற்கு கொண்டு வாருங்கள்.
நூற்றுக்கும் மேற்பட்ட பகட்டான பரிசோதனைகள் பாட்டரியால் நடத்தக் கூடியது.
அபாயமற்றது.
சுலபமாக புரிந்து கொள்ளக்கூடிய விளக்க உரையுடன் கூடியது.
மணிக்கணக்காக பேரின்பம்.
ஸால்டரிங் இல்லை.
கனெக்ஷனுக்கு "பேட்டெண்டுடன்" கூடிய விசை.
Rs. 300/-
வரிகள், அனுப்பும் செலவு தனி.
எல்லா பிரசித்தமான புத்தகம் மற்றும் விளையாட்டு பொருள் கடைகளிலும் கிடைக்கும்.
CHIP-CHAP
EDUCATIONAL ELECTRONIC KIT
சிப்-சாப்
எஜுடெக்
33, சர்ச் தெரு, பெங்களூர்-1. போன்-578801
சிப்-சாப் 1988ம் ஆண்டின் தேசிய விருது பெற்றுள்ளது.
adwise

Registered No. TN MS (S) 283
Registered as a Newspaper in Sri Lanka

MAGGI CLUBBERS · FUN LOVERS
MAGGI CLUB

வேடிக்கை உலகில் நுழையுங்கள்—
மேகி கிளப்பில் உறுப்பினர் ஆகுங்கள்!

உறுப்பினர் ஆவதற்கு, 5 காலி மேகி நூடுல்ஸ் பேக்குகளின் முன்புறத்தில் இருந்து, 'Maggi 2-Minute Noodles' என்ற பெயரை வெட்டி எடுத்து எங்களுக்கு அனுப்புங்கள். உங்களை ஆயுள் உறுப்பினராகச் சேர்ப்பதற்கு, ஒரு சூப்பர் மேகி கிளப் உறுப்பினர் பேட்ஜையும், உறுப்பினர் ஆனதற்கான சான்றிதழையும் உங்களுக்கு அனுப்புவோம். கூடவே, இந்த அன்பளிப்புக்களில் ஒன்றைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பு—

—மேகி ஸ்கூல் ஃபன் ஸெட் (ஒரு கால அட்டவணையும், 20 புத்தக லேபல்களும்)
—மேகி டிராஃபிக் விளையாட்டு
—சைனீஸ் புதிர்
—மேகி போஸ்டர் ஸெட்
—டிஸ்னி டுடே காமிக் (ஒவ்வொரு முறையும் புதிய பிரதி)

நீங்கள் விரும்பினுல், ஒவ்வொரு அன்பளிப்புக்கும் 5 ரேப்பர்களை அனுப்புவதன் மூலம் 5 அன்பளிப்புக்களையும் பெற்றுக் கொள்ளலாம். இது மட்டுமல்ல, வருங்காலத்தில் மேகி கிளப்பில் எத்தனையோ பல உற்சாகமான நடவடிக்கைகள் இருக்கும். எனவே, இன்றே உறுப்பினர் ஆகுங்கள்!





இது முக்கியம் !

தனியாக வெட்டி எடுக்கப்பட்ட பெயர்களை, ஸ்டாம்ப ஒட்டிய ஒரு 60 பைசா உறையில் வைத்து, ஒரு காகிதத்தில் இந்த விவரங்களை எழுதவும்:

பெயர், முழு முகவரி, வயது, பையன்/சிறுமி, உறையில் வைக்கப்பட்டுள்ள வெட்டி எடுக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை, நீங்கள் விரும்பும் அன்பளிப்பு.

உங்கள் கடிதத்தை அனுப்ப வேண்டிய முகவரி:
மேகி கிளப், தபால் பெட்டி எண்: 5788, புது தில்லி–110 055

MAGGI
2-Minute noodles

HTA 6026TAM